5 - OCT 1960
MADRAS

திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"



1488

மாலை 3] சார்வரி புரட்டாசி [மணி 1
அக்டோபர், 1960

சென்னை அரசாங்க அறநிலையப்
பாதுகாப்புத் துறை வெளியீடு

பொருளடக்கம்

1. 'திருக்கோயில்' இதழின் இரண்டாண்டுத் தொண்டு
2. பழனி கும்பாபிஷேகம்
3. திருக்களிற்றுப்படியார்
4. மலைநாட்டுத் திருப்பதியநுபவம்
5. நாலாயிரப் பிரபந்தமும் கல்லெழுத்துக்களும்
6. திருமுருகாற்றுப்படை
7. கண்ணனும் கோபியரும்
8. ஸ்ரீ கிருஷ்ணவதார விசேஷங்கள்
9. நற்கலைகளின் பொற்சிகரம்
10. ஆனாய நாயனார்
11. நவதிருப்பதியநுபவம்
12. திருக்கோயில் நிர்வாகத்தினர்—பணியாளருக்கு ஓர் அறிக்கை
13. அறநிலையச்சட்டம்

அட்டைப்படம்—மீனாட்சி சுந்தரேசர் திருமணம்—மதுரைக் கோயில் சிற்பம்.
உள்ளே வண்ணப்படங்கள்—பழனி கும்பாபிஷேக நிகழ்ச்சிகள்.

—○—

சந்தாதார்ர்கட்கு வேண்டுகோள்

அறநிலையங்களும், மற்ற சந்தாதாரர்களும் 1960 அக்டோபர் முதல் தொடங்கும் மூன்றாவது ஆண்டுக் கையொப்பத் தொகை இதுவரை அனுப்பாதிருந்தால் உடனே அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஆசிரியர்

திருக்கோயில்

ஆண்டுக் கையொப்பம் : ரூபாய் பத்து

அறநிலையப் பாதுகாப்பு ஆட்சி அலுவலகம்,
நுங்கம்பாக்கம் ஹைரோடு,
சென்னை-6

1488
5 - OCT 1960

பழனி மலைமேல் உள்ள மின்சார வண்ண ஒளிவிளக்கு
(20 அடி உயரம்)



பழனி கும்பாபிஷேகத்தன்று மாலை தங்க ரதத்தில்
தண்டாயுதபாணி சுவாமி எழுந்தருளல்

யாத்ரீகர் விடுதியைத் திறந்தபோது
அறநிலைய அமைச்சர் விளக்கேற்றுதல்

CONNEMARA PUBLIC LIBRARY
1 OCT 1960
MADRAS

திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 3] சார்வரி புரட்டாசி- அக்டோபர் 1960 [மணி 1

'திருக்கோயில்' இதழின் இரண்டாண்டு தொண்டு

'திருக்கோயில்' இதழ் துவக்கப் பெற்று, இரண்டு ஆண்டுகள் நிறைந்து மூன்றுவது ஆண்டு இன்று தொடங்குகிறது. சென்ற இரண்டு ஆண்டுகளிலும் 'திருக்கோயிலில்' வெளியிடப் பெற்ற கட்டுரைகள் திருக்கோயில்கள் சம்பந்தமான பல்வேறு பொருள்களை விளக்குவதாக அமைந்தன. சிவத்தலங்கள் 53, வைணவத் தலங்கள் 20, முருகன்தலங்கள் தலங்கள் 15, ஆக 88 தலங்களைப்பற்றிய வரலாறுகள் வெளிவந்துள்ளன. இலங்கையிலுள்ள கதிர்காமம், திருக்கோணமலை, திருக்கேதீச்சுரம், முதலியவைபற்றியும் கட்டுரைகள் வரையப்பட்டுள்ளன.

27 சிவனடியார்களையும், 16 வைணவ அடியார்களையும் 9 முருகனடியார்களையும்பற்றிய கட்டுரைகளும், அம்பிகையைப்பற்றி மூன்று கட்டுரைகளும், நதிகளைப்பற்றி நான்கு கட்டுரைகளும், உருவ தத்துவங்களைப்பற்றி 12 கட்டுரைகளும் வெளிவந்துள்ளன. சைவத்தைப்பற்றியும், சைவ நூல்களைப்பற்றியும் 24 கட்டுரைகளும், வைணவத்தைப்பற்றியும், தசாவதாரம், நவதிருப்பதியனுபவம் மலைநாட்டுத்திருப்பதியனுபவம், கிருஷ்ணாவதார விசேஷங்கள் முதலியவைகளைப்பற்றி 48 கட்டுரைகளும் வெளிவந்திருக்கின்றன.

ஆலயங்கள், ஆலய அமைப்பு, திருவிழாக்கள், திருவாதிரை, திருவோணம், விசாகம், முதலிய திருநட்சத்திரங்களைப்பற்றியும், மாநிலமெங்கும் நடைபெற்ற திருப்பணிகள், நாதசுவர, ஆகம, திருமுறைப் பயிற்சி வகுப்புகள் முதலியனபற்றியும் அவ்வப்போது வெளியிடப்பட்டுள்ளன. இவைகளின் விவரம் கீழே காண்க :—

1. சிவத்தலங்கள்

1, சிதம்பரம். 2. திருக்குற்றாலம். 3. மதுரை. 4. காஞ்சீபுரம். 5. இராமேசுவரம். 6. திருநெல்வேலி. 7. திருவாரூர். 8. கும்பகோணம். 9. திருவண்ணாமலை. 10. திருச்செங்கோடு. 11 திருமயிலை. 12. திருக்கழுக்குன்றம். 13. திருப்பாதிரிப்புலியூர். 14. திருப்புகலூர். 15. சீகாழி. 16. திருப்புள்ளிருக்குவேளூர். 17 திருச்சிராப்பள்ளி. 18. திருமுக்கீசுவரம். 19. பிள்ளையார்பட்டி. 20. திருப்புத்தூர். 21. பவானி. 22. திருவெஞ்சமாக்கூடல். 23. கருவூர். 24. திருமுருகன்பூண்டி. 25 அவிநாசி. 26. பேரூர். 27. திருவானைக்கா. 28. சிவாயமலை. (இரத்னகிரி) 29. திருக்கடம்பந்துறை. 30 ஈங்கோய்மலை. 31. திருஎறும்பியூர் 32. உய்யக்கொண்டான் மலை. 33. திருப்பராய்த்துறை. 34. திருப்பாண்டிக்கொடுமுடி 35. திருநெடுங்களம். 36 திருவாலங்காடு. 37. திருப்பாற்றுறை. 38. திருவல்லம். 39. திருவிரிஞ்சை. 40 திருஅறையணி நல்லூர். 41. வாழைத்தோட்டத்தய்யன் கோயில் 42. திருஏடகம். 43. திருவலிதாயம். 44. திருவாதவூர். 45. கங்கைகொண்ட சோழபுரம் 46. திருஆப்பனூர். 47. திருவொற்றியூர். 48. திருவான்மியூர். 49. மொக்கணீச்சுரம், 50 திருப்பூவணம். 51. ஓசூர். 52. திருக்கேதீச்சரம். 53. திருக்கோணமலை.

2. விஷ்ணுத்தலங்கள்

1. திருவரங்கம். 2. அழகர்கோயில். 3. காஞ்சிபுரம். 4. ஸ்ரீவில்லிபுத்தூர். 5. திருக்குடந்தை. 6. வானமாமலை. 7. திருஎவ்வுளூர். 8. திருவல்லிக்கேணி. 9. திருக்கடன்மல்லை. 10. திருவயிந்திரபுரம். 11. காழிச்சீராமவிண்ணகரம். 12. உறையூர். 13, திருக்கோஷ்டியூர். 14. காரமடை. 15. உத்தமர்கோயில். 16. திருவெள்ளறை. 17. திருக்கடிகை (சோளிங்கர்) 18. திருமோகூர். 19. பள்ளிகொண்டை. 20. திருநீர்மலை.

3. முருகத்தலங்கள்

1. பழநி. 2. திருப்பரங்குன்றம். 3. குமரகோட்டம். 4. திருச்செந்தூர். 5. திருவேரகம். 6. திருச்செங்கோடு. 7 திருத்தணி. 8. திருப்போரூர். 9. மயிலம். 10. திருமலை. 11. குமார

பழனி கும்பாபிஷேகம்

ஸ்ரீபழனியாண்டவர் திருக்கோயிலின் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் 26-8-60 முதல் 29-8-60 வரை கோலாகலமாக நடைபெற்றது. 26-8-60 வெள்ளிக்கிழமை கணபதி ஹோமத்துடன் ஆரம்பமாயிற்று. அன்றுதான் விநாயக சதுர்த்தி ஆதலால் மிகவும் விமரிசையாக யாககாரியங்கள் தொடங்கப்பெற்றன. பழனி ஊருக்குள் இருக்கும் பட்டத்து விநாயகர் கோயிலில் சிறப்பான அபிஷேகங்கள் செய்து விநாயகப்பெருமானையும் நன்கு அலங்கரிக்கப்பட்ட புஷ்ப விமானத்தில் யானைகள், விருதுகள், வாணவேடிக்கைகள் முதலியவைகளுடன் முதன் முதலாக ஊர்வலமும் நடைபெற்றது. அக்காலத்திவ் அரசர்கள் பட்டத்திற்கு வந்ததும் இந்த விநாயகர் கோயிலில் வழிபாடு செய்த பின்னரே தங்கள் ஆட்சியைத் துவக்குவது வழக்கம் என்று கூறப்படுகிறது. பழனியாண்டவர் மகா கும்பாபிஷேக மகோற்சவமும் பட்டத்து விநாயகர் வழிபாட்டுடனும் சிறந்த ஊர்வலத்துடனும் விநாயக சதுர்த்தி தினத்தன்று ஆரம்பிக்கப் பெற்றது இந்த கும்பாபிஷேகத்திற்கு ஒரு தனிச்சிறப்பு.

27—8—60 சனிக்கிழமை அதிகாலையில் சிவாசாரியர்களும், இறைபணியில் ஈடுபட்டுள்ள பண்டாரக்கோஷ்டியினரும் சண்முக நதியில் ஸ்நானம் செய்து தீர்த்த கும்பங்களைத் தலையில் சுமந்துகொண்டு ஊருக்குள்ளிருக்கும் ஸ்ரீமுத்துக்குமாரசுவாமி கோயிலுக்கு வந்து கும்பங்களை இறைவன் முன்னிலையில் வைத்துப் பூஜைகள் செய்தனர். பிரதான ஆச்சாரியராகிய சிவராஜபண்டிதர் முகப்பில் பழனியாண்டவர் உருவம் அமைக்கப்பெற்ற பொற்குடத்தில் தீர்த்தம் எடுத்து வந்தார். மற்றவர்கள் வெள்ளிக்கும்பங்களி

வயலூர். 12. குன்றக்குடி. 13. சென்னிமலை. 14. மருதமலை. 15. திருவிரிஞ்சிபுரம்.

4. சிவனடியார்கள்

1. சம்பந்தர். 2. அப்பர். 3. சுந்தரர். 4 மணிவாசகர். 5. காரைக்காலம்மையார். 6. சேரமான் பெருமாள் நாயனார். 7. திருமூலர். 8. ஐயடிகள் காடவர்கோன். 9. திருநாளைப்போவார். 10 அப்பூதியடிகள். 11. சண்டேசுரர். 12. தொகையடியார். 13. திருநீலகண்டர். 14. இயற்பகையார் 15. இளையான்குடிமாறர். 16. கருவூர்த்தேவர். 17. மெய்ப்பொருள் நாயனார். 18. விறன்மிண்டர். 19. அமர்நீதி நாயனார். 20. எறிபத்தர். 21. ஏனாதி நாதர். 22. கண்ணப்பர். 23. குங்கிலியக்கலயர். 24. மானக்கஞ்சாறர். 25. பட்டினத்தார். 26. அரிவாட்டாயர். 27. தாயுமானவர்.

5. விஷ்ணு அடியார்கள்

1. நம்மாழ்வார். 2. திருமங்கையாழ்வார். 3. பெரியாழ்வார். 4. ஆண்டாள். 5 முதல் 7 வரை முதல் ஆழ்வார் மூவர். 8. குலசேகராழ்வார். 9. திருமழிசையாழ்வார். 10. தொண்டரடிப்பொடியாழ்வார் 11. திருப்பாணாழ்வார். 12. மதுரகவி ஆழ்வார். 13. மீராபாய். 14. இராமதாசர். 15. கிருஷ்ணசைதன்யர். 16. அழகிய மணவாளதாசர்.

6. முருகன் அடியார்கள்

1. அருணகிரியார். 2. நக்கீரர். 3. குமரகுருபரர். 4. இராமலிங்க அடிகள். 5. சிதம்பர சுவாமிகள். 6. சம்பந்த சரணாலயர். 7. பகழிக் கூத்தர். 8. பாம்பன் சுவாமிகள். 9. சிவப்பிரகாசர்.

7. அம்பிகைகள்

1. கன்னியாகுமரி. 2. மீனாட்சியம்மை 3. காமாட்சியம்மை

8. ஆறுகள்

1. காவிரி. 2. தாம்பிரவர்ணி. 3. பாலிநதி. 4. வையை

9. விழாக்கள்

1. நவராத்திரி. 2. கந்தசஷ்டி 3 திருக்கார்த்திகை. 4. வைகுண்ட ஏகாதசி. 5. திருவாதிரை. 6. மகா சிவராத்திரி. 7. விநாயக சதுர்த்தி. 8. திருவோணம். 9. அண்ணாமலைதீபம். 10. பிரதோஷம்.

10. உருவதத்துவம்

1. விநாயகர். 2. விஷ்வக்சேனர். 3. ஆனந்தக் கூத்து. 4. அறிதுயில் அமர்ந்த கருணைமா முகில் 5. முருகன். 6. இராதாகிருஷ்ணன். 7. அருளாளப்பெருமாள். 8 நந்திதேவர். 9. சிவலிங்கம். 10. மச்சாவதாரம். 11. கூர்மாவதாரம். 12. தட்சிணாமூர்த்தி. 13. வராக அவதாரம். 14. நரசிம்மாவதாரம் 15. கருடாழ்வார். 16. வாமனாவதாரம். 17. பரசுராமாவதாரம். 18. இராமாவதாரம். 19, பலராமாவதாரம். 20. கிருஷ்ணாவதாரம்.

லும் பித்தளைச் செம்புகும்பங்களிலும் நூற்றுக்குமேற்பட்ட குடங்களில் தீர்த்தம் கொண்டுவந்தனர். உள்ளூரிலிருந்தும் வெளியூரிலிருந்தும் ஏராளமான மக்கள் முத்துக்குமாரசாமி கோயில்முன் கூடியிருந்தனர். தீர்த்தக்குடங்களுடன் பண்டிதர் குழாமும், பண்டாரக்கோஷ்டியினரும், மேளதாளங்களுடன் ஆலயத்தை வலம்வந்து கோயிலின்முன் பிரதான ஆச்சாரியார் தங்கக்குடத்துடன் யானைமேல் அமர்ந்துகொண்டும், மற்றவர்கள் பக்கங்களிலும் முன்னும் பின்னுமாக ஊர்வலம் தொடங்கிற்று. காவலர் படை, சாரணர் படை, தேவஸ்தானத்தைச் சேர்ந்த விடுதியிலுள்ள ஏழை மாணவர்கள் தூய உடைகளுடன் அணிவகுத்து முன் வரிசையில் சென்று தெருக்களில் மக்கள் ஒழுங்காக நின்று பார்க்கவும், ஊர்வலத்துடன்கூடி வரவும் உதவி புரிந்தனர். முன்னே தேவஸ்தான விருதுகளும், மேளதாளங்களும் செல்ல அதையடுத்து தேவாரக் கோஷ்டியினரும் அடியார்களும் சென்றனர். அதிகாலையில் தொடங்கிய ஊர்வலம் முக்கியமான வீதிகள் வழியே சென்று மலை உச்சியை அடைவதற்கு உச்சிவேளையாயிற்று. பல்லாயிரக்கணக்கான மக்கள் இக் கண்கொள்ளாக் காட்சியைக் கண்டு களித்ததோடல்லாமல் ஏராளமான மக்கள் ஆரம்பம் முதல் முடிவுவரை கூடவே சென்றனர். அன்று பூர்வாங்க காரியங்களும் கடஸ்தாபனம் யாக பூஜை முதலியனவும் நடைபெற்றன. அன்று காலை ஊர்வலத்தில் ஆணையர், துணை ஆணையர், உதவி ஆணையர், தர்மகர்த்தக் குழுவினர், இறைபணியாளர் மற்றும் உள்ளூர் வெளியூர் பிரமுகர்கள் கலந்துகொண்டதும், இரவு கடஸ்தாபனம் யாகபூஜை முதலியவைகளில் மேற்படியார்களுடன் சர். பி. டி. இராஜன் முதலியோரும் பங்குகொண்டது குறிப்பிடத்தக்கது.

28-8-60 ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் அடிவார விநாயகர், மீனாட்சிசுந்தரேசுவரர் ஆலயங்களிலும், படிக்கட்டில் உள்ள விநாயகர், வள்ளியம்மை, சுப்பிரமணியர், சப்தகன்னியர், இடும்பன், கும்பினிவேலவர், குராவடிவேலர், சர்ப்ப விநாயகர், கீர்த்தன விநாயகர், கைலாசநாதர், மலைக்கொழுந்தீசுவரர்,நவவீரர்கள், முதலிய மூர்த்திகளுக்கெல்லாம் கும்பாபிஷேகம் நடைபெற்றது. குரா வடிவேலருக் கும்பாபிஷேகம் செய்த நேரம் சிக்கல்சிங்கார வடிவேலருக்கு கும்பாபிஷேகம் நடைபெற்ற நேரமாகவே அமைந்தது இறைவனுடைய திருவருட் செயலேயாகும். அன்று இரவு அஷ்டபந்தனம், பிம்பசுத்தி, ரக்ஷாபந்தனம் முதலியவை நடைபெற்றன. கனம் அமைச்சர் உயர்திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் மலையடிவாரத்தில் அமைக்கப்பெற்ற அழகிய கும்பாபிஷேக நினைவு யாத்ரீகர் விடுதியைத் திறந்துவைத்தார்கள். அன்றிரவு தேவஸ்தானச் சார்பில் மாயவரம் அன்னதான சிவம் சங்கக் குழுவினர் யாத்ரீகர்களுக்கு சாம்பார் சாதம், தயிர் சாதம் 3விநியோகம் செய்த இடத்தில் அமைச்சர் அவர்கள் அந்த விநியோகத்தைத் தொடங்கி வைத்தனர். 28-8-60 இரவு ஆரம்பித்த விநியோகம் ஓய்வின்றி 29-8-60 இரவுவரை நடந்து கொண்டேயிருந்தது. சுமார் 35000 மக்களுக்குமேல் இதனால் பயனடைந்தனர்.

29-8-60 திங்கட்கிழமை அதிகாலையில் யாக பூஜை, மகாபூர்ணாகுதிக்குப்பின் சிம்மலக்கினத்தில் இராஜகோபுரம் ஸ்வர்ண ஸ்தூபி, மூலவர், தங்க விமானம், உற்சவர், நடராஜர் விமானங்களுக்கும் மூர்த்திகளுக்கும் மகாகும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. மலைமேல் உள்ளவர்கள் மாத்திரமின்றி ஊரில் பல பாகங்களிலிருந்தும் ஏராளமான மக்கள் கும்பாபிஷேக வைபவத்தைக் கண்டு களித்தனர். அமைச்சர்கள் திரு எம். பக்தவத்சலம், திரு பி. கக்கன் முதலியவர்களும், திரு. ஓ. வி. அழகேசன் முதலியோரும் வந்திருந்தனர். கும்பாபிஷேகத்திற்கு முன் மலைக் கோயிலின் மேல் புதிதாக அமைக்கப்பெற்ற 20 அடி உயரமுள்ள மின் ஒளி ஓங்காரத்தோடு கூடிய வேலாயுதத்தை அமைச்சர் அவர்கள் ஒளி ஏற்றிவைத்தார்கள்.

அன்றுபகல் 11 மணி முதல் 1-30-மணி வரை மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. 100 படிபால், 720 புட்டி பன்னீர், மற்றும் ஏராளமான அபிஷேகத்திரவியங்களோடு மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. இதற்குரிய செலவில் பெரும்பாகம் சென்னை கிடங்குத் தெரு ஜவுளி மொத்த வியாபாரி திரு. அரங்கைய செட்டியார் அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். சிறு பகுதியை ஏனைய சில முருகனடியார் ஏற்றனர்.

எல்லா மூர்த்திகளுக்கும் அன்று புது வஸ்தி ரங்கள் சாத்தப்பெற்றன. இதற்குரிய செலவு முழுமையும் சென்னை கிடங்கு தெரு ஸ்ரீ பாலசுப்பிரமணியம் டிரஸ்டாரும், கமால் பிரதர்ஸும் ஏற்றுக்கொண்டனர். மூலமூர்த் திக்கு பட்டு வஸ்திரத்தில் மேலும் கீழும் உள்ள கரைகளில், சிவப்பு, பச்சை, நிறங் களுடன் முருகா முருகா என்ற எழுத்துக்கள் பூராவும் அமைக்கப்பெற்றிருந்தது மிகவும் அழகாக இருந்தது.

இந்த கும்பாபிஷேகத்தின் இன்னொரு தனிச்சிறப்பு வேறு எந்த யாகசாலையிலும் உபயோகிக்கப்பெறாத பல சமித்துக்கள் மிக வும் நல்லமுறையில் சேகரிக்கப்பெற்று, நன் ருக சீவி இழைக்கப்பெற்றிருந்ததாகும். சாதா ரணமாக சுமார் 15 வகை சமித்துக்கள்தான் பெரிய யாகசாலைகளில்கூட உபயோகிக்கப் பெறுவது வழக்கம். இந்த யாகசாலையில் 31 வகை சமித்துக்கள் உபயோகிக்கப்பட் டன. பழவகைகளும், இதர சாமான்களும் ஏராளமாகப் பயன்படுத்துப்பட்டன. யாக சாலை பூஜை பூர்த்தியானவுடன் 33 குண் டங்கள் அமைத்துச் செய்யப்பட்ட இந்த யாகத்தின் தத்துவங்களை மகாமகோபாத்யாய சிவத்திரு. ஈசானசிவாசாரியார் அவர்கள் சுருக்கமாகச் சொல்லி விளங்கவைத்தார்கள். அன்று இரவு தங்கரதத்தில் தண்டாயுத பாணி சுவாமி எழுந்தருளி மலைப்பிரகாரத் தில் சுற்றிவந்தபோது பல்லாயிரக்கணக்கான மக்கள் பங்குகொண்டனர். அந்த சமயத் தில் அம்மாபெருங்கூட்டத்தைச் சமாளிப் பதும் மிகவும் கடினமாக இருந்தது. தங்க ரத ஊர்வலம் பூர்த்தியானவுடன் நல்ல மழை பெய்தது. சுகாதாரத் துறையினர் நல்ல வசதிகள் செய்திருந்தனர். காவலர் படை யினர், நகர மன்றத்தினர், மற்றும் சம்பந்தப் பட்ட அரசாங்க ஊழியர்களும், ஏனைய அடி யார்களும் நன்கு ஒத்துழைத்தனர்.

கும்பாபிஷேக நினைவாக மலர் ஒன்று அழகிய படங்களுடன் ஒன்றரைரூபாய் விலை யில் வெளியிடப்பெற்றது. கீழ்க்கண்ட நூல்களும் பொருள்களும் பழனியாண்டவர் கும்பாபிஷேக நினைவாக ஆலயத்தில் விற்கப் படுகின்றன:—

1. பழனி பிள்ளைத்தமிழ் (உரை யுடன்)
2. முருகன் பாமாலைத்திரட்டு
3. கந்தர் அனுபூதி-5.நயாபைசா
4. பழனியாண்டவர் படம் பெரியது-ரூபாய் ஒன்று. சிறியது—25 நயாபைசா.
5. வெள்ளிப் பதக்கம் ரூ. 3
6. தங்கப் பதக்கம் ரூ. 25

பழனியாண்டவர் கும்பாபிஷேக நினைவாக விபூதிப்பைகள் துணியிலும் காகிதத்திலும் இலட்சத்துக்கு மேலாக இனமாக வழங்கப் பெற்றன.

இந்த கும்பாபிஷேகத்தையொட்டி ஒவ் வொரு நாளும் நாதசுர இன்னிசை நிகழ்ச்சி களும், சமயச் சொற்பொழிவுகளும் நடை பெற்றன கும்பாபிஷேக தினத்தன்று இரவு ஸ்ரீமதி கே. பி. சுந்தராம்பாள், எம்.எல்.சி. அவர்கள் சுமார் 4 மணி நேரத் துக்கு மேலாக முருகன் துதிப்பாடல்களை மிக வும் உருக்கமாகவும் உணர்ச்சியோடும் பாடிய போது பெரும் மழையையும் பொருட்படுத் தாமல் ஏராளமான மக்கள் கூடிக் கேட்டுக் களித்தனர். யாகசாலை மண்டலாபிஷேகம் பூர்த்தியாகும்வரை அப்படியே பாதுகாப்பில் வைக்கப்பெற்றிருக்கிறது. 17-10-60 சோம வாரம் ஐப்பசி விசுவன்று மண்டலாபிஷேகப் பூர்த்தி விழா நடைபெறும். அதுவரையில் ஒவ்வொரு நாளும் நடைபெறும் மகாபிஷே கத்திற்கு ரூ. 51-க்குக் குறையாமல் எவ் வளவு வேண்டுமானாலும் கொடுக்கலாம். அதிகமாக வரும் தொகை பூர்த்திவிழாவன்று நடைபெறும் சிறப்பான மகாபிஷேகத்திற்கு உபயோகிக்கப்படும். இதில் பங்குகொள்ள விரும்புவோர் பழனி தேவஸ்தான நிர்வாக அதிகாரிக்கு உடனே பணம் அனுப்பலாம்.

இந்த கும்பாபிஷேகத்தை யொட்டிய நிகழ்ச்சிகளைக் காட்டும் சில படங்களை இந்த இதழில் காணலாம்.

—○❋○—

திருக்களிற்றுப்படியார்

திரு. க. வச்சிரவேல் முதலியார், B.A., L.T.

(தொடர்ச்சி)

அணைந்தோர் தன்மை

மேலே, தியானம், பூசை முதலிய யாவும் மெய்யன்பு உள்ளபொழுதே பயன்தரும் எனக் கூறினர் ஆசிரியர். இனி, முதற் பொருளைத் தலைப்பட்டு உணர்ந்தோர்க்குப் பழைய பழக்கம் பற்றி உளதாகும் உலகப் பற்றை மாற்றுவதற்குச் சிறந்த சாதனம் மெய்யன்பு ஒன்றே எனவும், அது மெய் யுணர்வின் முதிர்ச்சி நிலையே ஆம் எனவும், மெய்யயுணர்ந்தோர் அன்புநிலையைத் தலைப் படின் அல்லது இன்புறு நிலையை எய்தார் எனவும் விளக்குகின்றார்;—

எல்லா அறிவுகளின் தாற்பரியம் என்னறிவு
செல்லும் இடத்தளவும் சென்றிருந்தேன்—வல்லபடி
வாதனையை மாற்றும் வகையிதுவே மற்றவற்றுள்
ஏதமறக் கண்ட திது. (ருசு)

எல்லாக் கலை ஞானங்களின் முடிந்த கருத்தையும் என்னறிவு கழியும் இடமாகிய அருணிலைவரை சென்று இணைத்தறிந்தேன். அறிந்தபோது அவற்றுள் ஐயந்திரிபுஅறத் துணியப்படும் முடிபு, அவரவர் ஆன்ம வளர்ச்சிநிலைக்குத் தக்கபடி புறச்சாதனங் களை உடன்கொண்டு மலவாதனையை மாற்று தற்கு அகச்சாதனமாய்ச் சிறந்து நிற்பது மெய்யன்பு ஒன்றேயாம் என்றபடி.

அறிவுகள் என்றது கலைஞானம் எனப் படும் மெய்யறிவு நூல்களை. தாற்பரியம்—சொல்லினும் மேம்பட்டது அதன் பொருள்; அதனினும் மேம்பட்டதாகிய, சொல்லுவா னது கருத்து. தத்பர சம்பந்தம் உடையது தாற்பரியம்; தத்—அது; பரம்—மேம்பட் டது. ஏதம்—குற்றம், இங்கு அறியாமை, ஐயம், திரிபு என்பவை.

பின்வரும் பாட்டு முத்திநெறிக்கண் உள்ள அறிவுநிலை, அன்புநிலை, இன்புறு நிலை என்னும் படிநிலைகளை ஓர் உவமையின் வைத்து விளக்குகின்றது:-

வித்தும்அதன் அங்குரமும்
போன்றிருக்கும் மெய்ஞ்ஞானம்;
வித்துமதன் அங்குரமும்
மெய்யுணரில்—வித்ததனில்
காணாமை யாலதனைக்
கைவிடுவர் கண்டவர்கள்
பேணாமை யால் அற்றார் பேறு. (ருஎ)

பயிரின் வளர்நிலை வித்தும் அதன் முளையாகிய நாற்றும் என இருவகைப்படும். உணரும்போது, வித்தும் நாற்றும் தனித் தனித் தம் தம் பயன்களை விளைக்கும் பயனு டைப் பொருள்களே ஆம். நாற்றின் பய னாகக் கிடைப்பது விளைவு. மெய்ஞ்ஞானம் அறிவு நிலை, அன்புநிலை என இருநிலைகளை யுடையது. மெய்ஞ்ஞானத்தின் பயன் சிவயோகம்.

இவற்றுள், அறிவுநிலையாவது உயிர் களின் உணர்வின் முதலாகிய முதற்பொரு ளின் உண்மையைத் தெளிய உணர்தல். இவ் வுணர்வுநிலை வித்துப்போன்றது. இந்நிலை யினையே 'சிறப்பென்னும் செம்பொருள் காண்ப தறிவு' எனத் திருவள்ளுவர் குறித்தனர். இனி, அன்பு நிலையாவது முதற்பொருள் உயிரின் சார்பாயிருந்து உபகரித்து வருதலை மறவாது உணர்தல்பற்றி அதன்மாட்டு நிகழும் இச்சை மீதூர்தல். இதுவே வித் தின் விளைந்த அங்குரம் போன்றது. இந் நிலையினையே திருவள்ளுவர் "சார்புணர்ந்து சார்புகெட ஒழுகின்" என நிட்டையின் இயல்பு கூறுமிடத்துக் குறித்தனர்.

இனி, மெய்ந்நூல் முடிவுகளை உணரப் புகுந்த ஆசிரியர்களுட் சிலர் வித்துப்போன்ற ஞானம் ஒன்றனையே கைக்கொண்டு முளை போன்ற அன்பு அதன்பயன் என்பதனை உண ராமையால். அன்பினைக் கைவிடுவர்; அன்பு மெய்யுணர்வின் பயனாதலைக் கண்டவர்களுள் ளும் சிலர், நாற்றினைப் பேணி வளர்க்காமை யால் விளைவை இழந்துவிடுவார்போல, அன்பு

நெறியில் உறைந்து நில்லாமையால் சிவப் பேறு எனப்படும் சிவபோகத்தை இழந்தனர் என்றபடி.

மெய்யுணர்ந்து, இடையருப் பேரன்பால் மலவாதனையை மாற்றிக்கொள்வோரே இன்புறு நிலையாகிய சிவப்பேற்றினைப் பெறுவர் என்பது கருத்து. இவ்வருமைத் திருப் பாட்டின் பொருளை

"அன்புசிவம் இரண் டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவதாரும் அறிகிலார்
அன்பே சிவமாவதாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே"

என்னும் திருமந்திரப் பொருளோடும்,

"ஞானம் ஈசன்பால் அன்பே என்றனர் ஞானம் உண்டார்" என்னும் திருத்தொண்டர் புராணத்தின் துணிபொருளோடும் இணைத்து உணர்தல் பொருளைத் தெளிவிக்கும்.

மேற்கூறியபடி அன்புநிலை கைவரப்பெற்ருர்க்குப் பேரின்பமாய் அனுபவிக்கப்படும் முதற்பொருள், தன்னை உணர்வார் உணர்வின் விருத்தியைத் தன்மாட்டு அடங்கக் கொண்டு வியாபித்து நிற்பது. ஆதலால், அது சொல்லுக்கு அடங்காத இயல்பினது என்கின்ருர்:—

"ஒன்றன திரண்டன் றுளதன் றிலதன்று
நன்றன்று தீதன்று நானென்று—நின்ற
நிலையன்று நீயன்று நின்னறிவும் அன்று
தலையன் றடியன்று தான். (கஅ)

சிவானந்த அனுபவநிலையாவது ஆன்ம சைதன்யமும் சிவசைதன்யமும் பிணைந்து பிரிப்பின்றி நிற்கும் நிலை ஆதலால், அங்குப் பொருள் ஒன்று அன்று. இரண்டாதலும் இன்று. காண்போனும் காட்சியும் அடங்கியநிலை ஆதலின், உளது அல்லது இலது எனக் கூற ஒண்ணுதது. முக்குணங்களையும் கடந்தநிலையாதலின், சத்துவகுண விருத்தியாகிய இன்பமும் அன்று, இராசத குண விருத்தியாகிய துன்பமும் அன்று. யான் பிரமம் என நின்ற நிலையும் அன்று; பசுவும் அன்று; பசுவின் உணர்வும் அன்று. அடிமுடி எனக் காலத்தானும் இடத்தானும் வரம்புபட உணரவருவதும் அன்று.

இன்புறு நிலை எனப்படும் பரமுத்தி நிலைக்கண் கருவி கரணங்களின் தொழிற்பாடு இல்லை; ஆதலால் ஆங்குச் செயல் செய்யப்படவில்லை. ஆயினும், ஆன்மாவின் ஞான இச்சா கிரியா சத்திகள் முதற்பொருளை உணர்ந்தும் விழைந்தும் செறிந்தும் விடயித்துப் பேரின்பத்திற்குக் காரணமாய் நிகழ்தலின் அந்நிகழ்ச்சி செய்யாச் செயல் எனக் கூறப்படுகின்றது மேலும், தாய்ப்பாலை நுகரும் குழந்தைக்குத் தாய் தன் முலையைத் தந்து அணைத்து உபகரித்தால் அன்றிக் குழந்தைக்கு நுகர்ச்சி கூடாது. அதுபோல, முத்திநிலையினும் உயிரைத் தன்னையே விடயிக்குமாறு அதன் அறிவிச்சை செயல்களை முதல்வன் உடனின்று செலுத்தி உபகரித்தால் அன்றிப் பேரின்ப அனுபவம் நிகழாது. இக்கருத்தைத் "தாயாய் முலையைத் தருவானே" எனவரும் திருவாசக உருவகத்தானும், "பத்தியாய் உணர்வோர் அருளவாய் மடுத்துப் பருகுதோ(று) அமுதம் ஒத்(து) அவர்க்கே தித்தியா இருக்கும்...இவர்" என்னும் திருவிசைப்பாவானும் தெளியலாம். பரமுத்திநிலையில் ஆன்மாவின் அறிவிச்சை செயல்கள் வியாபகமாக நிகழப்பெற்று முதற்பொருளை விடயிக்கும் என்னும் இக்கருத்துப் பற்றியே திருவள்ளுவரும் பரமுத்திநிலையைச் "சார்பு உணர்ந்து சார்புகெட ஒழுகின்" என ஒழுக்கமாக வைத்துக் கூறினர். இவ்வடிப் படை உண்மையைப் பின் கூறுகிருர் ஆசிரியர் :—

பரமுத்திநிலையை முதல்வன் அருளால் எய்தாமை உளதாம்போது,. முத்தர்கள் தம்மை அவன் அருளால் அன்றி ஒன்றை அறிந்து இயற்ருமையாகிய சும்மா இருத்தல் என்னும் சாதனத்தைக் கொள்ளுதல்வேண்டும். கொண்டால் அவாவை வளர்க்கும் ஆணவமலம் தன் வலிகெடும்.

செய்யாச் செயலைஅவன்
செய்யாமை கண்டுதனைச்
செய்யாச் செயலிற்
செலுத்திஞல்—எய்யாதே
மாணவக அப்பொழுதே
வாஞ்சைக் கொடிவளர்க்கும்
ஆணவமும் அற்ற தறி. (ருக)

செய்யாச் செயல் இரண்டனுள் முன்னது சார்புணர்ந்து சார்புகெட ஒழுகல் எனப்பட்ட சிவபோகநிலை. பின்னையது அறிவொன்றற நிற்றல் எனக்கந்தர் அனுபூதியிற் கூறப்பட்ட சும்மா இருத்தல். இது சிவயோகம் எனப் படும். முன்னையது சாத்தியம்; பின்னையது,

அதுகூடாதபோது செய்யப்படும் சாதனம். அவன் (தனைச்) செய்யாச் செயலைச் செய் யாமைகண்டு, தனை எய்யாது வருந்தாது செய் யாச் செயலிற் செலுத்தினல், ஆணவமும் அற்றது அறி எனமுடிக்க. ஆணவமும் என்ற உம்மை மாயேய கன்ம வர்தனைகளும் அறும் என்பது தோன்றநிற்கும் எதிரதுதழீஇய எச்சம்.

இங்குக் கூறியபடி செய்யாச் செயலில் செல்லும் சிவயோகியர்க்கு காலம், திக்கு, ஆசனம், தேயம், முதலியவை எதுவும் இருக்கலாம்; இஃது ஆகும் இஃது ஆகாது என்னும் விதிவிலக்குக்கு இவர்கள் அப்பாற் பட்டவர்கள். (கo)

இதுகாறும் கூறியவற்ருல் முத்தர்கள் நிற்கும்நிலை மூன்றனுள் ஒன்ருகவே அமை யும்; மெல்வினை, வல்வினை, ஆதாரயோகம், சிவஞானம் என்பவற்றுள் யாதேனும் ஒன் றைப் பற்றி அன்புசெய்தல்; அல்லது எதனை யும் செய்யாது சும்மா இருத்தலாகிய நிரா தாரயோகம்; அன்றி, மெய்ப்பொருளை உணர்ந்து நிட்டையில் இருத்தல். இம் மூன்றனுள் ஒன்றைச் செய்யாது உலகைக் கண்டு உண்டு உயிர்வாழும் மனிதர்கள் செயல் பிறப்பிற்கு ஏதுவாவதாகும். (கக, கஉ).

துறவு நிலைக்கண் சென்று ஈதல் முத லிய நல்வினைகளை விட்டிருந்தாலும், இல்லத் தில் இருந்து அதற்குரிய அறங்களைச் செய் தாலும் சிவன் அருள் நிறைவில் அடங்கித் தன்முனைப்பை அகன்ருர்க்கு அன்றி நற் பயன் விளையாது. தன்முனைப்பை இழக்கா தவர்களுக்கு நல்வினையும் பாதகமாய் முடி வதை வைதிக ஞான ஒழுக்கங்கள் பூண்டும் தன்முனைப்பை விடாத தக்கன் செயலில் வைத்து அறிந்துகொள்க. (கங)

தன்முனைப்பு அறுதற்கு நெறியாது என்னில் கூறுகின்ருர் :—

சிவன்முதலே அன்றி முதல்இல்லை என்றும்
சிவனுடைய தென்னறிவ தென்றும்—சிவனவனது
என்செயல தாகின்ற தென்றும் இவையிற்றைத்
தன்செயலாக் கொள்ளாமை தான் (கச)

எனவரும். சிவன் எல்லா முதன்மையும் அறிவும் செயலும் உடையவன்; உயிர் அவன் அடிமை; அவன் அருளால் அறிந்து தொழிற்படுவது என்னும் உண்மையை உணர்ந்து ஒழுகவேண்டும்

மக்கள் சன்மார்க்கஞானத்தின் உண்மை நிலையைக் கடைப்பிடித்து ஒழுகுதற்கு முற்றி லும் பொருந்தும்படி முதற்பொருளின் திரு வுருவையும் திரு அடையாளங்களையும் திருக் கோயில்களில் அமைத்து மெய்ந்நெறியை உணர்த்திவருதலும், மேற்கூறிய நெறிப்படி ஒழுகி, யான் எனது என்னும் செருக்கற்று, சிவமேயாகித் தம் கரணங்கள் சிவகரணங் களாக நிகழப்பெற்ற சுத்தான்மாக்களையே சமயத் தலைவர்களாகக் கொண்டு ஒழுகுதலும் ஆகிய இரண்டும் சிவநெறி ஒன்றற்கே உள்ள தனிச்சிறப்பு என்பதை அடுத்தபாட் டில் விளக்குகின்ருர் :—

இன்றிச் சமயத்தின் அல்லதுமற் றேழையுடன்
ஒன்றுசொலி மன்றத்து நின்றவரார்—இன்றிங்கே
அங்கம் உயிர்பெறவே பாடும் அடியவரார்?
எங்குமிலை கண்டாய் இது. (கரு)

இதன்பொருள் வெளிப்படை.

மன்றம்—திருச்சிற்றம்பலம், அது சாந் தோக்கியம் முதலிய உபநிடதங்களில் குறிக் கப்பட்ட முக்கிய உபசரனையாகிய தகர உபாசனைக்கு உரிய நெஞ்சக் கமலத்தைக் குறிப்பது. முதல்வன் ஏழையுடன் நிற்றல் முதற்பொருள், ஞாயிறும் அதன் ஒளியும் போலத் தானும் தன் அருட்சக்தியும் என இருமையின் ஒருமையும் ஒருமையின் பெருமை யும் உணர்த்தி, தான் விசுவகாரணனுய், பஞ்சகிருத்திய கருத்தாவாய், விசுவாந்தரியா மியாய், விசுவசேவியனுய் நிற்றலைக்காட்டும். அத்திருவுரு முதல்வன் ஓங்காரத்து உள் ளொளியாய், ஸ்ரீபஞ்சாக்கர சொரூபியாய் நிற்குமாற்றையும் பிறவற்றையும் உணர்த் தும் என்பதைத் திருமந்திரம் முதலிய நூல் களில் காணலாம். ஒரு பாதத்தால் முயல கனை மிதித்து மற்றொரு பாதத்தை உயர்த்தி நிற்றல் ஆணவமலத்தின் வலியை மெலிவித்து ஆன்மாக்களின் உணர்வில் அருளொளியை உயர்த்துதற்கு அறிகுறியாகும். எடுத்த பாதத்தைக் குஞ்சித்து, வீசிய கையால் அதனைக் காட்டல் பக்குவான்மாக்களைத் துரிய அருணிலைக்கண் உய்த்தலையும்,

அமைத்தகரத்தால் நில் என்றல், அவற்றை அதீத ஆனந்த நிலைக்கண் உய்த்து இன்புறுத்து மாற்றையும் உணர்த்தும். இங்ஙனம் வேதாந்தத்துப் பெறப்படும் முத்திமுடிபை ஒருதலைப்பட உணர்த்தி நிற்றலை ஆசிரியர் ஒன்றுசொலி (ஒருதலையாய முடிபைச் சொல்லி) நின்றவர் எனக் குறிப்பிட்டார். மேலே வரும் "பாட்டுக்களின் தொகைப் பொருள் கீழே தரப்படுகின்றது:—

இறைவன், பெத்த நிலைக்கண், எல்லாப் பொருள்களும் தங்கும் இடமாகக் கொண்டு (அதிட்டித்து) நிறைந்து நிற்போனாக உய்த்துணரப்படுவன். இவ்வுண்மையை அருளாசான் உணர்த்தத் தெளிந்து, பின்னர்த் தம் உணர்வில், பூவினின்று விரியும் மணம் போல், விளங்கித் தோன்றும் சிவசைதன்னியத்தில் தமது உணர்வு அடங்கி நிற்கச் செய்து சிவத்தின் வயப்பட்டு நிற்போரையே பிறப்பு நிலையில் மாசறு காட்சியை உடைய மெய்யுணர்ந்தோர் எனக் கொள்ளுதல் வேண்டும்.

முதல்வன் தனது ஐந்தொழில் விளைவு பற்றி உலகங் குறியாக விளங்கியும் தன் உண்மைநிலை விளங்காதபடி மறைந்து திருவருளோடு என்றும் உடன் நிற்போன் ஆவன்; அவனை, மெய்யாக உணர்ந்தோர், அவன் நிறைவு நிலையை அதீத நிலையின் நின்று உணர்ந்தும், குருலிங்கம் திருவேடம் என்னும் இடங்களில் அவன் தயிரில் நெய் போல விளங்கித் தோன்றுதலைக் கண்டு துரிய அருணிலையிற்சுட்டியுணர்ந்தும் பேரின்பம். நுகர்வர்; இப்படிப் பரமே பார்த்திருக்கும் அவர், ஒருகால் உலகத்தைப் பார்க்க நேரினும், இறைவன் எல்லாவற்றையும் பற்றி நின்றே அவற்றால் தாக்குண்ணுதிருத்தல்போல, உலகக் காட்சியிற் றுடக்குறூர்.

தாம் அடங்க இந்தத் தலம் அடங்கும் தாபதர்கள்
தாமுணரின் இந்தத் தலமுணரும்—தாமுனியில்
பூமடந்தை தங்காள் புகழ்மடந்தை போயகலும்
நாமடந்தை நில்லாள் நயந்து. (சுஅ)

பொருள் வெளிப்படை.

முதல்வன் மெய்யன்பர்களாய சீவன்—முத்தர்க்கு நனவு நிலையினும் துரிய அருணிலை நிகழும்படி தலையளி செய்து, தான் செய்யும் தன்மைகள் எல்லாம் அவர்கள்பால் விளங்கும்படி வைப்பன். இங்ஙனம் அவன் அருள் செய்தலைத் திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், நம்பிஆரூரர், திருவாதவூர் அடிகள் என்னும் திருநெறித்தலைவர்களுடைய வாய்மொழியாலும் அருள்வாழ்க்கையாலும் நாம் உணரலாம். இவ்வாறு சிவயோகம் என்னும் துரிய அருணிலை நின்றோர் மக்களுக்கு இம்மை மறுமைபற்றி வரும் அச்சத்தைத் தீர்த்து எங்கும் எப்பொருள் பற்றியும் தலைவராய் இயங்கும் பேராற்றல் உடையவர்கள் ஆவார்கள்.

முதல்வன் தன் மெய்யன்பர்க்குத் தன் முதன்மையைக் கொடுத்தலும் பிறர்க்குக் கொடாமையும் ஒருபாற் கோடுதல் ஆகாதோ எனின், ஆகாது. மன்னவன் தன் குடிமக்கள் அனைவரையும் ஓரியல்பாகப் பொது நோக்கான் நோக்காது வரிசையான் நோக்கி அவரவர்க்கு ஆவன செய்வன். அதுபோல, முதல்வனும் உயிர்களின் பக்குவ நிலைக்கு ஏற்றபடி அவற்றைப் பிறப்புநிலை சாதக நிலை, சீவன் முத்தநிலை, பரமுத்தி என்னும் நிலைகளில் வைத்து அருள்புரிவன். ஆதலால், எல்லா உயிர்களும் அவன் அடியார்களே ஆயினும் சீவன் முத்தர்களே ஒப்பற்ற அடியவர்களாய் ஏனையோர்க்குத் தலைவர்களாய், முதல்வன்றன் பிரதிநிதிகளாய் உலகில் வைக்கப்படுவர்.

இம் மெய்யன்பர்கள் உடம்போடுகூடி இருத்தல் பற்றி உலகவின்பத்தை நுகரும்படி நேர்ந்தால், அது முதல்வன் திருவளால் தமக்கு அனுபவமாதலைத் தெளிய உணர்ந்து, அதனைப் பேரின்பமாகவே கொண்டு நுகர்வர். (துன்பங்களையும் பேரின்பமாகவே நுகர்வர்; திருநாவுக்கரசர் நீற்றறையை ஈசன் இணையடி நீழலாக உணர்ந்து ஊனமுறுதிருந்தமை சான்று). ஆதலால், அவர்களுக்கு உலக சம்பந்தம்பற்றிப் பின்னை வினை முளைப்பதும் இல்லை; பேரின்ப நுகர்ச்சிக்கு முடிவு வருவதும் இல்லை; உலகப் பொருள்களால் அவர்கள் தம் நிலையில் தளர்தலும் இல்லை.

(தொடரும்)



பழனி மலைத்தோற்றம்

17 OCT 1960
MADRAS

திருவாவினன்குடிகோயில் திருப்பணி நடைபெறுகிறது

CONNEMARA PUBLIC LIBRARY
11 OCT 1960
MADRAS

பழனி அடிவாரத்தில் கோபுரம் விமானங்கள் போன்ற முகப்புப் பந்தல் அலங்காரம்



பழனி யாத்ரீகர்கள் விடுதியை அறநிலைய அமைச்சர் திறந்து வைத்தல்

மலைநாட்டுத்திருப்பதியநுபவம்

[மகாவித்துவான் திரு. P. B. அண்ணங்கராசார்யசுவாமிகள், காஞ்சிபுரம்]

கீழே திருவண்வண்டூர்ப்பதியை யநுபவித்தோம். அதன் முடிவில் தெரிவித்தபடி இப்போது திருப்புலியூர்ப்பதியை யநுபவிக்க இருக்கின்றோம், இப்பதி, 'குட்டநாட்டுத்திருப்புலியூர்' என்றும் வழங்கப்பெறும். குட்டநாடென்பது மலைநாடே யாகும். இத்தலத்தை நம்மாழ்வாரும் திருமங்கையாழ்வாருமாக இருவர் பாடியுள்ளார்கள். திருமங்கையாழ்வார் சிறிய திருமடலில் "பேராலி தண்கால் நறையூர் திருப்புலியூர்" என்று துணுக்கையாக மட்டும் பாடியுள்ளார். நம்மாழ்வார் மிக அற்புதமான பதிகம் பாடியுள்ளார். அப்பதிகம் அவரது திருவாய்மொழியில் எட்டாம்பத்தில் ஒன்பதாவதாகும். இஃது ஆழ்வார் தாமான தன்மையில் பாடாமல் தோழி பாசுரமாகப் பாடின தென்க. கருமாணிக்க மலைமேல் என்று தொடங்குமது.

திருவாய்மொழி யாயிரத்தில் தோழி பாசுரமாக வரும் பதிகங்கள் மூன்று. நாலாம் பத்தில் ஆறாம் பதிகமான தீர்ப்பாரை யாமினி 1; ஆறாம்பத்தில் ஐந்தாம்பதிகமான துவளில் மாமணி மாடம் 2; மூன்றாவது கருமாணிக்கமலைமேலென்கிற இப்பதிகம். திருவஷ்டாக்ஷர மஹாமந்திரத்தில் ஸாரமானது பிரணவம்; அதுதான் ஓங்காரமென்பது.

அதில் தேறிய பொருள் அநந்யார்ஹத்வமென்பதாம். அதாவது, எம்பெருமானைத் தவிர்த்து வேறொருவர்க்கும் உரித்தாகாதிருத்தல். தோழி பாசுரமான மூன்று பதிகங்களிலும் இதுதான் வெளியிடப்படுகிறது. தீர்ப்பாரையாமினி யென்னும் முதற்பதிகத்தில் வெறியாடலை விலக்கின முகத்தாலே அது வெளியிடப்பட்டது. இரண்டாம்பதிகமான துவளில் மாமணி மாடத்தில் "இனியுமக்காசையில்லை விடுமினோ" என்று பலகாலும் தாய்மாரை நோக்கிச் சொல்லுகிற முகத்தாலே அது வெளியிடப்பட்டது. இப்போது கருமாணிக்கமலை யென்கிற மூன்றாம் பதிகத்தில் அது வெளியிடப்படுகிறவிதம் வெகு ஆச்சரியமானது; அதனை விவரிக்கிறோம் காண்மின்.

பராங்குசநாயகியாகிய தலைமகள் ஒரு மணவாளனை விவாஹம் செய்துகொள்ள வேண்டிய வயது முதிர்ந்து நின்றவளவிலே தாய்தந்தையர் ஸ்வயம்வரம் கோடித்து நகரத்திலே மணமுரசு அறைவிக்க, அஃதறிந்த தோழியானவள் "மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்" என்றும், "அன்றிப் பின் மற்றொருவர்க்கென்னைப் பேசலொட்டேன் மாலிருஞ்சோலை யெம்மாயற்கல்லால்" என்றும் திடமானவுறுதி கொண்டிருக்கின்ற நம் தலைமகள் இங்ஙனம் தாய்தந்தையர் கோடிக்கிறபடியை யறிந்தால் உயிர்மாய்வளே; ஸ்வயம்வரத்தில் எவனாவது ஒரு நரபுருஷன் கணவனாக வந்து சேர நேர்ந்தால் அதனின் மிக்க சங்கடமில்லையே; இவளுக்கோ குட்டநாட்டுத் திருப்புலியூர்ப்பெருமானோடே திருமணம் நடைபெற்றுவிட்டது; அதைத் தாய்தந்தையர் அறியார்கள்; இவளோ தானே சொல்லிக்கொள்ள நாணப்படுவள்; நாம் சொன்னாலோ 'எங்களுக்குத் தெரியாமல் எப்படி இதை நீ நடத்தி வைத்தாய்?' என்று நம்மை முனிவர்கள்; இந்நிலையில் என்ன செய்வது! இவளுக்கும் ஒரு கெடுதலின்றி நமக்கும் ஒரு அபாயமின்றி இவர்களினுடைய ஸ்வயம்வரப்பாரிப்பை எப்படி தடுப்பது? என்று மிகவும் சிந்தித்தாள் தோழி. சிந்திக்கையில் ஒரு சிறந்த வுபாயம் தோன்றிற்று. அது தன்னை வெளியிடுவதாம் இப்பதிகம்.

'அம்மனைமீர்! நம் பெண்பிள்ளையின் நிலைமையைக் காணுமிடத்து இவளுக்குத் திருப்புலியூர்ப் பெருமானோடே திருமணம் முடிந்துவிட்டதுபோல் தெரிய வருகின்றதே; எனக்கும் நேராகவொன்றும் தெரியாது. அவளுடைய இங்கிதங்களையுற்று நோக்குமிடத்துத் திருப்புலியூர்ப்பெருமானுடைய திருவருளுக்கு இலக்காகிவிட்டாள் போலவே தோன்றாநின்றாளிவள். அதனால் உங்களுடைய கோடிப்

புக்கு ஒருவிதமான அவகாசமும் இல்லை போல் நினைக்கவேண்டியதாகிறதே. நீங்களும் இதை ஆலோசித்துப் பரீக்ஷித்துப் பார்த்து பிறகு யுக்தமானபடி செய்தால் நன்றாயிருக்குமே' என்று வெகு சாமர்த்தியமாகச் சொன்னாள் தோழி. இதுகேட்ட தாய் தந்தையர், அப்படியா? அப்பெருமானுடைய அழகு ஆசாரம் கல்வி கேள்வி செல்வம் முதலானவற்றில் ஒரு குறையுமில்லாமலிருக்குமா? என்று கேட்க, அதற்கு விடை தருவது இப்பதிகம் முழுவதும்.

இனிச் செய்யுள்தோறுமுள்ள சுவைகளை யனுபவிப்போம்.

1. கருமாணிக்க மலைமேல்

திருப்புலியூர்ப்பெருமானுடைய திவ்யாவயவ ஸௌந்தரியத்தைக் கண்டு அவ்வடிவழகல்லது மற்றொன்று அறியாதவளாகி அதனையே வாய்வெருவிக்கொண்டு அவன் பேரன்றி மற்றொருவர் பேரும் பேசாதிருக்கின்றாளேயிவள்; அதனால், வடிவழகிய பெருமானை அவனோடே கலவி செய்திருக்கக் கூடுமிவள் என்று நினைக்கிறேனென்கிறாள் தோழி. அப்பெருமானது எழில் நீலமேனியிலே திருமார்பு திருவதரம் திருக்கண்கள் திருக்கைகள் திருவடிகள் முதலானவை சிவந்து விளங்கா நின்ற படியைப் பார்த்தால் ஒரு கருமாணிக்கமலைமேல் விசாலமான தாமரைக் காடுகள் பூத்தனவோ! என்னலாம் படியுள்ளதென்று இதையே சொல்லிக்கொண்டிருக்கின்றாள். உங்கள் பெண்பிள்ளையான இவள் என்கிறாள் தோழி.

மாணிக்கம் சிவந்ததேயொழியக் கறுத்ததன்று; இங்குக் கருமாணிக்கமென்பது இல்பொருளுவமை. [அபூதோபமை]; கரிய மாணிக்கக்குன்று ஒன்றுண்டாகி அதன் மேலே தாமரைக் காடுகள் பூக்கப் பெற்றால் அதனை உவமை கூறலாமென்றவாறு. அரைச் சிவந்தவாடையும் தாமரை மலர்ந்ததாக வருணிக்கப்பட்டதிங்கு. இரண்டாமடியின் முடிவில் பிரான் என்றது—இவையெல்லாம் காட்டி லெறித்த நிலாவாகாமே பக்தர்களுக்கு அநுபவிக்கக் கொடுக்குமவன் என்றபடி. அப்படி பக்தர்களனுபவிக்கக் கொடுப்பதற்குக் காரணம் பிராட்டியின் உபதேசமே யென்பது தோன்ற உடனே 'திருமாலெம்மான்' என்றது. "அன்னைமீர்! இதற்கு என் செய்கேன்" என்றது தோழியான தனக்கும் இதற்குமுன் தெரிந்ததன்றிக்கே இப்போதே தெரிந்ததாகக் காட்டிக் கொள்ளுகிற சமத்காரம்.

2. அன்னைமீரிதற்கென் செய்கேன்

தலைவியின் இந்நிகழ்ச்சிக்குத் தோழியான தான் உடன்பட்டவளல்லள் என்பதைத் தாய்மார்க்கு மெய்ப்பிக்க வேண்டி "அன்னைமீரிதற்கென் செய்கேன்" என்று அடிக்கடி சொல்லுகிறாள் தோழி. உங்களையுமறியாமல் என்னையுமறியாமல் நேர்ந்த இந்நிகழ்ச்சிக்கு நான் என் செய்வேனென்றவாறு. திருப்புலியூர்ப் பெருமானது திவ்யாபரணசோபையிலே தலைவி ஈடுபட்டுப் பேசிக்கொண்டிருப்பவற்றைக் கேட்ட தோழியானவள் அதனை அநுவாதம் செய்கின்றாள் [அணிமேருவின் மீதுலவும் என்று தொடங்கி] மேருமலையின்மீது கதிராயிரமிரவி உதித்தாற்போலே திருமகுடமும், நக்ஷத்ரதாராகணங்கள் மின்னினாற்போலே பலபல ஆரங்களும் மற்றும் திருவாபரணங்களும் ஜொலிக்கு மழகை என்னவென்று சொல்லுவேனென்று இதுவே வாய்வெருவுதலாயிருக்கின்றாள் உங்கள் பெண்பிள்ளை; இவ்வளவோடும் நில்லாமல் அத்திருப்பதியின் பொழில் வளங்களையும் புகழாநின்றாள். இவற்றால் இவளுக்கு அத்தலத்தெம்பெருமானோடு கலவி நேர்ந்ததாகவே நினைக்கலாகிறது என்பது உள்ளுறை.

3. புகழுமிவள் நின்றிராப் பகல்

முதற்பாட்டிலே அவயவங்களின் அழகு பேசப்பட்டது; இரண்டாம் பாட்டிலே ஆபரணங்களின் அழகு பேசப்பட்டது. இவற்றைக் கேட்ட தாய்மார் 'இவையிருந்தாலும் சௌர்யவீர்ய பராக்ரமங்கள் அமைந்திருக்க வேண்டாவோ? அவையுண்டோ?' என்று கேட்க; அதைப்பற்றியும் தலைமகள் வாய்வெருவுகின்றாளென்று சொல்லுகிறது இப்பாட்டில், பண்டு ஸ்ரீராமாவதாரத்திலே சீதாபிராட்டியானவள் இராமபிரான் செய்தருளிய "கரனோடு தூடணன்றன் உயிரை வாங்கி" என்னப்பட்ட கரதூஷணவதத்தில் ஈடுபட்டு அப்பெருமானது சௌர்யவீர்ய பராக்ரமங்களிலே தோற்று "தம்த்ருஷ்ட்வா சத்ருஹந்தாரம் மஹர்ஷீணாம் ஸுகாவஹம், பபூவ ஹ்ருஷ்டா வைதேஹீ பர்த்தாரம் பரிஷஸ்வஜே" என்னும்படியே அணைத்துக்கொண்டா

ளென்று கேட்டிருக்தோம்; அப்படியே இப் பெண் பிள்ளையும் திருப்புலியூர்த் தலைவன் திருவாழி திருச்சங்கு முதலான திவ்யாயுதங் களையணிந்துகொண்டு போர்க்களத்திலே சென்று புக்கு அரக்கரசுரர்களைத் தொலைத் தருளும் பேராற்றலை இரவும் பகலும் இடை வீடின்றிப் புகழ்ந்து கூறுகின்றாள்: இதனாலும் இவளுக்கு அத்திருப்பதியெம்பெருமானோடே ஸம்பந்தம் நிகழ்ந்ததாகத் தோன்றுகின்றது என்றாளாயிற்று.

4. ஊர்வளம் கிளர்சோலையும்

திருப்புலியூரின் வளங்களைச் சொல்லத் தொடங்கி "வண்டினமுரலுஞ்சோலை மயி லினமாலுஞ்சோலை கொண்டல் மீதணவுஞ் சோலை குயிலினங் கூவுஞ்சோலை அண்டர் கோனமருஞ்சோலை" என்றாப்போலே 'சோலை களின் வளத்தைச் சொல்லுவது, வயலடங்க லும்கரும்பும் செந்நெல்லுமாய் வளர்ந்திருக்கு மழகைச் சொல்லுவது, அங்கு உழுவது நடுவ தாய்ச் செல்லுமழகைச் சொல்லுவது, சுற்றி லும் நீர்நிலைகள் சூழ்ந்திருக்குமழகைச் சொல் லுவதாய். இப்பெண்பிள்ளை பேசுமழகுகளை என் சொல்லுவேன்? இவ்வளவோயோ! அத் தலத்துப் பெருமானுடைய ஆபத்ஸகத்வம் [அடியார்களின் ஆபத்துக்களைப் போக்கி உத வுந்தன்மை] என்னும் திருக்குணத்திலே ஈடு பட்டு, அப்பெருமான் ஸகலலோகங்களையும் பிரளயம் கொள்ளாதபடி திருவயிற்றிலே வைத்துக் காப்பாற்றிப் பிறகு வெளிநாடு காண உமிழ்ந்த செயலையும் சொல்லா நின்றாள்; இவையொழிய வேறு பேச்சு ஒன்றுமறியாள்; இவை சொல்லும்போது இவ ளுடைய வடிவு ஆபரணம் பூண்டாற்போலே விளங்குமழகும் அப்ரமேயமானது; இவற்றா லும் இவளுக்குத் திருப்புலியூரப்பனோடு கலவி நேர்ந்திருக்கவேணும்போல் தோன்றுகின் றது—என்றாளாயிற்று தோழி.

(தொடரும்)

பிலிக்கல்பாளையம்: ஸ்ரீ பாலதண்டாயுதபாணி கோயிலில் 19—8—60ல் புதிதாக மின்சார விளக்குகள் போடப்பட்டன. அன்று சுவாமிக்கு சிறப்பாக அர்ச்சனைகள் நடந்தன. நாமக்கல் மின்சார இலாகா உதவி என்ஜினீயரும், வேலூர் சூப்பர்வைசரும், எல்லா தர்மகர்த்தர்களும் அன்றைய தினத்தில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

ஸ்ரீவில்லிபுத்தூர்: ஸ்ரீநாச்சியார் தேவஸ்தானத்தைச் சேர்ந்த திருவண்ணமலையில் படிக்கட்டுக்கு மண்டபம் அமைக்கும் திருப்பணியை, சென்னை இந்து சமய அறநிலைய நிர்வாகத்துறை ஆணையர் திரு. அ. உத்தண்டராமன், ஐ. ஏ. எஸ். அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

சங்ககிரி: ஸ்ரீ மகாகணபதிக்கு 29—8—60ல் திருக்குடமுழுக்காட்டு விழா நடை பெற்றது.

திருச்சிராப்பள்ளி: ஸ்ரீ தாயுமானசுவாமி மலைக்கோயில் நூற்றுக்கால் மண்டபத்தில் திருமுறைத் திருவிழா 7—9—60 முதல் 12—9—60 வரை சிறப்பாக நடைபெற்றது. சென்னை அறநிலைய நிர்வாகத்துறை ஆணையர் திரு. அ. உத்தண்டராமன், ஐ. ஏ. எஸ். அவர்கள் 5-ம் திருவிழாவில் (11—9—60ல்) கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். விழாவில் பல அறிஞர்களும் சொற்பொழிவாற்றினார்கள்.

திருப்பனையூர்: ஸ்ரீ சௌந்தரேசுவரர் தேவஸ்தானத்தில் ஸ்ரீ அழகியநாதருக்கு 21—8—60ல் சம்பத்ஸ்தரா அபிஷேகம் கும்பாபிஷேக ஆண்டு பூர்த்தியையொட்டி சிறப்பாக நடைபெற்றது. அவ்விழாவில் சென்னை போக்குவரத்து, மின்சார இலாகா அமைச்சர் திரு. வி. இராமையா அவர்கள், திரு. எம்.டி. தியாகராசப்பிள்ளை, எம்.எல்.ஏ. அவர்கள், திரு. கே. டி. ஆர். கோபாலகிருஷ்ணராஜா அவர்கள், தஞ்சை அறநிலைய நிர்வாகத்துறை துணை ஆணையர் திரு. கே. சோமசுந்தர தேசிகர், எம். ஏ., அவர்கள், நாகை உதவி ஆணையர் அவர்கள் மற்றும் பலர் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

நாலாயிரப் பிரபந்தமும் : : : : : : கல்லெழுத்துக்களும்

[திரு. K. M. வெங்கடராமையா, M.A., B.O.L. திருப்பனந்தாள்]

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

இரண்டாம் இராசாதிராசனது 8-ம் ஆண்டுக்குரிய கல்வெட்டினின்று திருக்கோவலூரில் திருவாய்மொழி விண்ணப்பம் செய்ய ஒருபெண் ஏழுகழஞ்சு பொன் கொடுத்த செய்தியை அறிகின்றோம். (343 of 1921).

தஞ்சை மாவட்டத்துத் திருக்கண்ணபுரத்துக் கல்வெட்டொன்று (503 of 1922) ஒரு அரிய செய்தியை அறிவிக்கிறது. சித்திரை மாசத்தில் கலியாணத் திருவிழா, 5-ம் திருவிழா; ஸ்ரீராவி மண்டபத்தில் இராவணாந்தகன் என்ற மேற்கட்டியின்கீழ், நம்பி கலியன் என்ற பீடத்தில் திருமால் தம் இருபத்தினிமார்களோடு விற்றிருந்து சடகோபர் அருளிய பிரபந்தங்களைக் கேட்டருளினர். அப்பொழுது ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பெற்றது. இதனுள் திருமால் திருமுன் நம்மாழ்வார் அருளிய பிரபந்தங்கள் விண்ணப்பிக்கப் பெற்றன என்பது அறியக்கிடக்கின்றது.

இனிக் குலோத்துங்கசோழ தேவற்கு யாண்டு 15-வது, திருவரங்கத்து நம்பியும், இவன் மகன் மன்னன் திருவரங்கநம்பியும், மன்னன் பெண்ணைக்கூத்தனை திருக்கண்ணபுரத்தரையரும், மன்னன் திருவிண்ணகர் நம்பியும், மன்னன் திருநாட்டுநம்பியும், திருவரங்கத்தில், திருவரங்கத்தாழ்வார் கோயிலில், திருப்பள்ளியெழுச்சி, திருவாய்மொழி விண்ணப்பம் செய்யக் கைத்தீட்டுக் கொடுத்தனர். இங்ஙனம் ஒரு கல்வெட்டில் (61 of 1892; S. I. I. IV 508) காணப்பெறுகிறது.

திருப்பள்ளியெழுச்சி

மேற்குறித்த திருவரங்கக் கல்லெழுத்தில் திருப்பள்ளியெழுச்சி விண்ணப்பித்தல் குறிப்பிடப்பெற்றது. திருப்பள்ளியெழுச்சியை அருளியவர் தொண்டரடிப் பொடியாழ்வார் ஆவர். இவர் திருமண்டங்குடி என்னும் ஊரினர்; திருவரங்கம் பெரிய கோயிலில் திருமாலைத் திருப்பணி செய்துவந்தவர். இவர் அருளிய திருப்பள்ளியெழுச்சியை விண்ணப்பித்தலைக் கல்வெட்டுக் குறிப்பிடா நிற்கத், திருவிடைமருதூர்க் கல்லெழுத்தொன்று தொண்டரடிப் பொடி என்ற பெயருடைய ஒரு அன்பரைக் குறிப்பிடுகின்றது. இதனுன் 10ம் நூற்றுண்டிலேயே இவர் திருப்பெயரை மக்கட்கிடும்பழக்கம் வந்துவிட்டது என்பது தெளிவு.

தேட்டருந்திறல்

இது குலசேகராழ்வார் அருளிய திருமொழியில் இரண்டாம் பத்து. இக் குலசேகராழ்வார் திருவஞ்சைக்களத்தில் பிறந்தவர்; இராமாயணத்தில் மிகுந்த ஈடுபாடுடையவர். இவர் பாடியது பெருமாள் திருமொழி எனப் பெறும். இதனுள் ஒரு பகுதியாகிய தேட்டருந்திறல் ஸ்ரீரங்கத்தில் விண்ணப்பித்தலைப்பற்றிக் குலோத்துங்கசோழனது ஸ்ரீரங்கத்தில் உள்ள 18ம் ஆட்சியாண்டுக் கல்லெழுத்துக் கூறுகிறது. (62 of 1892; S. I. I. III 70). "ஐப்பசித் தேர்த்திருநாளிலும் பங்குனித் திருநாளிலும் தீர்த்தம் பிரசாதித்தருளின அன்று இரா திருப்புன்னைக்கீழ் எழுந்தருளியிருந்து தேட்டருந்திறல் கேட்டருளும் போது" என்பது சிலைமேல் எழுத்து. எனவே மேற்குறித்த இரண்டு நாட்களும் புன்னையின்கீழ்த் திருமாலை எழுந்தருளச் செய்து குலசேகராழ்வார் பாசுரங்களை விண்ணப்பிக்கச் செய்தனர் என்பது அறியப்படுகின்றது. (இக்கல்லெழுத்தில் சடகோபதாசன், குருகை காவலன் என்ற பெயர்பூண்ட அரசியல் அலுவலர் குறிப்பிடப் பெறுகின்றனர்.)

திருமொழி

திருமங்கை மன்னன் அருளியது பெரிய திருமொழி; மேற்குறித்த குலசேகராழ்வார் அருளியது பெருமாள் திருமொழி; பெரியாழ்

வார் பாடியது பெரியாழ்வார் திருமொழி; ஆண்டாள் பாடியது நாச்சியார் திருமொழி. பெரியாழ்வார் ஸ்ரீவில்லிபுத்தூரில் பிறந்தவர்; இவர், திருமொழியோடு திருப்பல்லாண்டும் பாடியுள்ளார். இவரது மகளே சூடிக் கொடுத்த நாச்சியார் அல்லது ஆண்டாள். இவ்வாண்டாள், நாச்சியார் திருமொழியோடு திருப்பாவையும் பாடியுள்ளார். இவர்கள் அருளிய திருமொழி விண்ணப்பித்தலைக் குறித்து முதல் இராசராசனது 26-ம் ஆட்சி ஆண்டுக் குரிய காஞ்சிபுரத்துக் கல்வெட்டினின்று தெரியவருகின்றது. (557—1919). உக்கல் என்ற ஊரின் ஒருபகுதி பெரியணஞ் சேரி. இவ்வூர் மகாசபையாரிடம் இருந்து பெருமான்தாசர் என்பார் $17\frac{3}{4}$ வேலிநிலத்தை வாங்கியளித்து, அந்நில வருவாயிலிருந்து 58 அந்தணர்கள் திருமொழி விண்ணப்பிக்க வேண்டும் என்று ஏற்பாடு செய்தார்.

பிரணயபத்திரிகை

இது ஸ்ரீவில்லிபுத்தூரில் சூடிக்கொடுத்த நாச்சியார் கோயிலில் உள்ள சாஸனம். "பொருப்பன்ன மாடம் பொலிந்து தோன்றும் புதுவையர்கோன் விஷ்ணு சித்தன் கோதைக்கு நாம்வரக் காட்டின பிரணய பத்திரிகை" என்று ஸ்ரீரங்கநாதரே ஆண்டாளுக்கு எழுதிய கடிதம்போல் உள்ளது இச்சாஸனம். திருவரங்கத்தில் பெரியகோயிலில் சேரனை வென்றான் மண்டபத்தில் சுந்தரபாண்டியன் பந்தல்கீழ் அரியராயன் கட்டிலில் ஸ்ரீரங்கநாதர் வீற்றிருந்தருளினர். அவ்வமயம் கோதை வீட்டிலிருந்து அர்ச்சகர் குடவர் தண்டெடுப்பார் முதலியவர்கள் வந்தார்கள். ஸ்ரீரங்கநாதர் அவர்களை எதிர்கொண்டழைப்பித்தார். கோதை வரக்காட்டின சாஸனம் (அனுப்புவித்த கடிதத்தை) வாசித்துக் காட்டச் செய்திகளை ஸ்ரீரங்கநாதர் அறிந்து கொண்டார். "ஸ்ரீரங்கநாதர் பதினாறுமாயிரம் தேவிமாரோடும் பெரிய மண்டபத்திலே விநோதித்திருப்பதாகத் தோழியர் கோதைக்குக் கூறினர். கோதை புண்ணிற் புளிபெய்தாற்போலவும், வேலால் துன்னம் பெய்தாற் போலேயும் மனம் வெந்து நிலை தளர்ந்தாள்:

கொள்ளும் பயனொன் றில்லாத
கொங்கை தன்னைக் கிழங்கோடு
அள்ளிப் பறித்திட் டவன்மார்பி
லெறிந்தென் அழலைத் தீர்வேனே

என்று உள்ளே உருகி நைந்தாள்; அரங்கநாதரைப் 'பொருத்தமிலி, பெண்ணின் வருத்தம் அறியாத பெருமாள்' என்று தாய் கூறி வருந்தினள் என்று கோதை வரக்காட்டிய கடிதத்தில் இருந்தது. இங்ஙனம் தாய் கூறியது நம்திறத்து ஊடல்கண்டு உவப்பதற்காகவேயாகும் என்று அரங்கநாதர் கருதி, "நாம் முப்பத்துமூவர் அமரர்க்கு முன்சென்று கப்பம் தவிர்ப்பது காரணமாகவும் தேவரகசியமாகவும் பெரியமண்டபத்தில் இருந்தோம். நாம் கோதையல்லது பிறரை விரும்புவதில்லை; நமக்கு உள்ளவாறு பல்லக்கும் குடையும், நாம் பூணும் கண்டமாலை ஆரணங்களும், பட்டுபருத்தி சுகந்த திரவியங்களும் கோதையும் பெறவேண்டும்" என்று அருளி அடுக்களைப் புறமாகத் திடியன் ஆன திருவரங்கநல்லூரை ஸ்ரீரங்கநாதரே அளிப்பதாக அமைந்தது இச்சாஸனம். ஸ்ரீரங்கநாதரது உத்தரவாக இச்சாஸனத் தொடர்கள் அமைந்திருப்பினும், உண்மையில் உறங்காவில்லிதாஸன் ஆன மஹாபலிவாணாதராயர் என்னும் (அரசியல் அலுவலாளராகிய) பரமபாகவதர் ஒருவரால் இத்தருமம் அளிக்கப்பெற்றது என்பது அறிதல் தகும். (577 of 1926; தென்னிந்திய கோயிற் சாஸனங்கள், பாகம் I பக் 149-151.)

இச் சாஸனத்தில் பெரும்பகுதி, திருப்பாவை, நாச்சியார் திருமொழி ஆகியவற்றினின்று எடுத்த பல பாடற்பகுதிகளால் ஆக்கப்பெற்றுள்ளது.

ஆண்டாளின் தெய்விக வரலாறு மக்கள் மனத்தை என்றுமே கவர்ந்துள்ளது; இதற்கு இச்சாஸனம் சான்று பகரும். அன்றியும் திருப்பாவை, நாச்சியார் திருமொழி ஆகிய வற்றையும் திருமால் பக்தியில் சிறந்தோர் நன்கு அறிந்திருந்து போற்றினர் என்பதும் இதனால் அறிதற்பாலது ஆகும்.

இனிச் சகம் 1375 (கி.பி. 1453)க்குரிய கல்லெழுத்தும் (575 of 1926); சகம் 1399 (கி.பி. 1477)க்குரிய கல்லெழுத்தும் (578 of 1926) ஆண்டாளைச் சூடிக்கொடுத்த நாச்சியார் என்று குறிப்பிடுகின்றன.

கி.பி. 1546க்குரிய பராக்கிரம பாண்டியருடைய கல்லெழுத் தொன்றிலும் (580 of 1926) நாச்சியார் திருமொழிப் பாடற் பகுதிகள் காணப்படுகின்றன.

திருப்பதியம் விண்ணப்பித்தல்

உத்தரமேரூரில் கண்ட முதலாம் இராசேந்திரனின் 3-ம் ஆட்சியாண்டு சாஸனம் (181 of 1923) ஸ்ரீ வைஷ்ணவர்கள் திருப்பதியம் விண்ணப்பித்தலைக்குறிப்பிடுகின்றது. வெள்ளைமூர்த்தி ஆழ்வார் கோயிலில் இராகவதேவர் திருமுன் திருப்பதியம் விண்ணப்பிக்க வேண்டும் என்றும், திருமாலுக்கு நிவேதிக்கப்பெற்ற போனகம் திருப்பதியம் விண்ணப்பிப்பாருக்கு அளிக்கப்பெற வேண்டும் என்றும் அச்சாஸனத்தில் கண்டிருக்கிறது. இங்குக்குறித்த திருப்பதியம் என்பது நாலாயிரப் பிரபந்தமே ஆகும்.

திராவிட வேதம்

கிருஷ்ணதேவராயர் சகம் 1445 (கி. பி. 1523)-ல் வடநாட்டிற் பெற்ற பெரு வெற்றிக்குப் பின் மகாமகத்தின் பொருட்டுக் கும்பகோணத்துக்குச் சென்றார்; சென்று திரும்புங்கால் நாகலாபுரத்துக்கு விஜயம் செய்து அங்குத் திருமாலுக்குக் கோயில் எடுப்பித்தார். அக்கோயில் கைங்கரியங்களை நடத்துவதற்கும், ஆங்குத் திராவிடவேதமும் வேதாந்தமும் ஓதுவதற்கு, அவ்வரசர் பல வூர்களை அளித்தார் என்று நாகலாபுரத்துச் சாஸனங்கள் நுவல்கின்றன (627 and 628 of 1904; C. P. No. 12 of 1905). இங்குக் குறித்த திராவிடவேதம் என்பது நாலாயிரப் பிரபந்தம் என்று அறிதல் தகும்.

கிருஷ்ணதேவராயர் பரம பாகவதர்; நாலாயிர பிரபந்தத்துள் இவர்க்கு மிக்க ஈடுபாடு இருந்தது. இவர் ஆண்டாள் வைபவங்களையெல்லாம் தொகுத்துச் சிறப்பாக ஒரு தெலுங்குக் காவியம் இயற்றியுள்ளார். அதற்கு ஆமுக்த மால்யதா என்று பெயர்.

திருவாய்மொழி மண்டபம்

திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதி கோயில் முதலாழ்வார் மூவராலும் மங்களாசாஸனம் பெற்ற பழம்பெருமையுடையது. இக்கோயிலில் சகம் 1486 (கி.பி. 1564)-க்குரிய கல்வெட்டொன்றில் திருவாய்மொழி மண்டபம் என்று ஒரு மண்டபம் கட்டப்பெற்றதாகக் (239 of 1903) காணப்பெறுகிறது.

அருளாளப் பெருமாள் கோயில் சாஸனம்

அருளாளப் பெருமாள் என்பது காஞ்சிபுரம் வரதராஜப்பெருமாளைக் குறிக்கும். இங்குக் குறித்த சாஸனம் (33 of 1893; S. I. I. III 80) விக்கிரம சோழனது 9-வது ஆட்சியாண்டுக் குரியது. காஞ்சிபுரத்தில் திருவத்தியூராழ்வாரை (காஞ்சிபுரம் அருளாளப் பெருமாளை)ப் பொய்கையாரும் பூதத்தாழ்வாரும் பாடினர் என்றும், அவர்களுடைய நட்சத்திரம் திருக்கேட்டை என்றும், மாதந்தோறும் திருக்கேட்டை நாளில் அருளாளப் பெருமாள் புறப்பட்டருளி ஏகாசீதித் திருமஞ்சனமும் (81 திருமுழுக்கு), பெருந்திருவமுதும் செய்தருள வேண்டும் என்றும், இதற்கு 780 கலம் நிலம் நெல் முதற்பொருளாகத் தரப்பெற்றது என்றும் அச்சாஸனத்துள் சொல்லியுள்ளது. இவ்விரு ஆழ்வார்களுடைய திருநட்சத்திரம் திருக்கேட்டை என்றது அக்காலத்தவர் கருத்தையொட்டியே யாதல்கூடும். ஆனால் பொய்கையாழ்வார் திருநட்சத்திரம் திருவோணம் என்றும், பூதத்தாழ்வார் திருநட்சத்திரம் அவிட்டம் என்றும் குருபரம்பரைகளில் கூறப்பெற்றுள்ளன.

இனித் திருமழிசையாழ்வார் திருநட்சத்திர நாளில் ஸ்ரீபெரும்பூதூரில் திருவிழா நடத்தவேண்டும் என்று வெங்கடபதிராயருடைய தேவியார் கிருஷ்ணஜியம்மன் என்பார் பத்துவராஹன் அளித்ததாகச் சகம் 1513 (கி.பி. 1592)க்குரிய கல்வெட்டில் (195 of 1922; தென்னிந்திய கோயிற் சாஸனங்கள், பாகம் I எண் 544) காணப்பெறுகின்றது. இதனால் ஆழ்வார்களுடைய திருநட்சத்திரங்களில் திருவிழாக்கள் நடத்தப்பெற்றமையும் அறியலாம்.

முடிப்புரை

இதுகாறும் கூறியவாற்றான் பிரபந்தங்கள் திருமால் கோயில்களில் ஓதப்பெற்றன என்றும், ஆழ்வார்களின் திருப்பெயர்களை மக்கள் தம் பெயராகப் பூண்டு மகிழ்ந்தனர் என்றும், ஆழ்வார்களின் நட்சத்திரங்களில் திருவிழாக்கள் நடத்தினர் என்றும் பிறவும் அறிந்து மகிழ்வோமாக.

திருமுருகாற்றுப்படை

[வித்துவான். திரு. **வை. சுந்தரேசவாண்டையார்,** அண்ணாமலைப் பல்கலைக்கழகம்]

நூலின் சிறப்பு

இது சங்கத்துச் சான்றோர் செய்யுட்களிற் பத்துப்பாட்டில் முதலாவதாகும்; சைவத்திருமுறைகளிலே பதினோராந் திருமுறையிலும் இது சேர்க்கப்பெற்றுள்ளது; முந்நூற்றுப் பதினேழு அடிகளுள்ள ஆசிரியப்பாவான் அமைந்தது; முருகப்பெருமானின் திருவருள்பெற விரும்பும் அன்பர்கள் அன்பொடு நாள்தோறும் ஓதிப் பயன்பெற உதவுவது. இதன் சிறப்பை ஆன்றோர் பலரும் புகழ்ந்துள்ளனர்.

"வளவாய்மை சொற்பிரபந்த
முளகீர னுக்குவந்துன்
மலர்வா யிலக்கணங்கள்—இயல்போதி
அடிமோனை சொற்கிலங்க
உலகா முவப்பவென்றுன்
அருளா லளித்துகந்த—பெரியோனே"

எனவும்,

"கீதவிசை கூட்டி வேதமொழி சூட்டு
கீரரிசை கேட்ட க்ருபை வேளே"

எனவும் அருணகிரிநாதரும்,

"பாவுள் முன்னுற
வந்துநிற்கும் முருகாற்றுப்படை"

எனத் துறைமங்கலம் சிவப்பிரகாச அடிகளும்,

"தவிராத வெவ்வினை தவிர்க்கும் முருகாறு"

என அந்தகக் கவி வீரராகவ முதலியாரும் இதனைப் புகழ்ந்துள்ளமை காண்க.

நூலின் வரலாறு

தருமியின் பொருட்டுச் சிவபெருமான் எழுதி ஈந்தருளிய "கொங்குதேர் வாழ்க்கை" என்ற பாடல் பொருட்குற்ற முடைத்து மகளிர் கூந்தலுக்கு இயற்கை மணம் உளது என்று அப்பாட்டின்கண் குறித்தது பிழையாம் என்று இறைவனோடு வாதாடிய காரணத்தால், "குட்டநோய்" உறுக எனச் சாபம் பெற்ற நக்கீரனார், அச் சாபநீக்கத்தின் பொருட்டுக் கயிலைக்குச் செல்லும் வழியில் ஒரு மலைக்குகையிலே முன்னமே அடைக்கப்பட்டிருந்த தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பதின்மரோடு சேர்த்துண்ணக் கருதித் தம்மையும் அடைத்து வைத்து நீராடச் சென்ற பூதத்தினின்றும் உய்யக் கருதி முருகக் கடவுளைக் குறித்துப் பாடியது இந் நூல் என்று கூறுவர். இவ்வரலாறு திருப்பரங்குன்றப் புராணம், திருவிளையாடற் புராணம், திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம் முதலிய நூல்களிற் கூறப்பட்டுள்ளது.

பெயர்ப்பொருள்

திருமுருகாற்றுப்படை என்பதற்கு வீடு பெறுதற்குச் சமைந்தானோர் இரவலனை, வீடுபெற்றானொருவன், முருகக் கடவுளிடத்தே ஆற்றுப்படுத்தது என்று ஆசிரியர் நச்சினார்க்கினியர் பொருள் கூறியுள்ளார். ஆற்றுப்படை என்பது தமிழிலுள்ள பல வகைப் பிரபந்தங்களில் ஒன்று. தொல்காப்பியம் புறத்திணையியலில்,

"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறுஅர்க் கறிவுறீஇச்
சென்றுபய னெதிரச் சொன்ன பக்கமும்"

என்பது இதற்கு விதி.

நூற்பொருட் சுருக்கம்

எல்லாச் சமயத்தாரும் புகழும் பருதியங் கடவுள் கடலிலே தோன்றினாற்போல மனம் ஒன்றி நினைப்பாருள்ளத்திலே அறியாமையாகிய இருள் கெடும்படி மலையின்மீது தோன்றும் பேரொளிப்பிழம்பு முருகப்பெருமான்; அவன் தன்னை யடைந்தாரது அறிய

மையை நீக்கும் திருவடி யுடையவன்; அழித்தற்கு உரியாரை அழிக்கும் கையினன்; அறக்கற்புள்ள தெய்வயானையம்மை மணாளன்; கடம்பு மாலை புரளும்மார்பினன்; சூரரமகளிர் விளையாடும் மலையிற்றோன்றிய சுரும்புமூசாச் சுடர்ப்பூங்கண்ணி சூடிய முடியினன்; அசுரர் வலியடங்கச் சூரபன்மாவாகிய மாயமாமரத்தைத் தடிந்த வேற்படையன்; அவனது ஞானமயமாகிய திருவடிப் பேற்றை விரும்பும் உள்ளத்தோடு நீ செல்ல விரும்புதியாயின் நீ தவறாமல் அதனைப் பெறுவை. அவன் தன்னை அடைந்தார்க்கு அருளும் பொருட்டு வீற்றிருக்கும் இடங்களைக் கேள். மாடமலி மறுகினையுடைய கூடல்நகரின் மேற்கேயுள்ள **திருப்பரங்குன்றத்தில்** விருப்புடன் அமர்ந்துளான்.

அதுவன்றி அவனுடைய ஆறு திருமுகங்களிலே ஒன்று உலகில் இருளை நீக்கவும், ஒன்று ஆர்வலர்க்கு அவர் விரும்பிய வரங்கொடுக்கவும், ஒன்று அந்தணர்புரியும் வேத வேள்விக்குத் தீங்கு வராது நினைக்கவும், ஒன்று முனிவர்களுக்கு வேதாகமப்பொருளை அறிவுறுத்தவும், ஒன்று அசுரர் முதலியோரை அழித்துக் களவேள்வி செய்ய விரும்பவும், ஒன்று வள்ளி நாச்சியாரோடு மகிழ்ச்சியைப் பொருந்தவும், அம்முகங்களுக்கு ஏற்பப் பன்னிருகைகளும் பலவகைத் தொழில் புரியவும் **திருச்சீரலைவாயிலிலும்** வீற்றிருக்கின்றான்.

அதுவுமன்றி மரவுரியுடையும், வானரை முடியும், மாசறுவடிவும், வாடியவுடலும், செற்றம் நீங்கிய மனமும், கற்றோரின் மேம்பட்ட அறிவும், சினமற்ற முனிவர்கள் முன்னே செல்லக் கந்தருவர்கள் இனிய யாழிசை பயிலக் கந்தருவ மகளிர்சூழத் திருமாலும், இந்திரனும், உருத்திரனும், தத்தம் தொழில் நிலைபெறவும், அயனைப் பழைய படைத்தற்றொழிலிலே நிலைநிறுத்தவும், விரும்பி முப்பத்து முக்கோடிதேவர் பதினெண் கணங்களுடன் வான்வழியாக வந்து காணும்படி தெய்வயானையம்மையுடன் **திருவாவினன்குடி** என்னும் ஊரிலும் இருத்தற்குரியன்.

அதுவன்றித் தமக்குரிய அறுவகைத் தொழிலினும் தவறாதவர்களும், நாற்பத்தெட்டியாண்டு பிரமசரியம் காத்தவர்களும், முத்தீச் செல்வருமாகிய அந்தணர்கள், ஈரம் புலராத உடையினராய், உச்சிமேற் கைகுவித்துத் துதித்து, ஆறெழுத்து மந்திரத்தை மெல்ல உச்சரித்து, நறுமலரால் வழிபடும் **ஏரகம்** என்னும் ஊரிலும் இருத்தலுரியன்.

அதுவன்றி, வெறியாட்டாளனாகிய வேலன், வெறியாடக் காட்டு மல்லிகையையும் வெண்டாளியையும் பச்சிலைக் கொடியிலே கட்டின கண்ணியை யணிந்தவனுக் கள்ளின் தெளிவைக் கானவரோடு உண்டு தொண்டகப் பறை முழக்குக்கு ஏற்பக் குரவைக் கூத்தாடத் தன்னைச் சேவிக்கும் மடநடை மகளிருடன் வெட்சிமாலையைச் சூடிப் பல இயங்களை எழுப்பிக் கோழிக்கொடியை உயர்த்திப் பாடும் மகளிருடனும் மெய்தீண்டி விளையாடற்குரிய மகளிருடனும் அவர்களுக்கு முதற்கை கொடுத்துக் **குன்றுதோறும்** விளையாடுதலையும் உரியன்.

அதுவுமன்றி, ஊர்தோறும் எடுத்த விழாவின் கண்ணும், அன்பர் விரும்பும் இடங்களிலும், ஆற்றிடைக் குறையிலும், ஆறுகளிலும், குளங்களிலும், பல்வேறு ஊர்களிலும், சந்திகளிலும், கடம்பமரத்திலும், கந்துடை நிலையிலும், மன்றத்து மறத்தின்கீழும், அம்பலத்திலும் மலைப்பக்கங்களில் குறமகளிர் வெறியாடுகளங்களிலும் உறைதலுமுரியன்.

முற்கூறிய இடங்களிலேனும் வேறு இடங்களிலேனும் நீ அவனைக் கண்டபொழுது விரும்பித் துதித்துத் தலைமேற் கூப்பித் தொழுது "அறுவர்பயந்த ஆறமர் செல்வ" என்பது முதலாகக் கூறித் துதித்து, "நின் தன்மையெல்லாம் அளவிட்டறிதல் மன்னுயிர்க்கு அரிது. நின் திருவடியைப் பெற வேண்டுமென்று நினைந்து வந்தேன்" என்று நீ கருதிய வீடுபேற்றினை விண்ணப்பஞ் செய்வதற்கு முன்னமே அவனுடைய பரிசனங்கள் உன்னைப்பற்றி அவன்பால், பெரும! முதுவாயிரவலன் ஒருவன் நின்னைப் புகழ்ந்து வந்தான். அளிக்கத் தக்கான் எனக் கூறுவர். அப்போது முருகன் ஆங்குத் தன் பெரிய தெய்வ வடிவத்தை உள்ளடக்கிக்கொண்டு தன் மணங்கமழ் தெய்வத்து இளநலங்காட்டி உன்னை "அஞ்சல்" எனக்கூறி நீ விரும்பிய வீடுபேற்றினை அளிப்பான். அருவிகள் ஆர்த்து இழியும் **பழமுதிர்சோலையில்** உள்ள முருகப்பெருமான் என்பது இந்நூலின் திரண்ட பொருளாகும்.

CONNEMARA ... 1 OCT 1960 ... MADRAS



கும்பாபிஷேக சமயத்தில் திரு. O. V. அளகேசனும்,
அமைச்சர்கள் திரு. M. பக்தவத்சலம், திரு. P. கக்கன் இவர்களும் அமர்ந்திருத்தல்



கும்பாபிஷேகப் பிரதான ஆச்சாரியார் திரு. சிவராஜ பண்டிதரும் சகாக்களும்

1 OCT 1960



பழனி கும்பாபிஷேக நினைவுக்கல் திறந்து வைத்தபோது தேவஸ்தான ஆட்சிக்குழுத் தலைவர் திரு. P. S. K. இலட்சுமிபதிராஜு அவர்கள் அமைச்சருக்கு மாலை அணிதல்



திருமதி K. B. சுந்தராம்பாள் M.L.C. அவர்களின் இன்னிசை அரங்கு

சுவைத்து இன்புறத்தக்க பகுதிகள்

இந்நூல் முழுவதும் சீரிய கூரிய சுவை கனிந்த பொருள்செறிந்த செஞ்சொற்களால் ஆகியது. இதன்கண் சிறப்பாகப் பாராட்டிப் படித்து இன்புறவேண்டிய சில பகுதிகளை மட்டும் ஈண்டுக் குறிக்கின்றேன்.

முருகப்பெருமான் மயில்மீது தோன்றுவதற்கு,

"உலக முவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற் கண்டாங்கு
ஓவற விமைக்கும் சேண்விளங் கவிரொளி"

என்ற உவமை மிக அழகியது. இதனைப் பின்பற்றியே அருணகிரிநாதரும் "உததியிடை கடவும்...... மயிலின்மிசை உகமுடிவுள் இருளகல ஒருசோதி வீசுவதும்" என்றார்.

சூரர மகளிர் ஆடையணிகளும், அவர் விளையாட்டும் இன்பம் பயப்பன. பேய் மகள் வடிவமும், போர்க்களத்தில் அவள் தலையொன்றைக் கையிலேந்தி ஆடுதலும் அச்சம் பயக்கும்.

திருப்பரங்கிரியிற் சுனை, வண்டிகளின் இன்பவாழ்வு படிப்போர்க்கு இன்பந்தரும்.

முருகப்பெருமானது திருமுகங்களாறும், திருக்கைகள் பன்னிரண்டும், செய்யும் செயல்கள் அவனே உலக காரணன்; அவனன்றி அணுவும் அசையாது என்பதைப் புலப்படுத்தும். கந்தர் கலிவெண்பாவில் முருகனது திருமுகங்கள், கைகள், செய்யும் தொழில்களாகக் கூறப்பட்டுள்ளவற்றிற்கும் இதற்கும் வேறுபாடு கண்டுணர்தல் வேண்டும்.

திருவாவினன்குடிப் பகுதியில், முனிவர்களது தூயதன்மை, அழகாகக் கூறப்பட்டுள்ளது. முருகப்பெருமான் மும்மூர்த்திகளாலும் வழிபடப்பெறும் முழுமுதற் பொருள் என்பதும் இப்பகுதியால் விளங்கும். திருவேரகத்தில் அந்தணர்கள் வழிபடும்முறை பயபக்தியைக் காட்டுகிறது. குன்றுதோறாடலில் வேலன் வெறியாடும் முறையும், மலைதோறும் இறைவன் விளையாடும் முறையும், இன்புற எடுத்துக் காட்டப்பெற்றுள்ளன. பழமுதிர்சோலைப் பகுதியில் முருகன் வாழும் இடங்கள் பல கூறப்படுகின்றன. வெறியாடு களன் வர்ணிக்கப்படுகிறது. முருகனை முன்னிலையாகப் புகழும் தொடர்மொழிகள் உள்ளத்தை ஊக்கத்தக்கவை.

பழமுதிர்சோலையினின்று இழிதரும் அருவிவர்ணனை மிக அழகியது. இத்தகைய சிறந்த செந்தமிழ் அருட்பனுவலை அன்புடன் ஓதி ஆராய்வார்களுக்கு முருகன் எல்லா நலங்களையும் எளிதில் அருளுவான்.

"நக்கீரர் தாமுரைத்த நன்முருகாற் றுப்படையைத்
தற்கோல நாடோறுஞ் சாற்றினால்—முற்கோல
மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித்
தாநினைத்த வெல்லாந் தரும்"

செய்திகள்

பெரும்புலியூர்: ஸ்ரீ வியாக்ரபுரீசுவரசுவாமிக்குத் திருக்குடமுழுக்கு விழா 15—9—60ல் நடைபெற்றது.

இளையாத்தகுடி: ஸ்ரீ கைலாசநாத சுவாமி கோயிலில் நவராத்திரி விழா 21—9—60 முதல் 30—9—60 வரை சுவாமிக்கும் அம்பாளுக்கும் சிறந்த அலங்காரங்களுடன் நடைபெற்றது. சொற்பொழிவும் நடைபெற்றது.

பழனி: ஸ்ரீ பட்டத்து விநாயகர் கோயிலில் விநாயகர் சதுர்த்தி விழா ஆவணி 11 தேதி சிறப்பாக நடைபெற்றது. அவ்விழாவில் அறநிலையத்துறை ஆணையர் அவர்களும், மதுரை துணை ஆணையர் அவர்களும், உதவி ஆணையர் அவர்களும் மற்றும் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். இனி வருடா வருடம் சுவாமி புறப்பாடு தொடர்ந்து நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

கண்ணனும் கோபியரும்

[பி. ஸ்ரீ.]

கண்ணன் வேணுகானம் செய்ததும், பசுக்களைப்போல் கோவலர் சிறுமியரும் வசிகரிக்கப் பெற்றார்கள் என்பதையும் அவர்களில் சிலர் வெள்கி மயங்கிப் பசுக்களுக்கும் முன்பே வந்து சேர்ந்தார்கள் என்பதையும் நாம் ஏற்கெனவே தெரிந்துகொண்டிருக்கிறோம். தோழர்களோடு துள்ளி விளையாடிய சிறுவன் அந்தச் சிறுமியரோடும் விளையாடினான் என்பது பிரசித்தம். அந்த விளையாட்டில் அச்சிறுமியரும் குதூகலமாய்க் கலந்து கொண்டார்கள்.

ஜீவாத்மா—பரமாத்மா உறவு

மான் கணங்கள் மேய்கை மறந்து வந்து நின்றதுபோல் சிறுமிகளும் தங்கள் வீட்டுக் கடமைகளை மறந்து கிருஷ்ணபக்தியில் வசிகரிக்கப் பெற்றனர். இயற்கை மோகினியும் அப்படியே மோகித்துப் போனதுபோல், அந்த இயற்கையின் பகுதியாக, விண்ணும் மண்ணும் மோகித்துக்கிடந்தன; பிராணிகளெல்லாம் மோகித்துப் போயின; விண்ணுலக மங்கையர்போல் ஆயர்குலச் சிறுமியரும் மயங்கி மோகித்து நின்றார்கள். இதன் உட்பொருள் ஆழ்ந்த சிந்தனைக்கு உரியதுதானே.

'கோபியர் வஸ்திராபஹரணம்' என்ற கதையையும் திவ்யப் பிரபந்தத்தில் காணலாம். கன்னியரோடு சிறுவனான கண்ணன் அப்படி விளையாடிய விளையாட்டை ஆண்டாளும் குறிப்பிடுகிறாள். 'கோழி அழைப்பதன் முன்னம்' நீராடப்போன ஆயர்மகளிரைப் பின் தொடர்ந்து போய் ஒளித்திருந்து, பூந்துகில் வாரிக்கொண்டு 'மங்கை நல்லீர் வந்து கொள்மின்' என்று மரமேறி யிருந்ததாக ஆழ்வார்களின் அருளிச்செயல் கூறுவதன் ஆய்ந்த பொருள் பரமாத்மாவுக்கும் ஜீவாத்மாவுக்கும் உள்ள உறவை நினைவூட்டுவதாகத் தானே இருக்க முடியும்? ஆத்மாவுடன் தெய்வம் விளையாடும் ஞான விளையாட்டின் புராண பாஷைதான் இந்தக் கதை.

'உடைகளின் தத்துவம்' என்று பொருள்படும் ஒருதலைப் பெயருடன் கார்லைல் என்ற பேரறிஞர் ஓர் அரிய நூல் எழுதியிருக்கிறார். ஆடைகளையும் அலங்காரங்களையும் கண்டு பிரமிக்கிறது, மோசம் போகிறது, உலகம் என்ற பேருண்மை ஒன்றைத் துலக்கித் தூக்கிக் காட்டுகிறது அந்த நூல். ஆனால், கடவுளை ஏமாற்ற முடியுமா? ஆடை அலங்காரங்களாலோ, வெளி மினுக்குகளாலோ, நம் யதார்த்த நிலைமையைக் கடவுளுடைய திருஷ்டியிலிருந்து மறைத்துவிட முடியுமா? கார்லைல் போன்ற பேரறிஞர்களையும் வெளி மினுக்குகளால் ஏமாற்ற முடியாது என்றால், பரமாத்மாவான இறைவனை ஏமாற்றுவது எப்படி? பற்றற்ற நிலையிலேதான் கடவுளுடைய பற்று நமக்குச் சித்திக்கும் என்ற உண்மையைத் தான் ஆண்டாள் முதலான அருட்பெருஞ் செல்வர்கள் வெளியிட முயல்கிறார்கள் என்று ஊகிப்பதே 'கோபியர் வஸ்திராபஹரண'க் கதைக்கு இசைந்த தத்துவப் பொருளாகும்.

குரவை விளையாட்டு

குழைந்து குழலூதிக் கோபியருடன் கண்ணன் விளையாடியதையும், குரவைக் கூத்து முதலான விளையாடல்களில் ஈடுபட்டதையும் திவ்யப் பிரபந்தத்திலும் காண்கிறோம். இந்த விளையாட்டில் 'காதல் வெள்ளம்' பக்தி வெள்ளம்தான். எனவே கோபியரை ஜீவாத்மாக்களாகவும், கண்ணனைப் பரமாத்மாவாகவும் கருதுவதே மரபு. கிருஷ்ணாவதார வைபவத்திலே, அறிவிலிகளைப் பிரமிக்கச் செய்யும் இந்த நிகழ்ச்சி பக்தர்களால், ஞானிகளால், யோகிகளால் பெரிதும் உகக்கப்படுவதைக் காண்கிறோம்.

கோபியர்களின் ஆவல் சரீரசம்பந்தமான ஆவல் அன்று, ஆத்மசம்பத்தாகிய பக்திக் காதல்தான். கோபியர்களின் ஆவலைத் தீர்க்கக் கருதி இறைவன் வேணுகானம் செய்து கோபியர்களை வரவழைத்தான் என்றால், இதன் உட்பொருள் நமது ஆவலாகிய பக்தியைத் தெய்வத்திற்கு நம்மீது உள்ள காதல் எப்படியாவது பூர்த்தி செய்துவிடும் என்பது தான். இந்த உட்பொருளை நம் உள்ளத்தில் நிலைநிறுத்திக் கொண்டால், குரவை விளையாட்டு முதலான கிருஷ்ணலீலைகளின் விவரங்களோ, சிங்கார வருணனைகளோ தவறான வழியில் நம் உள்ளத்தைத் திருப்புவதற்கில்லை.

யமுனைக்கரை. கண்ணன் வேணுகானம் செய்கிறான். சிறுமியர் காவல் கடந்து புறப்பட்டு வந்து கண்ணன் திருக்கூட்டத்தில் (கிருஷ்ண கோஷ்டியில்) கலந்து கொள்ளுகிறார்கள்.

ஒருத்தரை மதிப்பதிலை
உன்தன் அருளாலே!

என்று ஒரு 'பக்தர் கூறியிருப்பதுபோல் இந்தச் சிறுமியர் கண்ணனைத் தவிர வேறு ஒருவரையும் மதிக்கவில்லையாம். இந்த நிலையில் நடைபெற்ற பேரின்பக்கூத்தே குரவைக் கூத்து என்பர்.

ஒவ்வொரு சிறுமியின் பக்கத்தில் ஒவ்வொரு கண்ணனைப் பல வடிவங்கள் கொண்டு நின்று கண்ணன் 'ஆடிய கூத்து வடமொழியாளர்களால் 'இராஸக்ரீடை' என்று சொல்லப்படுகிறது. வட்டமாக நின்று ஆடும் ஆட்டத்தை 'மண்டலித்து ஆடுதல்' என்று கூறுவார்கள். மண்டலம் இட்டு ஆடுதல் என்பது பொருள். மண்டலம் என்றால் வட்டம். வட்ட வடிவான அணிவகுப்பையும், அத்தகைய அபிநய வகையையும் மண்டலம் என்ற சொல் குறிப்பதாகும்.

இராஸக்கிரீடையில் மண்டலமிட்டு நின்ற கோபியர்கள் மண்ணிலா நின்றார்கள்? பரமானந்தத்தின்—பரமபதத்தின் எல்லையிலே நின்றார்களாம். அப்போது கண்ணன் அவர்களை விட்டுப் பிரிந்துபோய் ஒளித்துக்கொண்டான். அவர்கள் அவனைத்தேடிக் காணாமல் திகைத்தார்கள்; காதல் மேலும் பொங்கி வெள்ளமிடக் கண்டார்கள். இது நம் பக்தியை மேலும் மேலும் சோதித்து அதிகரிக்கச் செய்யத் தெய்வம் கையாளும் உபாயமாகும் என்பது பக்தர் கொள்கை. அநுபூதிக்கலை (Mysticism)யின் மர்மங்களை அறிந்தவர்கள் இந்த உண்மையை நன்றாக அறிவார்கள்.

கண்ணனைக் காணவில்லையே திடீரென்று எங்கே மறைந்துவிட்டான். ஆனந்தத்தின் எல்லையில் நின்ற நமக்கும் இந்தக் கதியா? என்று கருதிய கோபியர்கள் 'மறுபடியும் நமது பெருமானைக் காணும்வரை நாம் எப்படி உயிர் தரித்திருப்போம்? என்றும் கவலைப்படுகிறார்களாம். அதற்காக அவர்கள் ஒரு யுக்தி செய்கிறார்கள்.

ஒருத்தி கண்ணனாகத் தன்னைப் பாவித்துக் கொள்கிறாள். மற்றவர்கள் கண்ணன் திருவிளையாடல்களில் வரும் காளியன் முதலான கதாபாத்திரங்களாகத் தங்களைப் பாவித்துக் கொள்ளுகிறார்கள். இந்த விதமாகக் கிருஷ்ணலீலைக் கதைகளையெல்லாம் நடித்துப் பார்க்கிறார்களாம். இப்படி உயிர்தரித்திருந்தார்களாம் கண்ணனைப் பிரிந்த கோபியர்கள்.

அதுகண்ட கண்ணன் திடீரென்று மறுபடியும் காட்சியளித்தான். தாமரைபோன்ற முகம் புன்முறுவலுடன் மீண்டும் அவர்களை நோக்கியது. அந்த நோக்கும் முறுவலும் அவர்களுடைய தாபத்தையெல்லாம் உடனே போக்கிவிட்டது. 'பிரிவுதானே இப்போது இவ்வளவு ஆனந்தம் தருகிறது' என்று மறுபடியும் பரமானந்தத்தின் எல்லையில் போய் நின்றார்களாம்.

'ஆய்ச்சியர் குரவை' என்ற தலைப்பில் சிலப்பதிகாரத்தில் காணப்படும் பாடல்களிலிருந்து குரவைக்கூத்துக் கதை பண்டைத் தமிழகத்தில் எவ்வளவு பிரசித்தமாயிருந்தது என்பதை நாம் ஊகித்துக் கொள்ளலாம். கண்ணனின் தேவிமார்களில் இராதையின் ஸ்தானத்தில் நப்பின்னைப் பிராட்டியை வைத்துக்கொண்டது தமிழர்களின் மனோபாவம்.

கீத கோவிந்தம் முதலியன

ஜயதேவரின் கீதகோவிந்தம் வடநாட்டில் பிரசித்தமாக இருப்பதுபோல் தமிழ் நாட்டிலும் பிரசித்தமாகிவிட்டது. இராதை கண்ணன் தோழி என்ற மூவரைக் கதாபாத்திரங்களாகக் கொண்டது கீதகோவிந்தம் என்பதும் பிரசித்தமான செய்தி. இராதை

ஜீவாத்மா, கண்ணன் பரமாத்மா என்ற தத்துவப் பொருளும் பிரசித்தமானதுதான். தோழி ஆசாரியனைக் குறிக்கிறாள் என்பதும் பக்தர்கள் அறிந்ததே. கீதகோவிந்தத்தின் உட்பொருளுக்கும் ஆண்டாள் பாடல்களின் உட்பொருளுக்கும் சாராம்சத்தில் ஒற்றுமை உண்டு. நம்மாழ்வார் பாடிய திருவிருத்தத்தின் உட்பொருளும் கீதகோவிந்தத்தின் உட்பொருளை நினைவூட்டுவதுதான்.

வடநாடு சிந்தனைக்குப் பேர்போனது என்றும், தென்னாடு கலைகளுக்குப் பேர்போனது என்றும் கவி இரவீந்திரநாதர் கூறியிருப்பது மிகவும் பொருத்தமானதே. பரமாத்மா—ஜீவாத்மாவைப் பற்றிய உபநிடத சிந்தனைகள் ஆழ்வார்கள் வாக்கிலே கலை உருவம் கொண்டு மாறிப் பிறந்தன. எனவே, இத்தகைய கலை உருவத்தை நாம் ஜயதேவரின் கீத கோவிந்தத்தில் காணும்போது, ஆழ்வார்களின் வாக்கில் நாம் காணும் நாயக நாயகி பாவம்தான் கீதகோவிந்தத்தில் எதிரொலிக்கிறது என்று துணியக்கூடுமல்லவா?

ஸ்ரீ கிருஷ்ண கர்ணாமிருதத்தில் இத்தகைய எதிரொலிப்பைக் காணலாம். ஆனால் கீதகோவிந்தத்திலும், கிருஷ்ண கர்ணாமிருதத்திலும் மட்டுப்படாது பெருகும் காதல் வெள்ளத்திற்கு உரிய கரைகட்டி வைத்திருக்கிறது ஆழ்வார்களின் கலைச்சுவை என்று முடிவு கட்டுவதும் தவறாகாது.

மீராபாயின் பக்திக் காதற் பாடல்களிலும் ஆழ்வார்களின் வாக்கு எதிரொலிப்பதைக் காண்கிறோம். ஆண்டாளின் திருப்பாவையும் திருமொழியும் தமிழகத்திலே பிரசித்தமாயிருக்கின்றன என்பதில் ஐயமில்லை. இன்று திருப்பாவை நம் பொதுமக்களிடையே பரவி இருக்கிறது என்பதிலும் ஐயமில்லை. எனினும் மீராபாயின் பாடல்கள் வட இந்தியாவில், ஆண்டாளின் பாடல்கள் நம் தமிழ்மக்களிடையே பரவியிருப்பதைக் காட்டிலும் அதிகமாய்ப் பரவியிருக்கிறது என்பதை ஒரு மகாவித்வான் ஒரு சமயம் எடுத்துக் காட்டினார். இவர் கூறுவது உண்மைதான். எனினும், காலத்தால் முற்பட்ட ஆண்டாளின் கிருஷ்ணபக்தியே வட இந்திய ஆண்டாளாகிய மீராபாயின் கிருஷ்ண பக்திக்கும் உயிர்நிலையாக இருந்திருக்கவேண்டும். இது இருவர் பாசுரங்களையும் ஒப்பிட்டு ஆராய்வோருக்கு இனிது புலனாகும்.

ஸ்ரீமத் பாகவத புராணத்திலே பத்தாம் ஸ்கந்தத்தில் காணப்படும் கோபிகாகீதம் என்ற பகுதிக்கும் வழிகாட்டியது ஆழ்வார்களின் அருளிச் செயலே என்று கருதும் ஆராய்ச்சியாளர்களும் உண்டு. பாகவத புராண காலம் ஆழ்வார்களின் காலத்துக்கும் பிற்பட்டதே என்பது மேலைநாடுகளிலும் நமது நாட்டிலும் உள்ள ஆராய்ச்சியாளர்களின் துணிபு.

குரவையைப் பற்றிய சில செய்திகள்

குரவைக்கூத்து ஒரு பழமையான விளையாட்டு என்பதற்குப் பண்டைத் தமிழ் நூல்களே தக்க சான்றாகும். இது முல்லைநில மக்களாகிய ஆயர்களிடையே தோன்றியது என்ற ஊகமும் பொருத்தம்தான். 'வடமொழி இலக்கியங்களிலும் நாட்டுப் பாடல்களிலும் குரவை நாட்டியத்தின் பழமை நன்றாகத் தெரிகிறது' என்று திரு. என். பீமபட்டர் என்பார் கூறியுள்ளார். புதைந்து கிடந்து இப்போது அகப்பட்டிருக்கும் விக்கிரகங்களிலும் குரவையின் முத்திரை காணப்படுகிறதாம். இவ்வகைக் கூத்துடன் தொடர்புள்ள சிலைகள் சில லக்னௌ பொருட்காட்சிச்சாலையில் இருப்பதாகவும் ஸ்ரீ பீமபட்டர் தெரிவிக்கிறார்.

கி. பி. முதல் நூற்றாண்டைச் சேர்ந்த சிலை ஒன்றும், மேலே சொன்ன பொருட்காட்சிச் சாலையில் இருக்கிறதாம். தமிழ் நாட்டிலும் கி. பி. முதல் நூற்றாண்டை ஒட்டிய சங்ககாலத்தில்,

மாயோன் மேய
காடுறை உலகம்

என்று சொல்லப்படும் முல்லைநிலத்தில் கிருஷ்ண பக்தர்களான ஆயர்களும் ஆய்ச்சியரும் குரவைக் கூத்தாடினர் என்று ஊகிப்பது தவறாகாது.

'இராஸம் என்பது கூட்டமாய் விளையாடும் ஆயர்களின் உல்லாசப் பொழுதுபோக்கு' என்று விசுவநிகண்டு என்ற வடமொழி நிகண்டு கூறுகிறது. 'வேணிசம்ஹாரம்' என்ற நூலில் ஆசிரியரான பட்டநாராயணர் 'யமுனை ஆற்றின் மணல் திட்டுக்களில், விளை

யாட்டில் கோபித்துக் கொண்டவளை இராஸ இரஸத்தால் சமாதானம் செய்வது' குறித்துப் பிரஸ்தாபிக்கிறார். இந்த இராஸக்கிரீடையை ஜயதேவர் முதலானவர்களும் பிரஸ்தாபிக்கிறார்கள். ஆனால் அந்த இராஸக்கிரீடை வேறு, இன்று பிருந்தாவனத்தில் அதே பெயரால் நடைபெறும் நாட்டியம் வேறு என்கிறார் திரு. பீமபட்டர். இக்கால இராஸ நடனம் முஸ்லிம் ஆட்சிக்காலத்துக் கலைஞர் ஒருவரின் பாணி என்கிறார் இவர்.

பழைய காலத்து இராஸக்கிரீடை ஒருவேளை சிலப்பதிகாரத்தில் குறிக்கப்படுவதும் நம் தமிழ் மக்களிடையே வழங்கிவந்ததுமான ஆய்ச்சியர் குரவையின் பாணிதானா என்பது ஆராய்ந்து பார்க்கவேண்டிய விஷயம்.

அடுத்த கட்டுரை
கோபியர் : கதைகளும் உட்பொருளும்

செய்திகள்

—✻—

திருத்தங்கல் : ஸ்ரீ நின்றநாராயணப் பெருமாள் கோயிலின் திருப்பணியை 31—8—60ல், சென்னை இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திரு. அ. உத்தண்டராமன், ஐ. ஏ. எஸ். அவர்கள் துவக்கிவைத்தார்கள்.

◆ ◆ ◆ ◆

சாத்தூர் : ஸ்ரீ சிதம்பரேசுவர சுவாமி கோயிலில் திருக்குடமுழுக்குத் திருவிழா 9—9—60 முதல் 12—9—60 வரை நடைபெற்றது.

◆ ◆ ◆ ◆

விருதுநகர் : ஸ்ரீ சொக்கநாத சுவாமி கோயிலில் 31—8—60ல் பன்னிருதிருமுறைக் கோயில் விழா நடைபெற்றது. பன்னிருதிருமுறைக் கோயிலினை யானை மீது வைத்து ஊர்வலமாகக்கொண்டுவரப்பட்டது. அதன் பின்னர் சென்னை அறநிலைய நிர்வாகத்துறை ஆணையர் திரு. அ. உத்தண்டராமன், ஐ. ஏ. எஸ். அவர்கள் பன்னிருதிருமுறையைத் திறந்து வைத்து, சொற்பெருக்கும் ஆற்றினார்கள்.

◆ ◆ ◆ ◆

பெருஞ்சேரி : ஸ்ரீ வாகீசுவரசுவாமி கோயிலில் 4—9—60 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு இலுப்பூர் திரு. கே. மாணிக்கவாசகம் அவர்கள் “திருவாசகத்தேன்” என்னும் பொருள் பற்றி விரிவுரையாற்றினார்கள். அதுபோது மாயூரம் ஆரம்ப பாடசாலைகளின் ஆசிரியர்கள் வந்து கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

◆ ◆ ◆ ◆

தேவூர் : ஸ்ரீ தேவபுரீசுவர கோயில் “நவக்கிரஹ மண்டப” அஷ்டபந்தன கும்பாபிஷேகம் 15—9—60ல் சிறப்பாக நடைபெற்றது.

◆ ◆ ◆ ◆

திருக்கண்ணபுரம் : ஸ்ரீ சௌரிராஜப் பெருமாள் கோயிலில் புதிதாக ரூபாய் 70,000 செலவில் நிர்மாணிக்கப்பெற்ற பத்திஉலா மண்டபத்தையும், ஆலயத்திருப்பணியையும், திரு. எம். டி. தியாகராசப்பிள்ளை எம். எல். ஏ., அவர்கள் தலைமையில், சென்னை அறநிலைய நிர்வாகத்துறை, ஆணையர் திரு. அ. உத்தண்டராமன் ஐ. ஏ. எஸ், அவர்கள் திறந்து துவக்கி வைத்தார்கள்.

ஸ்ரீ கிருஷ்ணாவதார விசேஷங்கள்

[மகாவித்துவான் திரு. P. B. அண்ணங்கராச்சார்ய சுவாமிகள்]

முன்னிதழ்த் தொடர்ச்சி

கண்ணபிரானும் நம்பிமூத்தபிரானும்

எம்பெருமான் இராமனாகத் திருவவதரித்தபோது தம்பிமார் மூவருடன் திருவவதரித்தனன். அவனே கண்ணனாய்த் தோன்றினபோது ஓர் அண்ணனைக்கொண்டு தோன்றினன். அவனே பலராமனென்பான். வைணவ சம்பிரதாயத்தில் பலராமனை நம்பிமூத்தபிரானென வழங்குவது மரபு. இராமபிரானுடைய இளையோனான இலக்ஷ்மணனும் கண்ணபிரானுடைய அண்ணனான பலராமனும் ஆதிசேஷனுடைய அவதாரமெனப் படுவர்கள். "சென்றால் குடையாம் இருந்தால் சிங்காசனமாம், நின்றால் மரவடியாம் நீள் கடலுள்—என்றும் புணையாமணி விளக்காம் பூம்பட்டாம் புல்குமணையாம் திருமாற்கு அரவு" என்ற பொய்கையார் பாசுரத்தின்படி எல்லாவகைத் தொண்டுகளையும் புரிவதற்கு உரியனான அரவரசன் ஸ்ரீராமாவதாரத்தில் இளையோனாகத் தோன்றியது பொருந்தும்; அவன் ஸ்ரீகிருஷ்ணாவதாரத்திலும் இளையோனாகத் தோன்ற வேண்டியது தக்கதாயிருக்க, அண்ணனாகத் தோன்றியது ஏன்? எனில்; இங்குப் பெரியார் கூறுவதொன்றுண்டு;—

ஸ்ரீராமாவதாரத்தை முடித்துக்கொண்டு திருநாடு சென்று புக்க திருமால் மீண்டுமொருகால் மண்ணின் பாரம் நீக்குதற்கு மண்ணுலகில் வந்து தோன்றத் திருவுள்ளம் பற்றித் தனது சயனமான திருவனந்தாழ்வானை உடனழைக்க, அதற்கு அவன் 'முன்னொருகால் நான் கூடவந்து பஞ்சவடி முதலானவிடங்களில் நீர் வருந்திக்கிடக்க, உம்மை நான் தேற்றப்பட்ட பாடுகள் போதுமே; நான் இங்கிருந்தே தொண்டு புரியக்கடவேன்; நீர் சென்று வாரும்' என்று சொல்ல, அதற்குப் பெருமான் 'சேஷனே! அப்போது நீ தம்பியாகப் பிறந்ததனால் சிரமப்பட நேர்ந்தது; இப்போது தம்பியாகப் பிறக்க வேண்டா; தமையனாகப் பிறக்க வருவாயாக' என்று சொல்லி விளிக்க, அதனைச் செவியுற்ற திருவனந்தாழ்வான் 'அடிமையே வடிவான நமக்குத் தம்பியாகப் பிறத்தலொழியத் தமையனாகப் பிறத்தல் தகுதியற்றதாயினும், முன்னவதாரத்தில் தம்பியாய்ப் பிறந்து செய்த காவல்தொழிலை இப்போது தமையனாய்ப் பிறந்து செய்வோம்; எவ்வகையிலும் நமது சேஷத்துவத்திற்குக் குறையில்லாதபடி நடந்து கொள்வோம்' எனக் கருதி இவ்வவதாரத்தில் அண்ணனாய் வந்து தோன்றினனாயிற்று.

கண்ணபிரானுடைய திவ்விய சேஷ்டிதங்கள் மிகவினிமை பெற்றதற்குக் காரணம் பலராமனோடு சேர்க்கையேயென்று வேதாந்த தேசிகனார் திருவுள்ளம் பற்றுகிறார்; அவர் தசாவதாரத் தோத்திரத்தில் பலராமனைத் துதிக்கும் சுலோகத்தில் "க்ஷீரம் சர்க்கரயேவ யாபிரப்ருதக் பூதா: ப்ரபூதைர் குணை: ஆகௌமாரகமஸ்வதந்த ஜகதே கிருஷ்ணஸ்ய தா: கேலய:" என்றருளினர். பாலானது இயற்கையாகவே இனியதாயினும் சர்க்கரையோடு கூடி மிகமிக வினிதாமாப் போலே கண்ணபிரானுடைய பாலப்பிராயமே பிடித்துண்டான விளையாடல்கள் பலராமனுடைய சேஷ்டைகளோடே கூடி மிகவினிமை பெற்றன வென்பது இதன் கருத்து. பலராமனும் கண்ணனும் ஒருவரை யொருவர் விட்டுப் பிரியாதே கூடியிருந்து குளிர்ந்தவர்கள். அந்தச் சேர்த்தியழகைப் பெரியாழ்வார் "முன்னலோர் வெள்ளிப் பெருமலைக்குட்டன் மொடுமொடு விரைந்தோடப் பின்னைத் தொடர்ந்ததோர் கருமலைக்குட்டன் பெயர்ந்தடி யிடுவதுபோல், பன்னியுலகம் பரவி யோவாப் புகழ்ப் பலதேவனென்னுந் தன்னம்பியோடப் பின்கூடச் செல்வான்" என்று அநுபவித்தார். அவர் திருமகளாரான ஆண்டாளும் "பட்டி மேய்ந்தோர் காரேறு பலதேவற்கோர் கீழ்க்கன்றாய்" என்று அழகுபடப் பேசினாள்.

கண்ணபிரானோடு பலராமன் கூடியிருந்திலனாகில் கண்ணபிரானுக்கு அபாயங்கள் அபரிஹார்யமாகுமென்று கூரத்தாழ்வான் திருமகனாரான பட்டர் கூறுகின்றார். ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் பலராமாவதாரத்தைப்பற்றி அவர்தாமியற்றிய சுலோகத்தில் "யத்விச்லேஷலவோபி காளியபு வே கோலாஹலாயா பவத்" என்றருளிச் செய்தது காண்க. ஸ்ரீவிஷ்ணு புராணத்தில் காளிய மர்த்தனம் கூறத் தொடங்கிய பராசர பகவான் "ஏகதா து விநா ராமம் கிருஷ்ணோ ப்ருந்தாவநம் யயௌ" என்றார். கண்ணபிரான் நாடோறும் பலராமனோடு கூடவே விருந்தாவனம் செல்வது வழக்கம்; ஒருநாள் அவனை விட்டுத் தனியே சென்றான்; அன்றுதான் காளியன் பொய்கை கலங்கப் பாய்ந்திட்டது. "தமையன் ஒருநாள் பேரநிற்க, தம்பி பாம்பின் வாயிலே புகும்படியாயிற்று" என்பது பெரியவாச்சான்பிள்ளை ஸ்ரீஸூக்தி. இதையே காட்டுவது மேலே யுதாஹரித்த பட்டர் ஸ்ரீஸூக்தி.

பலராமனுக்குத் திருவாய்ப்பாடியில் நல்ல பெயர். அவன் வம்புதும்பு சேஷ்டைகளொன்றும் செய்வதில்லையென்று ப்ரஸித்தி. இதனை "மைந்நம்பு வேற்கண் நல்லாள் முன்னம்பெற்ற வளைவண்ண நன்மாமேனி தன்னம்பி நம்பியுமிங்கு வளர்ந்தது அவனிவை செய்தறியான்" [பெரிய திருமொழி 10-7, 4.] என்று ஆய்ச்சிகள் சொல்லுவர்கள். அவ்வாய்ச்சிகள் "அண்ணற்கண்ணானோர் மகனைப்பெற்ற அசோதை நங்காய்!" என்று யசோதைப் பிராட்டியை விளிப்பர்கள். 'அண்ணாற் கண்ணான்' என்பதற்கு இருவகையாகப் பொருள் பணிப்பர்; 'அண்ணல் கண்ணான்' என்று பிரித்து இவனே ஸர்வஸ்வாமியென்று கோட்சொல்லித் தரவல்ல திருக்கண்களையுடையவன் என்பது ஒருபொருள்; 'அண்ணற்கு அண்ணான்' என்று பிரித்து, அண்ணலான பலராமனுடைய சாதுத் தனத்திற்குச் சேர்ந்திராதவன் என்பது மற்றொரு பொருள். தீம்புசெய்ய அறியான் அவன்; தீம்பிலே தகணேறுமவன் இவன். நந்தகோபாலனுக்கு ஏற்றம் சொல்லுகிற ஆண்டாள் "கொந்தளமாக்கிப் பரக்கழித்துக் குறும்பு செய்வானோர் மகனைப் பெற்ற நந்தகோபாலன்" என்கிறாள்.

கண்ணனது தீம்புகளில் சில

கண்ணபிரான் தீம்புகள் செய்ய ஆயர் மனைகளிலே புகுவன். வீட்டிலுள்ளார் புழைக்கடைப் பக்கமாக இருக்கும் ஸமயம் பார்த்து தயிர் பால் நெய் வெண்ணெயுள்ள அறையிலே புக்குக் குடைசமிடுவன். சத்தங் கேட்டு ஓடிவந்து 'பயலே! யார் நீ?' என்று கேட்டால் 'பலராமன் தம்பி நான்' என்பனும். 'பலராமன் யோக்யனாகையாலே இவனும் யோக்யனாகவேயிருப்பன்' என்றெண்ணிக்கொண்டு போய்விடட்டுமவர்கள் என்பது கண்ணன் கருத்துப்போலும். இங்குக் கர்ணம்ருதமான சுலோகமொன்றைச் சிறிது துரைப்போம்;

> "கஸ்த்வம் பால,! பலாநுஜ', கிமி
> ஹதே, மந்மந் திராசங்கயா,
> யுக்தம் தத் நவநீத பாண்ட விவ
> ரே ஹஸ்தம் கிமர்த்தம் ந்யதா : ?,
> மாத:! கஞ்சந வத்ஸகம் ம்ருக
> யிதும், மாகா விஷாதம் க்ஷணாத்,
> இத்யேவம் வநவல்ல வீவ்யவஹ்ரு
> த: க்ருஷ்ணஸ் ஸ புஷ்ணாதுந:."

—கோபீக்ருஷ்ண ஸம்பாஷணை

[ஒருத்தியின் வீட்டினுள்ளே புகுந்து வெண்ணெய்க்குடத்தினில் கையிட்ட கண்ணனைக் கண்டு கோபி கேட்பதும் கண்ணன் விடையிறுப்பதும்.]

கோபி: (கஸ்த் பால!) பயலே! யாரடா நீ?

கண்ணன்: (பலாநுஜ:) நான் தெரியாதா? நான் பலராமன் தம்பியல்லவா?

கோபி: (கிமிஹ தே.) அப்படியா? ஸரி இங்கு எதற்காக வந்தாய்?

கண்: (மந்மந்திராசங்கயா) இப்பாடியில் மனைகளெல்லாம் ஒரே சாயலாயிருப்பதால் என் மனையென்று மயங்கி வந்துவிட்டேன்.

கோபி: (யுக்தம் தத், நவநீதபாண்ட விவரே ஹஸ்தம் கிமர்த்தம் ந்யதா:?) உன் மனையாக மயங்கி வந்துவிட்டது ஸரிதான்; உள்ளே வந்தபின்பு இது உன் மனையன்று என்று தெரிந்திருக்குமே; அப்படியிருக்க வெண்ணெய்த் தாழியினுள் கைவைத்தாயே, அது ஏன்?

கண்: (மாத:! கஞ்சந வத்ஸகம் ம்ருகயிதும்.) ஆய்ச்சி! அதைப்பற்றிக் கேட்கிருயோ? உண்மையுரைக்கின்றேன் கேள்; நான் கன்று கறவைகளை மேய்ப்பவனென்பது உனக்குத் தெரிந்திருக்குமே; அக்கன்றுகளில் ஒரு கன்று எங்கேயோ தவறிவிட்டது; அது இங்கே புக்கு ஒளிந்திருக்கின்றதோ வென்று தேடிப் பார்க்க இந்தத் தாழியிலே கையிட்டேனத்தனை; வேறென்றுமில்லை. இதைக் கேட்ட கோபியானவள் 'பயலே! நீ சொல்லுவது வெகு நன்ருகயிருக்கிறது! கன்றுகுட்டி கெட்டுவிட்டதாம்; அதை வெண்ணெய்த் தாழியில் தேடுகிருயாம்; செய்தி வெகு நன்ருயிருக்கிறது!' என்று சொல்லிக்கொண்டே ஓங்கியடிக்கப் புகுந்தாள். உடனே கண்ணன் அழத் தொடங்கினன். அது கண்ட கோபி 'இது எசோதைக்கு எட்டுமாகில் என்னுகுமோ? என்றஞ்சி,

(மா காவிஷாதம் க்ஷுணுத்) பயலே! அழேலழேல்; உனக்கு வேண்டிய வெண்ணெய் தருகிறேன்; பெற்றுக்கொண்டு அழாதே செல்வாயாக, என்ருள். கண்ணன் வெண்ணெயைப் பெற்று உண்டு மிக மகிழ்ச்சியோடு வெளியேறினன்.

களவு செய்து உரலோடு பிணிப்புண்ட சரிதையிலுள்ள விசித்திரம்

திருவாய்ப்பாடியில் கண்ணன் ஆயர் மனைதொறுஞ் சென்று வெண்ணெய் பால் முதலியவற்றைக் களவாடியுண்பனே; ஒரு நாள் ஒருத்தி வீட்டில் அங்ஙனம் ஏகாந்தமானவோர் அறையில் அவன் களவு செய்து கொண்டிருக்கக் கண்டவோர் ஆய்ச்சி அவனைப் பிடித்து உரலோடு பிணைத்துவிட்டு அச் செய்தியை யசோதையிடஞ் சொல்லி முறையிட வேணுமென்று ஓடிப்புக, அப்போது யசோதை தன் குழந்தையான கண்ணனைத் தான் தன்னிடுப்பிலே கொண்டிருப்பதைக்கண்டு இவ்வாய்ச்சி வாய் திறக்க மாட்டாதே வெள்கி வாளா நின்ருெழிந்தாளென்று சிலர் கதை கூறுவதுண்டு; பிள்ளைப் பெருமாளையங்கார் தமது அஷ்டப் பிரபந்தத்துள் ஒன்ருகிய திருவரங்ககத்துமாலையில் கூறியுள்ள கதை அதனிலும் விசித்திரமாகவுள்ளது. (அதாவது) அவ்வாய்ச்சி தன் வீட்டில் கண்ணனை உரலோடு கட்டிவிட்டு யசோதை பக்கலில் முறையிட வரும்போது தன் குழந்தையை இடுப்பிலே வைத்துக் கொண்டு வந்தாளாம். 'யசோதாய்! உன் மகனுடைய செய்தியை என் வீட்டிலே வந்துபார்' என்று சொல்ல வாய் திறக்கும் போதே கண்ணபிரான் மாயையினல் அவ்வாய்ச்சியின் இடுப்பிலுள்ள பிள்ளை தானுகவும், அவளது வீட்டில் கட்டுண்டு கிடக்கும் பிள்ளை அவளுடைய மகனுகவும் ஆய்விட்டதாம். இதற்குச் செய்யுள் வருமாறு;

"உன்னைக் களவிலுரலோடு கட்டி
வைத் துன்னுடைய
அன்னைக் கொருத்தி யறிவித்த
போது, அலையாழி மங்கை
தன்னைப் புணர்ந்தருள் தாரரங்கா!
அவள்தன் மருங்கில்
பின்னைக் கொடு சென்ற பிள்ளைம
ற்ருரென்று பேசுகவே,"

என்பதாம்.

[தொடரும்]

நீடாமங்கலம்: ஸ்ரீ சந்தானராமசாமி வகையரு கோயிலில், ஸ்ரீ காசிவிசுவநாத சுவாமி ஆலயம் ஸ்ரீ சந்தான ராமசாமி ஆலயம் திருப்பணிகளை சென்னை அறநிலைய நிர்வாகத்துறை ஆணையர் திரு. அ. உத்தண்டராமன், ஐ. ஏ. எஸ். அவர்கள் 14-9-60ல் தொடங்கிவைத்தார்கள்.

திருநாங்கூர்: ஸ்ரீ செம்பொன் அரங்கநாதர் கோயிலில் 25—8—60ல் பாலாலய பிரதிஷ்டை நடைபெற்றது.

மதுரை: ஸ்ரீகாமாட்சி ஏகாம்பரேசுவரர் கோயில் நவராத்திரி திருவிழா 21—9—60 முதல் 1—10—60 வரை நடைபெற்றது.

யாக குண்டங்களுக்குத் தனித்தனி சாமான்கள் கொடுத்தல்

1 OCT 1960

அஷ்டபந்தன மருந்து இடித்தல்

OCT 1960



ஓமகுண்டங்களுக்கு உபயோகிக்கப்பட்ட 31 வகை சமித்துக்களில் ஒருவகை

அன்னதானத்திற்குப் பொட்டலம் தயாரித்தல்

நற்கலைகளின் பொற்சிகரம்

(மறைப்பொருளும் செந்தமிழும்)

[பி. ஸ்ரீ.]

பண்டைத் தமிழர்களும் வட இந்தியர்களைப்போல் மறைகளைப் போற்றினார்கள். நான்கு வேதங்களையும் 'பண்டாய நான்மறை' என்றார்கள். 'எழுதாக் கிளவி' (எழுதாத சொல், அதாவது, சுருதி) என்றார்கள். 'எழுதாக் கற்பு' என்றும் கொண்டாடினார்கள். எனவே, நாளடைவில் மறைப்பொருள் செந்தமிழுடன் ஒன்றுபட்டுத் தமிழ் மறை என்ற வைணவர்களின் திவ்யப் பிரபந்தங்களாக வெளிப்பட்டது பொருத்தமே.

வேதமும் பக்தியும் (பக்திக்கு வித்து)

வேதத்தில் பக்தி காணப்படுகிறதா என்று கேட்பவர் உண்டு. இதற்கு விடையாக டாக்டர் ஏ. ஸி. போஸ் என்ற அறிஞர் ஒருவர் 'வேதங்களில் பக்திமதம்' என்ற தலைப்புடன் அண்மையில் ஒரு பத்திரிகையிலே கட்டுரை ஒன்று எழுதியிருக்கிறார். வேதமந்திரங்கள் வேள்விகளிலும் சடங்குகளிலும் உபயோகிக்கப்படுகின்றனவே என்பதுதான் மேலே சொன்ன கேள்விக்கும் ஐயப்பாட்டுக்கும் ஒரு முக்கிய காரணமாகும். வேதபாஷை நாளடைவில் நன்குணரப்படாத பண்டைப் பழம் பாஷை ஆகிவிட்டதாலும், வேத மந்திரங்களின் பொருள் பலருக்கும் தெரியாமல் போய்விட்டது. வேத மந்திரங்களுக்குப் பொருள் தெரியவேண்டிய அவசியமும் இல்லை. அந்த வேதகீத நாதமே போதும் பலன் தருவதற்கு என்ற அபிப்பிராயமும் காலப் போக்கில் மக்கள் உள்ளங்களில் இடம்பெற்று விட்டது. ஆகவே, வேதமந்திரங்கள் பக்திக்கு ஒரு மூலபொக்கிஷம் என்ற கருத்தே மறைந்துபோய் விட்டது.

வேத மந்திரங்கள் பெரும்பாலும் பிரார்த்தனை வடிவில் அமைந்திருக்கின்றன. அந்த மந்திரப் பொருளை ஊடுருவிக்கிடக்கிறது பக்தி என்ற பேரன்பு. பின்னாளில் பக்தர்கள் இஷ்ட தேவதையை ஒருமுகமாய் வழிபடுவதே சிறந்த பத்திவழி என்று கருதினார்கள். வேத முனிவர்களோ, பல பெயர்களாலும் பல வழிகளாலும் தெய்வத்தைத் தியானிக்கலாம் என்று கருதுவாராயினர். அவர்கள் பல தேவர்களை வழிபட்டபோதிலும், தெய்வம் ஒன்றே என்ற உண்மையையும் உணர்ந்திருந்தார்கள். இத்தகைய சமரச நன்னிலையை ஏறக்குறையப் பண்டைத் தமிழ் நூல்களிலும் காண்கிறோம்.

பக்தி மதத்தில் சரணாகதி தர்மம் என்ற உயிர் நிலைக்கொள்கையைக் காண்கிறோமல்லவா? 'அவன் அருளால் அவன் தாள்வணங்'கும் முறைதான் இது. இம்முறையை வேதங்களிலும் காண்கிறோம் என்பதற்கு ஆதாரங்களைக் காட்டியிருக்கிறார் டாக்டர் ஏ. ஸி. போஸ். இத்தகைய சரணாகதி தமிழகத்தில் ஆழ்வார்-நாயன்மார் காலத்தில் வெகு பிரசித்தமாக இருந்தபோதிலும், சங்க இலக்கியங்களும் ஓரளவு இந்த முறையைச் சுட்டிக் காட்டுகின்றன எனலாம். இது வைணவத்தின் உயிர்நிலை அம்சம் என்பதை அறியாதார் இல்லை.

வேத காலத்து மக்கள் சுறுசுறுப்பாக வாழ்ந்தார்கள் என்பதையும், அவர்கள் வீர மனப்பான்மை உள்ளவர்கள் என்பதையும் டாக்டர் போஸ் குறிப்பிடுகிறார். தங்கள் வீர உணர்ச்சிக்கும் சுறுசுறுப்பான வாழ்க்கைக்கும் அவர்கள் கடவுள்—நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டிருந்தனர் என்பதையும் சுட்டிக் காட்டுகிறார் இந்தக் கட்டுரை ஆசிரியர்.

பண்டைத் தமிழர்களும் சுறுசுறுப்பாக வீரவாழ்க்கை வாழ்ந்தவர்களே. ஆனால் அவர்கள் உள்ளத்தைப் பக்தியைக் காட்டிலும்

லௌகிக புத்தியே ஆட்கொண்டது. எனினும் கடவுள் நம்பிக்கை அந்த மனப்பான்மையையும் வாழ்க்கையையும் ஒருவாறு அரண் செய்தது என்றுகருதுவதில் தவறொன்றும் இல்லை.

வேதகாலத்தில் காணப்பட்ட பக்திநிலை வேதாந்தக் கொள்கையுடன் தமிழகத்தில் நாளடைவில் பரவி வந்து, ஆழ்வார்—நாயன்மார் காலத்தில் உச்சநிலை அடைந்தது. பக்தி என்றால் அன்பு நிறைந்த அந்தரங்க உறவு போன்ற உணர்ச்சிகளைத் தோற்றுவிக்கவேண்டும் என்று பொதுவாகக் கூறுவதுண்டு. தெய்வத்துடன் இத்தகைய அந்தரங்க உறவை ஏற்படுத்திக்கொள்ள முயலும் வேதமந்திரங்கள் உண்டு. ஆனால் இந்தப் பக்தி நிலையைச் சங்க இலக்கியங்களில் சாதாரணமாக நாம் காண்பதற்கில்லை. நாளடைவில்தான் இந்நிலை செந்தமிழுடன் தொடர்புகொண்டு நம் தமிழ்நாட்டில் பரவி வந்திருக்கிறது, சைவ இலக்கிய வடிவிலும் வைணவ இலக்கிய வடிவிலும்.

கடவுளை 'அப்பா!' என்று பக்தர்கள் அழைக்கிறார்கள். 'அம்மையப்பா!' என்று சேர்த்து அழைப்பதும் உண்டு. 'அண்ணா!' என்றும், 'அன்பா!' என்றும் அழைப்பதுண்டு. 'குழந்தாய்', என்று கடவுளைக் கூவியழைப்பதும் உண்டு. இந்த நிலைகளையெல்லாம் வேதமந்திரங்களில் காணலாம் என்கிறார் டாக்டர் ஏ. ஸி. போஸ். ஆனால் இப்படிக் கடவுளுக்கும் மக்களுக்கும் உள்ள தூரத்தை அதிசமீபமாக்கிக்கொண்ட நிலைமை தமிகழத்தில் ஏற்பட்டது ஆழ்வார்—நாயன்மார் காலத்திலேதான். அம்மையப்பனாகக் கடவுளை வழிபடுவதுதான் ஆழ்வார்களின் திருமால் வழிபாடு திரு என்ற இலட்சுமியுடன் சேர்ந்து காட்சி வழங்கும் விஷ்ணுவே திருமால்.

'அண்ணா!' என்று திருமங்கை மன்னன் திருவேங்கடமுடையானை (திருப்பதி எம்பெருமானை) அழைப்பது பிரசித்தம். கண்ணனைக் குழந்தையாகக் கொண்டாடுவது மிகவும் பிரசித்தமானது. கடவுளை அன்பனாகவும் காதலனாகவும் வழிபடுவதும் பிரசித்தமான செய்தி. ஆனால் வேதங்களில் வேரூன்றி வளர்ந்து நிற்கும் இத்தகைய பக்திக் கொள்கை நாளடைவில் தமிழகத்திலே பரவிப் பரவி வளர்ந்து வளர்ந்து ஆழ்வார்களின் காலத்திலே உச்சநிலையை அடைந்திருக்கும் கொள்கைதான்.

பலனைக் கருதாது கடவுள்மீது அன்பு செலுத்தவேண்டும் என்ற பெருங் கொள்கையையும் வேதமந்திரங்களில் காண்கிறோம். இக்கொள்கையும் பின்னாளில் தமிழகத்தில் பெரிதும் பரவியதுதான். பக்தனுடைய அன்பைக் காட்டிலும் கடவுள் நம்மீது செலுத்தும் அன்பு அதிகம் என்ற கொள்கையும் ஆழ்வார்—நாயன்மார் காலத்தில் தமிழகத்திலே பிரசித்தமாகிவிட்ட கொள்கைதான்.

வேதகாலத்துப் பக்தியே பிற்காலத்தில் விஷ்ணு பக்தியாக இந்நாட்டிலும் பரவியிருக்க வேண்டும். வேதம் இந்திரனை இரட்சகனாகவும் வீரத்தலைவனாகவும் அன்பிற்கு எளியவனாகவும் கூறுகிறது ஒரு மந்திரத்திலே. இந்திரன் முதலான பெயர்கள் எல்லாம் பரமாத்மாவாகிய திருமாலைக் குறிப்பதுதான் என்பது வைணவர்கள் கருத்து.

தமிழும் பக்தியும்

வேதத்தின் பொருளையும் செந்தமிழையும் ஒன்றாகச் சேர்த்து ஆழ்வார்கள் தங்கள் தமிழ் மறையை ஆக்கினார்கள் என்பது வைணவர்களின் தேர்ந்த கொள்கை. வேதத்தின் உச்சநிலையாகிய உபநிடதங்களை வேத சிரம் என்றும், வேதசிகரம் என்றும் கூறுவதுண்டு. உபநிடதங்கள் கூறும் வேதாந்தப் பொருளை 'மறையின் குருத்தின் பொருள்' என்கிறார் 'இராமாநுச நூற்றந்தாதி'யின் ஆசிரியரான அமுதனார். இப்பொருளையும் செந்தமிழையும் 'கூட்டி ஒன்றத்திரித்து அன்று எரித்த திருவிளக்கு' எமது பொய்கையாழ்வாரின் பிரபந்தம் என்று பெருமிதம் தோன்றப் பாடியிருக்கிறார். இவரது இராமாநுச நூற்றந்தாதியைப் 'பிரபன்ன காயத்திரி' என்று வைணவர்கள் போற்றுகிறார்கள்.

இப்படி முதலாழ்வாரைப் போற்றுகிறவர்கள் நம்மாழ்வாரை வேதம் தமிழ் செய்தவர் என்கிறார்கள். 'அருமறைகள் தமிழ் செய்தான்' என்று நம்மாழ்வாரைக் குறிப்பிடுகிறார் ஸ்ரீவேதாந்த தேசிகர். மறைப்பொருளும் செந்தமிழ்ப் பொருளும் ஒன்றுபட்ட ஞானசிகரம் நம்மாழ்வார் என்பது குறிப்பு இந்த ஆழ்வாரைக் குலபதி அல்லது தலைவராகக் கொண்டிருக்கும் வைணவர்களை உபய வேதாந்திகள் என்று குறிப்பிடுவதுண்டு. வடமொழி வேதாந்தமும் தமிழ் வேதாந்தமும் இவர்களுக்கு உரியன என்பது கருத்து.

சங்க இலக்கியங்களிலேயே வைணவத்தின் தொன்மை புலனாகின்றது என்பது உண்மைதான். 'பாம்பணைப் பள்ளி அமர்ந்தோன்' என்று திருவெஃகா (காஞ்சீபுரத்தின் எல்லையில் உள்ள கோயில்) வில் உள்ள திருமால் பத்துப்பாட்டில் ஒன்றாகிய பெரும்பாணாற்றுப் படையில் குறிக்கப்பெற்றிருப்பதும், பிறசான்றுகளும் வைணவத்தின் தொன்மையைச் சுட்டிக் காட்டுவனவே. திருமால் உலகம் அளந்த கதை முதலியன சங்ககாலத்தில் பிரசித்தமாக இருந்ததும் வைணவத்தின் தொன்மைக்கும் பெருமைக்கும் சான்றுதான். எனினும், மறைப்பொருள் காலப் போக்கில் மெல்ல மெல்லச் செந்தமிழுடன் கலந்து உறவாடி வைணவமாக விரிந்திருக்கிறது என்பது திண்ணம்.

தமிழகத்தில் வளர்ந்த வைணவம் 'ஸ்ரீவைஷ்ணவம்' என்று சிறப்பித்துப் பேசப் படுகிறதல்லவா? இதன் சிறப்பை முன்னிட்டு, 'பக்தியே தென்னாட்டில் தோன்றியது' என்று கருதும் வடமொழியாளரும் உண்டு.

மறைப்பொருளையும் செந்தமிழையும் ஒன்றுபடச் செய்து வைணவமாக்கிய ஆழ்வார்களை 'அந்தமிழால் நற்கலைகள் ஆய்ந்துரைத்த ஆழ்வார்கள்' என்கிறார் மணவாள மாமுனிகள். அழகிய செந்தமிழோடு சேர்ந்ததும் வேத—வேதாந்த சிந்தனைகள் ஆழ்வார் கொள்கைகள் என்ற 'நற்கலைகளி' ஆகப் பரிணமித்து விட்டனவாம்.

இந்த 'நற்கலைகளி'ன் பொற்சிகரம்தான்,

அருமறை துணிந்த
    பொருள்முடிவை இன்சொல்
அமுதொழுகு கின்ற
    தமிழினில் விளம்பி

யருளிய சடகோபன் என்ற நம்மாழ்வாரின் திருவாய்மொழி என்ற தமிழ்வேதம்.

அண்ணாமலையார் தீபம்

திருவண்ணாமலை : சார்வரி ஆண்டு கார்த்திகை மாதம் 16-ந்தேதி (1—12—1960) பரணி 29.46 இருக்கிறது. அகஸ். 28.32 அமைந்திருக்கிறது. அன்று தினம் அஸ்தமன காலத்தில் பரணி இருந்தாலுங்கூட சில பஞ்சாங்கங்களில் அன்று அண்ணாமலையார் தீபம் குறிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீ அண்ணாமலையார் தீப தரிசனத்துக்கு முக்கியமாக அஸ்தமன காலத்தில் கிருத்திகை இருக்கவேண்டும். அதுவும் பௌர்ணமி திதியை அனுசரித்ததாயிருப்பது விசேஷம். 2—12—1960 வெள்ளிக்கிழமை, கிருத்திகை 33.02 இருப்பதாலும் அன்று தினம் பௌர்ணமியுடன் சேர்ந்து உதயவியாபினியாய் அஸ்தமன காலத்திற்குப் பிறகும் கிருத்திகை இருப்பதாலும், பகல் தீர்த்தவாரி காலத்திலும் அன்று தினமே ஸ்ரீ அண்ணாமலையார் ஜோதி ஸ்வரூப தரிசனம் நடைபெறும். கார்த்திகை தீப பிரம்மோற்சவ விழா 23—11—60 முதல் 2—12—60 வரை நடைபெறும்.

◆ ◆ ◆ ◆

சென்னை : ஸ்ரீ சென்னமல்லீசுவரர் கோயில் நவராத்திரி விழாவில் சமயச்சொற்பொழிவுகளும், இன்னிசையரங்கும் 21—9—60 முதல் 30—9—60 வரை நடைபெற்றது. ஸ்ரீ சென்னகேசவப்பெருமாள் கோயில் நவராத்திரி விழாவில் 21—9—60 முதல் 29—9—60 வரை சமயச்சொற்பொழிவுகளும் இன்னிசையரங்குகளும் நடைபெற்றன.

◆ ◆ ◆ ◆

கோலியனூர் : ஸ்ரீ வாலீசுவரசுவாமி கோயிலில் 5—9—60ல் வாரவழிபாட்டுக் கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. தலைவர், தருமபுரஆதீனம் திரு. சுந்தரேசத்தம்பிரான் சுவாமிகள், வித்துவான் திரு. சுந்தரேசவாண்டையார் அவர்களும், திரு சேதுசுப்ரமண்யம் அவர்களும், 'திருவாசகத்தேன்' என்னும் பொருள்கள் பற்றி சொற்பொழிவாற்றினார்கள்.

ஆனாய நாயனார்

அலைமலிந்த புனல் மங்கை ஆனாயர்க்கடியேன்

—*சுந்தரர்.*

தாயவன் யாவுக்குந் தாழ்சடை
மேற்றனித் திங்கள்வைத்த
தூயவன் பாதந் தொடர்ந்துதொல்
சீர்துளை யாற்பரவும்
வேயவன் மேன்மழ நாட்டு
விரிபுனல் மங்கலக்கோன்
ஆயவன் ஆனாய னென்னை
யுவந்தாண் டருளினனே.

—நம்பியாண்டார் நம்பி.

சோழவள நாட்டில் கொள்ளிட ஆற்றுக்கு வடபால் உள்ளது மழநாடு என்பது. அது மேல் மழநாடு, கீழ் மழநாடு என்ற இரு பகுதி கொண்டது. மேல்மழ நாட்டிற்கு ஓர் மங்கலமாக திருமங்கலம் என்னும் மூதூர் ஒன்றுண்டு. அவ்வூர் பல வளங்களும் செறிந்தது. அப்பதியில் ஆயர்குலத்தை விளக்கிட வந்த ஆனாயர் என்ற பெரியார் வதிந்தார்; தூயமெய்ந் நீற்றன்பு கொண்டவர்; சிவனடி பேணும் சிந்தையர். ஆனிரை காத்தலைக் குலத்தொழிலாகக் கொண்டவர். பசுக்கூட்டங்களைக் காட்டிற்கு ஓட்டிச்சென்று தீய விலங்குகளினின்றும், நோய்களினின்றும் நீக்கி, நல்ல புல் அருந்தச் செய்து, தூயநீர் குடிக்கச்செய்து அவை அளவில்லாது பெருகுமாறு காப்பாற்றிவருவராயினர். கன்றுகள், கறவை மாறிய இளம்பசுக்கள், பால்கறக்கும் பசுக்கள், சினைப்பசுக்கள், அண்மையில் ஈன்ற பசுக்கள், விடைகள் இவைகள் தனித்தனியேயுள்ள பல தொழுவங்கள் இருந்தன. தமதுகுல ஆயர்கள் ஆனாயர் ஏவல் வழி நின்றனர். இப்பெரியார், சிவபெருமான் திருவடிக்கன்பு பொருந்திய இசையுடனே குழல் வாசித்தலை மேற்கொண்டார். இசை நூல் விதிப்படி அமைத்த குழலில் சிவபெருமானது திருவைந்தெழுத்தையும் ஏழிசையின் சுருதி பெற வாசித்துச் சராசரங்களெல்லாம் தமது கருணை பொருந்தக் குழலிசை யமுதம் அளித்து வருவாராயினர்,

இவ்வாறு ஒழுகி வருபவர் ஒருநாள் கையினில் வெண்கோலும் வேய்ங்குழலும் கொண்டு, கோவலரும் பசுக்களும் சூழ வெளியே புறப்பட்டார். பூங்கொத்துகளும் கனிகளும் நிறைந்த ஒரு கொன்றைமரத்தினை எதிர்கண்டார். அவருடைய மனத்துள்ளே எப்போதும் கண்டுகொண்டிருக்கும் சடையிற் கொன்றை சூடிய சிவபெருமானைப் போலத் தோன்றிற்று. உள்ளம் உருகிற்று; கண்ணீர் பெருகிற்று. அன்பு பொங்க திருவைந்தெழுத்தினையும் உள்ளுறையாக அமைத்து எல்லா உயிர்களும் கரையக் குழலோசை எழுப்பினர்; அதை எங்கும் பரப்பினர். அது கற்பகப் பூந்தேனும் அமுதமும் கலந்து வார்ப்பதுபோல எல்லா வுயிர்களுள்ளும் புகுந்து தேக்கிற்று.

பசுக்களும் காட்டு விலங்குகளும் உணவு மறந்து வந்தணைந்தன; மயிலினமும் பறவையினமும் தம்மை மறந்து வந்து சேர்ந்தன; கோவலரும் தம் செய்தொழிலை மறந்து நின்றனர்; நாகர்கள், அரமகளிர், விஞ்சையர், கின்னரர் முதலிய தேவர்கள் தேவ மாதர்கள் தம் உலகம் விட்டு இசை வயப்பட்டு வந்து சேர்ந்தனர்; பாம்பும் மயிலும், சிங்கமும் யானையும், புலியும் மானும் தம் பகைமறந்து வந்து கூடின; காற்று அலையவில்லை; மரமும் அசையவில்லை; மலை வீழருவிகளும் கான்யாறும் முழங்கியோடவில்லை; வான்முகிலும் வளைகடலும் அசையவில்லை. இவ்வாறு சராசரங்களெல்லாம் இசை வயப்பட்டு இருந்தன.

ஆனாயர் குழலிசை இவ்வுலகத்தையும் நிறைத்து, வானத்தையும் தன் வசமாக்கி, சிவபெருமான் திருச்செவியிற் சென்றடைந்தது. இதைச் சேக்கிழார் பெருமான்,

மெய்யன்பர் மனத்தன்பின் விளைந்த
இசைக் குழலோசை
வையந்தன் னையும் நிறைத்து
வானந்தன் வயமாக்கி
பொய்யன்புக் கெட்டாத பொற்
பொதுவில் நடம்புரியும்
ஐயன்தன் திருச் செவியி
னருகணையப் பெருகியதால்

என்று அழகுபடத் திருவாய் மலர்ந்துள்ளார். அவ்வளவில் சிவபெருமான் உமையம்மையாருடன் இடப வாகனத்தில் எழுந்தருளிக் காட்சிதந்தனர். இந்த குழல் வாசித்தலைக் கேட்க "இந்த நிலையிலேயே நம்மை அணைவாய்" என்றருளிச் செய்தனர். தேவர்கள் பூமழை பொழிய, முனிவர்கள் துதிக்க, குழல் வாசித்த நிலையிலேயே ஆனாய நாயனார் உடன் செல்லச் சிவபெருமான் பொன்னம்பலத்துக்கு எழுந்தருளினர்.

சேக்கிழார் சுவாமிகள் ஆனாய நாயனார் புராணத்தை 42 செய்யுட்களில் பாடியுள்ளார். ஆனாயர் அவதரித்த திருப்பதி திருமங்கலம் என்பது. இது திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் காவிரிக்கு வடகரையில் உள்ளது. மேல்மழ நாட்டுக் கலார் கூற்றத்தில் உள்ள திருமங்கலம் எனக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இவ்வூரில் சிவன் கோயில் ஒன்றிருக்கிறது. அதில் ஆனாயர் உருவம் இருக்கிறது. சிவபெருமானின் பெயர் திருமழுவுடைய நாயனார் என்று கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன. மழு-பரசு-உழு கருவி. மழுவிலிருந்து மழவர் நாடு, மழநாடு என்ற பெயர்கள் வந்திருக்கலாம்.

மங்கலமா மழநாட்டு மங்கல மாநகருள் மருவுபுகழ்
ஆனாயர் வளரா மேய்ப்பார்
கொங்கலர் பூந்திருக்கொன்றை மருங்கு சார்ந்து
குழலிசை யினைந்தெழுத்துங் குழையவைத்துத்
தங்கு சராசரங்க ளெல்லா முருகாநிற்பத் தம்பிரான்
அணைந்து செவி தாழ்த்தி வாழ்ந்து
பொங்கியவான் கருணை புரிந்தென்று மூதப் போதுக
என்றருள வுடன் போயினரே.

—உமாபதி சிவாசாரியார்.

செய்திகள்

—✻—

வடபழநி : ஸ்ரீ வடபழநி யாண்டவர் கோயிலில் இவ்வாண்டு ஆடி மாதத்தில் நடந்த இரண்டு கிருத்திகை தினங்களில் மட்டும் 8400 அர்ச்சனைகளும், 9000 தீபாராதனைகளும் நடந்தேறின. கந்தர்சஷ்டி இலட்சார்ச்சனைப் பெருவிழா 25-10-60 வரை சிறப்பாக நடைபெறும். அவ்வமயம் சிறந்த சமயச் சொற்பொழிவுகளும் இன்னிசை அரங்கும் நடைபெறும். சென்ற ஆண்டு 6 தின இலச்சார்ச்சனைத் திருவிழாவில் 950 டிக்கட்டுக்கள் விற்கப்பட்டு ஒன்பது இலட்சத்து ஐம்பதினாயிரம் அர்ச்சனைகள் நடந்தேறின. ஷை கோயிலின் முன்புறத்தில் ஸ்ரீ சுவாமிமலைக் கோயிலில் இருப்பதைப் போன்று 16 கால் மண்டபம் கட்ட வேலை ஆரம்பித்து மிக விரைவாக நடந்து வருகிறது. ஷை கோயிலில் 15-9-60-ல் 16 திருமணங்கள் நடைபெற்றன. திருமண பதிவு ரிஜிஸ்தரும் வைக்கப்பட்டிருக்கிறது இதுவரையில் இக்கோயிலில் ஒரே நாளில் இவ்வளவு அளவில் திருமணங்கள் நடைபெறவில்லை. இதனால் இப்பொழுது கோயில்களில் திருமணம் செய்வது சிறப்பும், சிக்கனமும், தெய்வ அருளும் அடைவதற்கு ஏற்ற சாதனமென்று நமது கனம் மந்திரி அவர்களின் வேண்டுகோளின்படி நமது சமய மக்களுடைய மனதில் ஏற்பட்டிருக்கிறதென்பதற்கு இது ஒரு சான்றாகும்.

தருமபுர ஆதீனம் : ஸ்ரீ மகாலட்சுமி துர்க்கா தேவிக்கு 21-9-60 முதல் 29-9-60 வரை விசேஷ அபிஷேக ஆராதனையுடன் கலைமகள் விழா இலக்கியச் சொற்பொழிவுகளும் நாடகங்களும் சிறப்புற நடைபெற்றன.

ஒப்பிலியப்பன் கோயில் : ஸ்ரீநிவாசப் பெருமாள் கோயிலில் பிரம்மோற்சவம் 21-9-60 முதல் 1-10-60 வரை சிறப்பாக நடைபெற்றது.

திருவிடை மருதூர் : ஸ்ரீ மகாலிங்க சுவாமி கோயிலில் மூன்றாவது ஆண்டு பன்னிரு திருமுறைப் பாராயண விழா 15-9-60 முதல் 17-1-61 வரை நடைபெறும். 18-1-61-ல் திருமுறைச் சொற்பொழிவுகளும் நடைபெறும்.

நவதிருப்பதி அநுபவம்

திரு. K. பட்சிராஜன், B.A., B.L.

நான்காம் பாட்டு

"புளிங்குடிப்பிறந்து.....காணவாராயே".

திருப்புளிங்குடியிலே கண் வளர்ந்து, திருவரகுணமங்கையிலே வீற்றிருந்து, ஸ்ரீ வைகுண்டத்திலே நின்று, நின்னைத் தேறித் தெளிந்த என் சிந்தையுள் நின்றும் அக லாதே நின்று என்னைத் தரிப்பித்து ஆட் கொண்டவனே! எனக்கு விசேஷ கிருபை செய்து உன் குளிர்ந்த சில குணத்தை மூன் றுலகும் கண்டு வியக்கும்படியும், உன் அடியாரான நலங்கள் மகிழ்ந்து நாவலிட்டுக் கூத்தாடவும் எங்கள் மகிழ்ச்சியைக்கண்டு தெளிந்த நீரை உண்ட காளமேகத்தில் பவளக்கொடி படர்ந்தாற்போன்ற உன் செவ்வாய் முறுவலாலே மேலும் சிவக்கும்படி முறுவலோட நீ வந்து நலங்கள் காண ஸேவை சாதிக்கவேணும்.

இப்பாடல்தான் எம்பெருமானுக்குப் பராங்குச நாயகியாகிய ஆழ்வார் பக்குவமா வதில் உண்டான விழைவையும் விரைவை யும் காட்டி நிற்பது எனப் பெரியோர்கள் திருவுள்ளம் பற்றியிருக்கின்றனர் என்று முன்னமே பார்த்தோம். ஆழ்வார் வாக்கி னின்றும் அது அறியக்கிடக்கின்றது என்றும் அவனுடைய இந்த விழைவும் விரைவும் ஆழ் வாரின் பகவத் காம உணர்வுக்கு உணவாகி நின்று வளர்த்தன என்றும் முன் குறிக்கப் பட்டனவல்லவா? இப்பாடல்தான் அதைக் காட்டுகின்றது.

"புளிங்குடி.........எனக்கருளி"

நீ உன் மனத்தே எழுந்த மகிழ்ச்சி தோன்ற புளிங்குடியிலே வந்து சயனித்த தையும், வரகுண மங்கையிலே இருந்ததை யும், ஸ்ரீவைகுண்டத்திலே நின்றதையும் நான் என் முயற்சியினாலா தெரிந்தேன். நீயேயன்றோ என் பக்குவத்தில் உனக்கிருந்த ஆத்திரத்தை என் உளக்கண்முன்னே காட்டினாய். நான் வேண்டியா செய்தாய்? என் மனக்கண் முன்னே காட்சியளித்த நீ என்னை ஆளவேணுமன்றோ. அப்படிக் கின்றி உன் வடிவை ஒளித்துக்கொண்டால் அதைத் தாங்கும் வலியுடையேனோ நான்? எனவே என் அகத்தைவிட்டு நீங்காது என்னை ஆட்கொள்ள வேணும். அதுமட்டு மல்ல, இப்படி உன் பெருமையை எல்லாம் நீ காட்டவே நான் என் தன்மையை நோக்கி உன்னைப் பெற நான் அயோக்யன் (தகுதியற் றவன்) என்று விலகி விடாதபடியும் அருள் செய்யவேணும். என்னை வெகுவாகச் சோதித்துவிடக்கூடாது. நான் தாங்கமாட் டேன் என்கிறார் ஆழ்வார். இவ்விடத்திலே வியாக்யானத்தில் பட்டர் வாழ்க்கையின் நிகழ்ச்சியொன்று ஐதிஹ்யமாகக் காட்டப் பெறுகின்றது.

திருநாராயணபுரத்தில் ஸ்ரீ பட்டர் எழுந்தருளியிருக்கும்போது எதிர்பாராத சில தெய்வ சோதனைகளால் பெரிதும் திருவுள் ளம் வருந்தினார். அவ்வருத்தமடியாகத் தோன்றிய அப்போதைய வெறுப்பிலே எம் பெருமானைத் திருவுள்ளத்திலே நினைந்து அவனை நோக்கி "தேவர் ஸ்வாதந்தர்யமெல் லாம் காட்டினாலும் பின்னையும் பண்ணின விச்வாஸத்தில் குலைதலின்றிக்கே யிருக்கும் படி எலும்பு உரமுடைய எம்பெருமானார் போல்வர் பக்கல் செய்யுமத்தை எலியெலும் பனை அடியேன் பக்கலிலும் செய்வதோ? "மஹா விச்வாஸ பூர்வகம்" என்கிறபடியே ஏதேனும் ஒன்று வந்தாலும் "இங்குத்தைக்கு ஒன்று வருவதாய் வந்ததன்று இதுக்கடி நம் முடைய பாபம்" என்று பண்ணின விச் வாசம் குலையாதார் பக்கலிலே செய்யுமத்தை

இதுதானே ஏதுவாக நெஞ்சு நெகிழும்படி இளநெஞ்சர் பக்கலிலும் அத்தைச் செய்யக் கடவதோ என்கிறார்.

நான் அயோக்யன் என்று அகலாதபடியும் உன் பிரிவாற்றாமையால் முடியாதபடியும் என்னை இதுவரை தரிப்பித்துக்கொண்டு போந்தாய். அதுபோல் இன்னும் செய்து எமக்கு சீவனம் இடவேண்டும்.

''நளிர்ந்த.........காணவாராயே''

'என்னை என்ன செய்யவேண்டுமென்கிறாய்' என்று பெருமாள் வினவுவதாகக் கொண்டு மேல்தம் உள்ளக்கிடக்கையை ஆழ்வார் வெளியிடுகிறார். உன்னுடைய ஸௌசீல்ய ஸௌலப்ய குணங்களை இம்மூவுலகும் கண்டு வியக்கவேணும். அவ்வியப்பிலே நாங்கள் யாவரும் சேர்ந்து கைகோத்துக் கூத்தாட வேண்டும் என்று வேண்டுகிறார் ஆழ்வார். எம்முறையில் நம் ஸௌசீல்யம் வெளிப்படவேண்டும் என்று எம்பெருமான் வினவ 'தெளிந்த நீருண்ட மேகமானது பவளம் பூத்ததுபோல எங்கள் வியப்பையும் மகிழ்ச்சியையும் கண்டு உன் திருமேனியிலே சிவந்து தோன்றும் நின் அதரம் மேலும் சிவந்து தோன்ற நீ மெல்ல அடிமேல் அடி வைத்து மத்தகஜம் போன்ற உனது கம்பீரமான நடையை நாங்கள் காணும்படி வந்தருளவேணும். நீ என் பிரார்த்தனையைத் தலைக்காட்டினாய் என்று உன் சீலத்தை எல்லோரும் கண்டு வியக்கவேணும். வியந்த எங்கள் முகங்களை நோக்கி உன்னிடைத் தோன்றும் புன்முறுவலால் உன் அதரப் பழுப்பு ஏறவேண்டும். வியந்த எங்களை நோக்கி உன் நடையழகு தோன்ற நீ மெல்ல எழுந்தருளவேணும். மாறியிடும் உன் கால்களுக்கிசைய நாங்கள் கூத்தாடவேண்டும். இதுவே அடியேன் பிரார்த்தனை என்கிறார் ஆழ்வார். இவ்விடத்திலும் வியாக்யானத்தில் ஒரு ஐதிஹ்யம் காட்டப்படுகிறது. ''ஒருநாள் பிள்ளை அழகிய மணவாளப் பெருமாள் அரையர் இப்பாசுரத்தை ஸேவிக்க பெரிய பெருமாள் அரையரை அருளப் பாடிட்டு ''நாம் இங்ஙனே நடக்கிறோம். நீ அதுக்கீடாக ஆடிக்காண்'' என்ன 'தம்பிரானே என்றால் அந்நடைக்கீடாக ஆடப்போமோ

கானகம்படியுலாவி யுலாவிக்கருஞ்
சிறுக்கன்குழல் ஊதினபோது
மேனகையொடு திலோத்தமை யரம்பை
உருப்பசியரவர் வெள்கி மயங்கி
வானகம்படியில் வாய்திறப்பின்றி ஆடல்
பாடலவை மாறினர்தாமே

என்றபடி தேவரீருடைய குழலோசை கேட்டவாறே பாடல் தவிர்ந்தார்கள். தேவரீருடைய ஸ்வாபாவிகமான நடைக்கு தங்களுடைய சிக்ஷாபலத்தாலுண்டான ஆடல் தவிர்ந்தார்கள். குரக்குக்கைகொடு கூழ்துழாவி அடியேன் தேவர் திருமுன்னே ஆடவல்லேனோ என்கிறார்.

ஐந்தாம் பாட்டு

''பவளம்போல்.........ஊர்ந்தானே''

நன்கு செறிந்து படர்ந்த பவளத்தின் கீழ் சங்குகள் தங்கும் பொருநைக் கரையிலுள்ள குளிர்ந்த திருப்புளியங்குடியிலே கண் வளர்ந்தருளினவனே! கவளம் உண்கையே இயற்கையாக உடைய பெரிய யானையின் துயரம் நீங்கும்படியாக அது நின்ற பொய்கைக்கு, கொடிய கோபத்தை உடைய உவணப்புள்ளை ஊர்ந்து சென்றவனே! கொவ்வைக்கனிபோன்ற நின் திருவதரம் மேகம்போல் மேலும் சிவந்துதோன்ற உன்னுடைய பற்களாகிய முத்துக்கள் இளநிலாக் கதிர்வீச முறுவல் செய்துகொண்டு நாங்கள் சேவிக்கும்படி நீ வந்து உன் அழகிய திருக்கண்களாகிய தாமரை விளங்கும்படி நின்றருளவேண்டும்.

''பவளம்போல் கனிவாய் சிவப்ப''

''அவாக், அநாதர்'' என்கிறபடி ஒன்றுக்கும் மாறுபடாத அவிகாரன் என்னும் பெயர் பூண்ட நீ அடியார்களாகிய எங்கள் திறத்திலே அது மாறும்படி உன் அடியார்களான எங்களைக் கண்டதாலே உள்ளே எழுந்த நிறைவு என்னும் அகவேறுபாடு உன் முகத்திலே முறுவலாய்த் தோன்ற நிற்கவேணும். அம்முறுவல் இளநிலவின் ஒளி விடவேண்டும். எறிநிலவொளியல்ல. அந்நிலவொளி உன் திருவாயின் உள்ளடங்காதே புறம்பே தவழவேண்டும்.

சமயத்தின் சாரம் நல்லொழுக்கமே — மகாத்மா காந்தி,

"உன்திருக்கண்.........நின்றருளாய்"

உன் அழகிய கண்களாகிய தாமரை ஒளிவிட நீ பைய நடந்துவர உன் நடைக் கேற்றவாறு நாங்கள் கூத்தாடுதல் கண்டு வியந்து உன்கண்கள் ஒளிவிட, விழிநிலைத்து ஸ்வத்தகண் வாங்கமாட்டாதே நீ உன்னை மறந்து நின்றருளவேணும். உன் நடைக்குத் தம் ஆடல் தோற்றார்போன்று எம் பாட லுக்கு நீ நடை தோற்கவேணும்.

"பவளநன் படர்க்கீழ்......கிடந்தாய்"

உன் முறுவல் எப்படி யிருக்கவேண்டும் தெரியுமா? இதோ நீ பள்ளிகொண்டிருக்கும் திருப்புளிங்குடித் துறையிலே செறிந்து படர்ந்த பவளத்திலே சங்குகள் நிரையாய் அணிவகுத்திருக்கின்ற பார்! அவைபோன்று இருக்கவேண்டும். நீ பள்ளிகொள்ளும் தலமே உன் முறுவலைக் காட்டி நிற்கின்றதே. அத்தகைய தலத்தில் பள்ளிகொண்டவனே.

"கவளமாகளிற்றின் . ...ஊர்ந்தானே"

எப்போதும் கவளம் கொள்கையிலே ஆடையுடைத்தான ஆனை. அது ஆயிரம் தேவ வருடம் உணவுமின்றி இடருற்றது. அதன் இடரை நீக்க இருந்த இடத்தி லிருந்தே "விடுத்த திசைக் கருமம் திருத்தும்" திருவாழியை ஏவாதே ஆனை நின்று இடர்ப் பட்ட பொய்கைக் கரைக்கு விரைந்தவனே

"காய்சினப் பறவை"

நீ திருவாழியை ஏவி சங்கரிக்கும் முன்பே தன் கோபத்தாலே தீய்த்து விடுவான் போன்று அடியாரின் விரோதிகள் பக்கல் சினம் கொள்ளும் கருளப்புள்ளை ஊர்ந்து.

"இடர்"

அந்த ஆனையின் இடர்போன்றதே என் இடரும். என்னை முடிக்கவல்லது. ஆனைக் குத் தன் கையில் பிடித்தபூவின் செவ்விமாறி விடுமே என்ற "நெஞ்சிடர்". உன் பாதபங் கயத்தை என்தலைக்கணியாக நீ சேர்த்தருள வில்லையே என்ற இடர் எனக்கு. ஆயிரம் தேவ வருடம் இடரைத்தாங்கும் மனஉறுதி யும் உடல் உறுதியும் இருந்தது யானைக்கு. நான் எலியெலும்பன். இடரைத் தாங்க வல்லேனல்லேன்.

ஆறும்பாட்டு

"காய்சினப்பறவை......கடிவானே"

கொடிய கோபத்தை உடைய கருடனை ஊர்ந்து ஒரு பொன்மலைமேல் மேகம் படிந் ததுபோலக் காட்சிதந்து சுமாலி, மாலியவான் என்ற பிரசித்தமான அரக்கர்கள் போரிலே கெட்டோடும்படி சீறி அவர்முன்னே நின்று அதனால் காய்சினவேந்து என்னும் திருநாமத் தைப் பெற்றவனே! ஒளிவிடும் திருமுடியைத் தரித்தவனே! செழித்த கழனிகளையுடைய திருப்புளிங்குடியில் நித்யவாசம் செய் பவனே! காயும் சினத்தையுடைய திருவாழி முதலிய உன்னுடைய பஞ்சாயுதங்களுடனே எம்மிடர் கடிவதற்காக நீ எங்கள் முன்வந்து நின் திருக்கண் தாமரை தயங்க நின்றருள வேண்டும்.

இப்பாட்டு முன்னைய பாடலின் தொடர்ச்சி என்று கொள்ளவேணும். முன் பாட்டிலுள்ள "நின்றருளாய்" என்றதே இப்பாசுரத்துக்கும் வினை முடிபாகும்.

"காய்சினப்பறவை......கார்முகில் போல்"

உன் பக்தரக்ஷணத்திலே உனக்கு முன்னே பாரிக்குமவனுதலாலே அடியார் இடர் கண்டால் பக்த விரோதிகளிடம் கொதிக்கும் கோபம் கொள்பவனுன வைன தேயன். அவனை ஊர்ந்து பொன்மேனிய னை அவன் தோளில் தேவரீர் ஆரோகணித் தால் அது மேருமலையிலே காளமேகம் படிந் தது போன்ற ரமணீயமான ஒரு காட்சி யல்லவா. அப்படிக் காட்சிதர வேணும். "காய் சினப்பறவை யூர்ந்தானே!" என்றார் முன்பாசுரத்தில். உடனே அவன் புள்ளூரும் காட்சி அவர் மனத்திரையிலே நிழலாடிற்று. அக்காட்சியை வருணிக்கிறார் இப்பாசுரத் திலே.

இராவண வதத்தை யுன்னி தேவர்கள் பெருமானைப் பிரார்த்திக்க 'பரகதி யுணர்ந்த வர்க்குதவும் பண்ணவன்' அவர்கள்முன் தோன்றியதை

"கருமுகில் தாமரைக் காடுபூத்து எழில்
இருசுடர் இருபுறத்தேந்தி ஏடவிழ்
திருவொடும் மருவி ஓர் செம்பொற்குன்றின் மேல்
வருவபோய் கலுழன் மேல்வந்து தோன்றினன்'



கும்பாபிஷேகம் ஒரு பகுதி

1[illegible] OCT 1960

யாகசாலை உக்கிராணத்தில் சிவத்திரு. ஈசானசிவாசாரியர்

சண்முக நதியிலிருந்து யாகசாலைக்கு கும்பநீர் கொண்டுவருதல்

கும்பங்களில் நீர்கொண்டு வரும் காட்சி

என்று வருணிக்கும்போது கம்பர் திருவுள்ளத்திலே இப்பாசுரம் தானே ஓடியிருக்க வேண்டும்!

உத்தரகாண்டம் பாடிய கவியும், சுமாலி முதலியோருடன் பொருவதற்காகக் கருடன் மேல் தோன்றிய பெருமானை

"பொன்னெடு மேருஉச்சிப்
பொருசிலை யோடும்கூட
மின்னொடு தழுவிநின்று
வீங்குகார்மேகம் போன்றான்"

என்று வருணித்தார்.

"மாசினமாலி......வேந்தே"

பெரிய கோபத்தை உடைய சுமாலி மாலியவான் என்ற அரக்கர்களது வலியழிந்து புகைந்து போம்படி அவர்கள் கோபத்துக்கு எதிர்த்தட்டாகத் தானும் கோபத்தை ஏறிட்டுக்கொண்டு. அப்படிக் காயும் சினத்தை மேற்கொண்ட காரணத்தாலே காய்சினவேந்து என்ற திருநாமம் பெற்றவனே. திரிபுவன சக்ரவர்த்தியே!

"கதிர்முடியானே"

உலகை நலியும் துஷ்டர்களைப் படுத்த வெற்றியின் அறிகுறியாகக் கவித்த ஒளி மிக்க திருவபிஷேகத்தை உடையனே.

"கலிவயல் திருப்புளிங்குடியாய்"

செழித்த வயல்கள் சூழ்ந்த புளிங்குடியில் எழுந்தருளியிருப்பவனே. எங்கோ காது கேளாத இடத்தில் இருப்பவனல்லவே.

"காய்சினஆழி......கடிவானே"

ஆனையின் இடரை நீக்க எல்லா ஆயுதங்களையும் நீ கொண்டு சென்றாயில்லை. ஆனால் எம்மிடர் நீங்க எல்லா ஆயுதங்களையும் தரித்து வரவேணும்காண். ஆயுதங்கள் பிரயோகம் செய்யவல்ல. தேவரீருக்கு அணியாக அணிந்து வரவேண்டுவது. முன் ஒருகால் "மண்ணும் விண்ணும் மகிழ கூராராழி வெண்சங்கேந்தி வாராய்" என்று பிரார்த்தித்திருந்தேன். அது போதாது. பஞ்சாயுதங்களையும் தரித்து உன்முடிச் சோதிவிளங்க அவ்வாயுத அணிசோபையோடு நாங்கள் சேவிக்கும்படி எங்கள் முன்னே நின்றருள வேணும்.

ஏழாம் பாட்டு

"எம்மிடர்கடிந்து......முகப்பே"

பிறப்படியாக எமக்கு வரும் எல்லாத் துன்பங்களையும் போக்கி இவ்வுலகிலே எம்மை அடிமைகொள்ளுகிறவனே! இமையவருக்கும் அங்கே அப்படித் தலைவனானவனே சிவந்த மடல் விரியும் தாமரைகளையுடைய நீர் நிலைநிறைந்த திருப்புளிங்குடியிலே பள்ளி கொண்டவனே! உன் அடியார்களின் ஆரவாரத்தைக் கண்டு நாங்கள் மகிழ்ந்து உள்ளத்தில் பிரேமம் பெருக ஞானமற்ற இவ்வுலகத்தாரும் காணும்படி எங்கள் கண் வட்டத்திலே ஒருநாள் இருந்தருளவேணும்.

"எம்மிடர்"

அநாதி காலமாகச் சேர்ந்த பாபமடியாக வந்த எங்கள் துன்பக் குவியல்கள்.

"இங்கு"

உன்னை நாங்கள் அறியவொட்டாதே எங்கள் அறிவை மூடிமறைக்கும் தடைகளே நிறைந்த இந்நிலவுலகிலே.

"எம்மை ஆள்வானே"

உன் அருளுக்குச் சற்றும் பாத்திரரல்லாத எங்களுடைய துன்பங்களை ஒழித்து எம்மை ஆட்கொள்பவனே.

"இமையவர்......அணையாய்"

எங்களை மட்டுமா துயர்நீக்கி ஆட்கொண்டது. எங்களைவிட மேலானவர் என்று பிரபலராயிருக்கிற பிரமருத்ராதி தேவர்கள் இடரையும், மேலுலகென்று பெயர் விளங்கும் அவர்பூமியிலே, எம்மிடரை இங்கு நீக்கியருளியதுபோலவே அவர் துயரையும் அங்கே நீக்கி அவரையும் எம்போல் ஆட்கொள்பவனே. ஆக பலமற்றவரோடு, பலமுள்ளவராகப் பிரபலமாகப் பேசப்படுபவரோடு வாசியற எல்லோரையும் துன்பு துடைத்து அடிமை கொள்பவனே!

"செம்மடல் .....கிடந்தாய்"

கடவுள் என்ற சொல்லுக்கு எண்ணிலாத விளக்கங்கள் கூறப்படுகின்றன. ஏனெனில் அவர் எண்ணிறந்த வகைகளில் வெளிப்படுகிறார்.
—மகாத்மா காந்தி.

பசியரின் திருமேனியிலே கண் கை கால் வாய் இவைசிவந்துதோன்ற நீ கிடந்தது போன்று தாமரை மலர்களை ஆங்காங்கே மடல் விரித்துத் தன் பச்சை இலைப் பரப்போடு மிளிரும் நீர்நிலைகளையுடைய திருப்புளிங்குடியில் பள்ளிகொண்டவனே.

"........கண் கை கால்

தூய செய்ய மலர்களாச் சோதிச் செவ்வாய் முகிழதாச்

சாயற் சாமத்திருமேனி தண் பாசடையா தாமரைநீள்

வாசத்தடம் போல் வருவானே"

என்றதும் இவ்வாழ்வார் அனுபவம்தானே.

"நம்முடை.........கூர"

உன்னுடைய அடியவர்கள் உன்னை முகமுகமாகக் காணப்பெற்ற அதிசயத்திலே ஆரவாரம் செய்ய அதுகேட்டு நாங்கள்மகிழ.

"இம்மடவுலகர்.......முகப்பே"

மௌட்யமே நிறைந்த இவ்வுலகத்தார் காண. ஞானியர் உளக்கண்ணுக்கு எளிதில் புலனாகாத நீ இந்த ஞான சூனியரின் ஊனக் கண்ணுக்கும் இலக்காகி அவர்காண எங்கள் கண் வட்டத்திலே ஒருநாள் தங்கமாட்டாயா? தங்கக் கூடாதா?

ஆங்கு இமையவர்க்கு எப்போதும் காண எளியனான நீ இவ்வுலகோர் காண இங்கு ஒரு நாளாகிலும் இருந்து சேவை சாதிக்கலாகாதா?

(தொடரும்)

செய்திகள்

கரூர் : தாந்தோன்றி ஸ்ரீ கல்யாண வெங்கட்ரமண சுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 19-9-60 முதல் 6-10-60 வரை நடைபெறும்.

காஞ்சிபுரம் : ஸ்ரீ ஏகாம்பரநாதர் கோயிலில் இவ்வாண்டு நவராத்திரி விழா 21-9-60 முதல் 28-9-60 வரை நடைபெற்றது. இசையரங்குகளும் சொற்பொழிவும் நடைபெற்றன.

தெ. வ. புத்தூர் : ஸ்ரீ லட்சுமிநாராயணப் பெருமாள் கோயிலில் 9-9-60-ல் சென்னை அற நிலையத்துறை, துணை ஆணையர் திரு. எம். எஸ். சாரங்கபாணி, B. A., B. L. அவர்கள் கர்ப்பக்கிரகம் கட்டும் திருப்பணியை ஆரம்பித்தும், புதுப்பிக்கப்பட்ட பதினாறு கால் முன் மண்டபத்தைத் திறந்தும் வைத்தார்கள். அதுபோது கடலூர் உதவி ஆணையர் திரு. இரா அ. வரதராசன், B. A., அவர்களும் கலந்துகொண்டார்கள்.

நன்னிலம் வட்டம் : திருத்தலையூர் பாலேசுவரசுவாமி கோயிலின் திருப்பணி முடிந்து 8—9—60ல் குடமுழுக்குப் பெருவிழா நடைபெற்றது. அரசாங்க நிதியிலிருந்து ரூ. 2,000 நன்கொடையாகப் பெற்று திரு. M. D. தியாகராஜப்பிள்ளை M.L.A. அவர்கள் தலைமையில் திருப்பணி செய்து முடிக்கப்பெற்றது. ஆணையர், தஞ்சைத் துணை ஆணையர், நாகை உதவி ஆணையர் பார்வையிட்டனர்.

கோடாலிகருப்பூர் : இராமநாராயணப்பெருமாள் கோயிலில் அஷ்டபந்தன மகாசம்புரோட்சணம் 23—8—60ல் ஆரம்பிக்கப்பட்டு 26—8—70ல் நிறைவேறியது.

சென்னை-தங்கசாலைத் தெரு காமாட்சியம்பாள் ஏகாம்பரேசுவரர் கோயிலில் 30-9-60 வெள்ளிக்கிழமை மாலை 7 மணிக்கு அறநிலையத்துறை ஆணையர் திரு. A. உத்தண்டராமன் I. A. S. அவர்கள் பரஞ்சோதி முனிவர் திருவிளையாடல் புராண விரிவுரையைத் துவக்கி வைப்பார்கள். பின் ஒவ்வொரு திங்கள், வெள்ளிக்கிழமைகளில் மாலை 6-30க்கு கயப்பாக்கம் திரு. சோமசுந்தரம் செட்டியார் அவர்களால் தொடர்ந்து திருவிளையாடல் புராண விரிவுரையாற்றப்படும்.

திருக்கோயில் நிர்வாகத்தினர் பணியாளருக்கு ஓர் அறிக்கை

பொருள்: திருக்கோயில்கள்-மண்டபங்கள்-சிலைகள்-விமானம்-வாகனம்-சுவர்கள்-தூண்கள் - உட்புறம் வெளிப்புறம் சுற்றுப்புறம் முதலியவைகளைத் தூய்மையாக வைத்துக்கொள்ளுதல்-அறிக்கை.

திருக்கோயில்களில் உட்புறங்கள், சுற்றுப்புறங்கள் அங்கு உபயோகத்திலிருக்கும் விளக்குகள், பாத்திரங்கள், சிலைகள், அணிகள், ஆடைகள் இன்ன பிறவற்றைத் தூய்மையாக வைத்துக்கொள்ளவேண்டியதின் அவசியத்தைப் பற்றியும், ஆலய நிர்வாகத்தின் பிற முக்கிய கூறுகளைப் பற்றியும், நிர்வாக அதிகாரிகளுக்குச் சுற்றறிக்கைகள் வாயிலாகவும், கோயில்களைப் பார்வையிடும் போது நேரில் சொல்லியும், அடிக்கடி வற்புறுத்தப்பட்டிருந்த போதிலும் சில இடங்களில் நிர்வாக அதிகாரத்திலுள்ளவர்கள் அந்தக் காரியங்களில் இன்னும் போதிய கவனம் செலுத்தாமலிருக்கிறார்கள். ஆகையால், மறுமுறையும் எச்சரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டு, இவ்வறிக்கையின்மூலம் மறுபடியும் அவர்களுடைய முக்கிய கடமைகளை அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவரப் படுகிறது.

1. திருக்கோயில்களின் சுற்றுப் புறங்களைத் தூய்மையாகவும், அழகாகவும், காண்பவர் உள்ளத்தைக் கவரும் வண்ணம் வைத்துக் கொள்வது தலையாய கடமை ஆகும் வழியே செல்வோருக்கும், கோயிலினுட் சென்று கடவுளை வழிபட்டுச் செல்லவேண்டும் என்ற எண்ணம் வரத்தக்க விதத்தில் கோயில்களை நிர்வகிக்க வேண்டும். கடவுட்டன்மையும் தூய்மையும் ஒன்றே. கடவுட்டன்மைக்கு அடுத்தது தூய்மை என்பது யாவருமறிந்த ஆங்கிலப் பழமொழி. சுத்தம் சுகம் தரும். கடவுளின் தன்மையைத் தூய்மையினால்தான் வெளிப்படுத்த இயலும். தூய்மையே கவர்ச்சியும் தெய்வீக உணர்ச்சியுமளிக்கும். கோயிலின் உள்துறை ஊழியர்களானாலும் பிற ஊழியர்களானாலும், மதப்பற்றை ஊட்டக்கூடிய விதத்தில் கோயிலைக் கவர்ச்சியாக வைத்துக்கொள்வதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும்.

2. கோயிலின் உட்புறங்கள் வெளிப்புறங்கள்

கோயிலும் அதைச்சார்ந்த இடங்களும், காண்போரைக் கவரும் வண்ணம் மிகவும் தூய்மையாகவும் அழகாகவும் இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் கோயிலுக்குள் செல்லவேண்டும் என்று வழிபாட்டுக்கு வரும் அடியார்கள் எண்ணத்தைத் தூண்டும். இவ்வகையில் வெற்றிகாண வேண்டுமாயின் கோயில்களின் அழகையும் புனிதத்தன்மையையும் கெடுக்கக் கூடிய கடைகள், கறைபடிந்த சுவர்கள், தூண்கள், செதுக்கு வேலைப்பாடுகளில் உள்ள மங்கிய வண்ணப்பூச்சுகள். ஆகியவற்றை முதலில் நீக்கவேண்டும். மற்றும் பிரகாரங்களில் காணப்படும் கழிநீர்த் தேக்கங்கள் செடி கொடி முள் புதர்கள் முதலியவைகளை அப்புறப்படுத்த வேண்டும். கோயிலைச் சார்ந்த இடங்களிலோ அல்லது வாயிற்படியிலோ பிச்சைக்காரர்களை அனுமதிக்கக் கூடாது. பொதுவாகக் கோபுரங்களில் தங்கும் புறா, கழுகு, வௌவால் போன்ற பறவைகளைத் துரத்துவதற்குத் தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும். "அகத்தின் அழகு முகத்தில்" என்பதைப்போல், கோயில் முன் தோற்றம் கோயிலின் உள்ளிருக்கும் புனிதத் தன்மையை உணர்த்துவதாக இருக்க வேண்டும்.

எவன் ஒருவன் எண்ணம் தூய்மையாக இருக்கிறதோ அவனைக் கடவுள் காப்பாற்றுவார்

—மகாத்மா காந்தி.

3. பூச்செடிகள்

கோயிலைச் சுற்றியுள்ள பாகத்தில் தகுதியான இடங்களில் நந்தவனங்கள் அமைத்து மலர்ச்செடி கொடிகளைப் பயிரிடலாம். கோயிலின் உள்ளேயும் நந்தவனங்களிலும் நன்முறையில் வளர்க்கப்படும் செடி கொடிகளிலிருந்தே வழிபாட்டுக்குத் தேவையான மலர்களை எடுத்துப் பயன்படுத்த வேண்டும்.

நீர் நிலைகள்

மூர்த்தி தலம் தீர்த்தம் என்ற வரிசையில் கோயிலின் புனிதத்தன்மைக்கு முக்கிய காரணம் தீர்த்தம்தான். திருவிழாக்களிலும் தீர்த்தவாரிதான் அருளினைக் குறிக்கும். கோயிலிலுள்ள குளம், கிணறு, தொட்டிகள் முதலிய நீர்நிலைகளைத் தூய்மையாக வைத்துக் கொள்ளுதல் வேண்டும். நீர்ச்செடிகளையும் நீர்ப்பாசிகளையும் இம்பீரியல் இரசாயன நிறுவனத்தார் தயார் செய்யும் "2-4டி" மருந்துகளைக் கொண்டு களைந்தெறிந்து அழித்தொழிக்க வேண்டும். ("2-4D Chemical available with M/s. Imperial Chmical Industries Ltd., Madras) நீர்நிலைகளில் இருக்கும் வேண்டப்படாத வண்டல் முதலியவைகளை அப்புறப்படுத்தி, மணலைக்கொட்டி, தண்ணீர் தூய்மையாக இருக்கும் வண்ணம் செய்தல் வேண்டும். தேவைப்படும் காலங்களில் சுகாதாரத் துறையினரின் (Health Department) ஆலோசனைகளைப் பெற்றுத் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும். வசதியுள்ள கோயில்களில் கிணற்றுநீரைக் குழாய்மூலம் மின்சார யந்திர சாதனத்தால் உயர்ந்த இடத்தில் தொட்டிகளில் தேக்கி மக்களுக்குப் பயன்படும்படி செய்யலாம்.

4. செடி-கொடி புதர்களை நீக்குதல்

கோயில் கோபுரங்கள், மண்டபங்கள், மதிற்சுவர்கள் முதலியவைகளில் அப்போதைக்கப்போது போதிய கவனம் செலுத்தாத காரணத்தால் அவைகளுக்குக் கேடு பயக்கும் விதத்தில் வளர்ந்திருக்கும், செடிகொடிகளைக் களைந்தெறியவேண்டும். கோபுரங்கள் முதலிய இடங்களில் செடிகொடிகள் வளர்ந்துள்ள கோயில்கள் இன்னும் பல காணப்படுவது வருத்தத்திற்குரியதாகும். அர்ச்சகர்களும் இதரசிப்பந்திகளும் நிர்வாகத்தினரும் இவ்விஷயத்தில் ஏதும் கவனம் செலுத்தாமலும் தங்களுக்குச் சம்பந்தமில்லாதது போலவும் இருக்கிறார்கள். இம்மாதிரியான செடிகள் வளர்ந்திருப்பது சமய சூழ்நிலையைக் (Religious atmosphere) கெடுப்பதாகும் என்பதை அனைவரும் உணர்தல் வேண்டும். தேவையற்ற இடத்திலும் கட்டிடங்களுக்குக் கேடு விளைவிக்கும் வகையிலும் வளர்ந்திருக்கும் செடிகளைக் களைவது கோயிலில் சம்பந்தப்பட்ட அனைவருடைய முக்கிய கடமையாகும். இதற்காக 'அட்லாஸ்-மரக்கொல்லி' ("Atlas-Tree killer") முதலிய மருந்துகளையும் பயன்படுத்தலாம். இம்மருந்தைப் பயன்படுத்தும்போது செடிகளின் ஒவ்வொரு கிளையிலும் ஒரு அங்குல அளவு மேற்பட்டையை உரித்து அதில் துணிசுற்றி மருந்தை ஊற்றவேண்டும். செடிகளை ஒடித்துவிட்டுத் தண்டில் ஊற்றக்கூடாது. அதனால் பயன் இல்லை சுண்ணாம்பை வைத்து மூடினால் அது உரமாகி வெட்டப்பட்ட செடி முன்னிலும் நன்றாக வளர்ந்துவிடும். கோயில் தூண்கள், சுவர்கள் முதலியவற்றில் எண்ணெய் முதலியவற்றைத் துடைப்பது கூடாது. அம்மாதிரியான கறைகள் இருக்கவும் கூடாது. அதற்குத் தனியே கறுப்பு அல்லது சிவப்புத் துணிகள் உபயோகிக்கப்படவேண்டும். தலயாத்திரை செய்பவர்கள் (Pilgrims) வாழைப்பழம், அழுகிய அல்லது கெட்டுப்போன பொருள்கள், பழங்கள், பயன்படுத்தப்பட்ட மலர்கள், பிரசாத இலைகள், காகிதங்கள் முதலியவைகளைக் கோயிலில் கண்ட இடங்களில் போடுவதற்கு அனுமதிக்கக் கூடாது. மேலும், தாம்பூல எச்சிலையும் கோயில் தரை, சுவர் முதலிய இடங்களில் துப்புவதற்கு அனுமதிக்கக் கூடாது. எச்சில் துப்புவதற்கும் வேண்டாப் பொருள்கள் போடுவதற்கும் தொட்டிகள் முதலியன அமைத்து வசதிகள் செய்து கொடுக்கலாம். கோயில் பிரகாரப் பாதைகளுக்கு கடப்பைக் கற்களிடுதல் அல்லது சிமிட்டி பாதையோ அமைக்கலாம். அபிஷேகத்தண்ணீர் கோயிலுக்குள் தங்காமல் வெளியே போகும்படி அமைக்க வேண்டும். அதற்கு வசதியில்லாவிடில் அபிஷேகத் தொட்டியிலிருந்து நீரை அன்றாடம் வாளிகளிலோ

குறையிரந்து வேண்டல், வழிபாடு, பிரார்த்தனை இவைகள் மூடநம்பிக்கைகள் அல்ல.

—மகாத்மா காந்தி.

இதர பாத்திரங்களிலோ முகந்து வெளியே கொண்டு கொட்டவேண்டும். தொட்டிகளை யும் அடிக்கடி சுத்தம் செய்யவேண்டும். மண் டபங்களில் தேங்காய் உடைத்தல், தேங்காய் நீர் ஊற்றுதல் முதலியவைகளால் தரையை அசுத்தப்படுத்தக் கூடாது. அடிக்கடி சுத் தம் செய்யக்கூடிய குறிப்பிட்ட இடத்தில் தேங்காய் உடைப்பதற்கு வசதிகள் செய்து தரலாம். தேங்காய்த் தண்ணீர் ஊற்றுவதற் குத் தொட்டியோ, பாத்திரமோ உபயோகிக்க லாம். கர்ப்பக்கிரகத்தில் பூசை செய்பவர் களும் தேங்காய்த் தண்ணீரைக் கீழே கொட் டாமல் ஒரு பெரிய பாத்திரத்தில் விழும்படி செய்யவேண்டும். அபிஷேகமான பின் நன் ருகச் சுத்தம் செய்த பிறகே அலங்காரம் செய்தல் வேண்டும். பிரசாதம் முதலியவை களை உண்ட பின் சுவர், தூண்கள், தரை முதலிய இடங்களில் கைகளைத்துடைப்பதற்கு எவரையும் அனுமதிக்கக் கூடாது. பொது வாக அர்ச்சகர்கள், பரிசாரகர்கள், விளக்குப் போடுவோர் முதலியவர்கள் எண்ணெய் முத லியவைகளைச் சுவர்களில் துடைப்பது; திரை களில் துடைப்பது, குப்பை முதலியவைகளை சன்னல் மற்றும் திறந்த வெளிகளில் எறியும் பழக்கம் உள்ளவர்களாக இருக்கிறார்கள். இவைகள் தவிர்க்கப்படவேண்டும். சாதாரண மாக கோயில் உபயோகத்திற்கு வண்ணத் துணிகளை கொடுக்கப்படவேண்டும்.

5. இடைஞ்சல்களைத் தடுத்தல்

தொழுநோய் உடையவர்களையும் தொத்துநோய் கொண்டவர்களையும் கோயில் களில் பணிசெய்ய அனுமதிக்கக்கூடாது. கோயில் பிரகாரங்களில் சரியான கவனிப்பு இல்லாததால், கோயிலின் புனிதத் தன்மைக் கும் நோக்கத்திற்கும் ஊறு பயக்கும் விதத் தில் விரும்பத்தகாத காரியங்கள் நிகழ்கின் றன. இம்மாதிரியான விரும்பத்தகாத காரி யங்களைத் தக்க நடவடிக்கை எடுத்தும் வசதி கள் செய்து கொடுத்தும் தவிர்க்கவேண்டும். துவஜத்தம்பம், முன்மண்டபம், கோபுர வாயில், மற்றும் மண்டபங்கள், பிரகாரங்கள் முதலிய இடங்களில் உட்கார்ந்துகொண்டு சீட்டு விளையாடுதல், புகை பிடித்தல் முதலிய வைகளையும் ஒழுங்கற்ற முறையில் கோயி லுக்கு வருபவர்களுக்கு இடர்ப்பாடு உண் டாக்கும் விதத்தில் தூங்குவது போன்றவை களையும் எக்காரணம் கொண்டும் அனுமதித் தல் கூடாது. அப்படிப்பட்ட காரியங்கள் செய்பவர்களை கோயிலைவிட்டு அகற்றவேண் டும். இப்படிப்பட்டவர்களைக் கோயிலில் அனுமதிப்பது பொதுவாக வழிபாட்டிற்கு வரும் மக்களின் ஆர்வத்தையும் சிறப்பாகப் பெண்களின் ஊக்கத்தையும் குறைப்பதற்கு ஏதுவாகும்.

6. விளக்குகள்

கோயிலுக்கு வரும் பாதைகளில் போது மான விளக்குகள் போடப்பட்டிருக்கவேண் டும். கோயில்களின் நிதி நிலைமைக்கேற்ப, மின் பேர் ஒளி விளக்குகள் (flood lights) கோபுரங்களிலும், விமானங்களில் பாதரச (Mercury) விளக்குகளும், மண்டபங்களி லும் குழாய் விளக்குகள் முதலியவைகள் ஏற் பாடு செய்யலாம். கர்ப்பக் கிரகங்களிலும், திருவாயில்களிலும் நட்சத்திர மாலைகள் ஏற் பாடு செய்யலாம். அவைகளை அடிக்கடி துடைத்து, எப்போதும் தூய்மையாக இருக் கும்படி வைத்துக்கொள்ளவேண்டும். கர்ப்பக் கிரக, அர்த்தமண்டப, மகாமண்டப வாயில் களில் சரவிளக்குகள் அமைக்கும்போது அவைகளிலுள்ள எண்ணெய் கீழே விழாதபடி செப்பு அல்லது பித்தளை தகடுகள் அமைக்க வேண்டும். தலைக்குமேல் உச்சிப்பாகத்தி லிருக்கும் விளக்குகளுக்கும் அடியில் தகடு அமைக்கவேண்டியது மிகவும் அவசியம். இல்லாவிட்டால் உள்ளே போகிறவர்கள் வரு கிறவர்கள் தலையிலும் உடலிலும் எண்ணெய் சொட்டும்.

சில கோயில்களில், அர்த்தமண்டபத்தி லும், கர்ப்பக்கிரகத்திலும், மின் விளக்குகள் போடப்பட்டிருக்கின்றன. மற்றும் சில இடங் களில், மூலவர்மீது ஒளி படும்படியாகவும் விளக்குகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. எக் காரணம் கொண்டும் மின்சார விளக்குகளை மேற்சொன்ன இடங்களில் அமைக்கக் கூடாது. கூடுமானவரை அர்த்தமண்டப வாயிலருகே மங்கலான விளக்குகளையே ஏற் பாடு செய்யவேண்டும். கோயில் மூலைகளி

ஒருவனுக்கும் அவனைப் படைத்த கடவுளுக்கும் மட்டுமே தெரியும் பொருள்கள் சில உள்ளன; அவைகளைத் தெளிவாகப் பிறருக்கு எடுத்துச்சொல்ல முடியாது —மகாத்மா காந்தி.

லும், வழிகளிலும் பேரொளி விளக்குகளை அமைக்கலாம்.

திருவிழாக் காலங்களில், உற்சவ மூர்த்திகளின் வீதி உலாவின் போதும், இரதம், விமானம், கேடகம், வாகனங்கள் முதலியவைகளின் மீதும் மின்விளக்குகள் அமைப்பதைத் தவிர்க்கவேண்டும்.

7. சிற்பக்கலைகள்

கோயில்களில் சிற்பக்கலை வேலைப்பாட்டையும், கல்வெட்டுக்களையும், ஒக்சேல் அசிட் குழம்பு(Oxalic Acid Solution) கொண்டு சுத்தப்படுத்தி, கலையழகை நன்கு பாதுகாக்க வேண்டும். கோயில் கற்சுவர்களுக்கும் கல் தூண்களுக்கும் எக்காரணம் கொண்டும் வெள்ளையடித்தல் கூடாது. வெள்ளையடித்திருப்பின் உடனே கழுவி தூய்மைப்படுத்த வேண்டும். சிற்ப நுணுக்க வேலைப்பாடுகள் நன்கு தெரியும்படி அழகாகவும் வைத்துக் கொள்ளவேண்டும். ஒவ்வொரு ஆண்டும் திருவிழாவிற்கு முன் தூய்மைப்படுத்துதல் சிறந்தது. கூடுமான இடங்களில், கல்வெட்டுக்களின் பிரதிகள் எடுத்துப் பத்திரப்படுத்திதல் அவசியமாகும். சில இடங்களில் கல்வெட்டுக்கள் உள்ள கற்கள் சுவர்களில் மட்டுமின்றி படிக்கட்டுகளிலும் திண்ணைகளிலும் பொருத்தப்பட்டிருக்கின்றன. அவைகளை எடுத்து உரிய இடத்தில் வைத்தல் வேண்டும். திருப்பணி முதலிய பழுது பார்த்தல் நடைபெறும் போதும், கல்வெட்டுக்கள், சிற்பக்கலை வேலைப்பாடுகளில் முக்கிய கவனம் செலுத்தி அவைகளைப் பாதுகாத்து உரிய இடத்தில் பொருத்துதல் வேண்டும்.

8. வாகனங்கள்

வாகனங்கள், பல்லக்குகள் முதலியவைகளை கவனிப்பற்றிருக்கும் மூலைகளில் வைத்தல் கூடாது. இவைகளும் புனிதத்தன்மை உடையவை என்று கருதப்படுவதால், அடிக்கடி சுத்தம் செய்து பழுதுபார்த்து வாகன அறைகளில் வைததிருத்தல் வேண்டும்.

9. கர்ப்பக்கிரகங்கள்

மூலஸ்தானங்களைத் தூய்மையாக வைத்துக்கொள்ளுவதற்குப் போதிய கவனமும் நடவடிக்கையும் எடுத்தல் வேண்டும். எலி, பாச்சை, பூச்சி முதலியவைகள் இல்லாவண்ணம் பார்த்துக்கொள்ளல் வேண்டும். கூடுமானவரை தரைக்குக் கல்லிடலாம். கற்பூரத்தைக் கொளுத்திக் கண்ட இடங்களில் போடக்கூடாது. கூடுமானவரை கட்டிக்கற்பூரத்தையே உபயோகிக்கவேண்டும். நவக்கிரகங்கள் சந்நிதி முதலிய இடங்களில் மக்கள் கற்பூரம் கொளுத்தி வழிபடும் பழக்கத்தை அநுமதிக்கக்கூடாது. அப்படி நிறுத்த முடியாவிட்டால் அதற்கெனத் தனியாக ஒரு நெருப்புச்சட்டி அல்லது கல்தொட்டி ஒரு பீடத்தின்மேல் வைத்து அதிலேயே கற்பூரம் கொளுத்தும்படி ஏற்பாடு செய்யவேண்டும்.

10. தீர்த்த பாத்திரம்— தீர்த்தம்-பிரசாதம்

பிரசாதம், தீர்த்தம் முதலியவைகள் வைக்கப் பெறும் பாத்திரங்கள் தனி முக்கியத்துவம் உடையவையானதால் அவைகளைத் தூய்மையாகவும் கவர்ச்சிகரமாகவும் வைத்துக்கொள்ளவேண்டும். மக்களால் விரும்பி ரசிக்கும் விதத்தில் சுவையோடும் மிக்க கவனத்தோடும் தீர்த்தம், பிரசாதம் முதலியவை செய்து கொடுத்தல் வேண்டும். நைவேத்யத்தை வைத்திருக்கும் பாத்திரம் சுத்தமாகவும், மூடியுடனும் இருக்கவேண்டும். அழுக்கு வஸ்திரங்களால் மூடும் பழக்கத்தை அறவே ஒழிக்கவேண்டும். ஒவ்வொரு மூர்த்திக்கும் தனித்தனியே சிறிய பாத்திரங்களில் நைவேத்யம் காட்டல்வேண்டும். ஒரே பாத்திரத்தை எல்லா மூர்த்திகளுக்கும் காட்டும் பழக்கத்தை மாற்றிவிடவேண்டும்.

11. புளிக்காப்பு-மாக்காப்பு

மூல மூர்த்திகள், உற்சவ மூர்த்திகள், துவாரபாலகர்கள், நந்தி முதலிய சிலைகளுக்குப் புளிக்காப்பு மாக்காப்பு இட்டு வாரத்திற்கு ஒரு முறையாவது தூய்மைப்படுத்தி சிறப்பாக அலங்காரம் செய்தல் வேண்டும். நகைகள் முதலியவைகளையும் தூய்மைப்படுத்தி, ஒளிவிடும் வண்ணம் வைத்துக் கொள்ளவேண்டும். கோயிலுக்கு வழிபாட்டிற்கு வருபவர்கள் கண்டு விரும்பிப் பார்த்துக்கொண்டே இருக்கும் விதத்தில் சிறந்த

காமக்குரோதாதிகளையுடைய மனத்தைத் தூய்மைப்படுத்த பிரார்த்தனையே தவறாத சிறந்த வழி
— மகாத்மா காந்தி

முறையில் மலர்மாலைகள் அணிவித்தல் வேண்டும். கேந்திப்பூ (துலுக்க சாமந்தி) முதலிய புஷ்பங்களை உபயோகிக்கக்கூடாது. அவை கைவிரல்களையும் நகங்களையும் பாதிப்பதுடன் தலைகளில் பேன் முதலியவை பெருகுவதற்குக் காரணமாயுள்ளன.

நறுமணம் தரக்கூடிய வத்திகள், கற்பூரம் முதலியவைகளை அடிக்கடி கொளுத்தி பூச்சி முதலியவைகள் சேராவண்ணம் செய்தல்வேண்டும். வசம்பு கலந்த சந்தனத்தை உபயோகித்தால் கரப்பான் பூச்சிகள் தொல்லையிருக்காது. பசுஞ்சாணம், கோசலம் முதலியவைகளையும் உபயோகிக்கலாம். மூர்த்திகளுக்கு உபயோகிக்கும் ஆடைகளை நன்றாய்த் துவைத்து உலர்த்தி ஒவ்வொரு நாளும் சுத்தமான உடைகளையே அணிவிக்கவேண்டும். தோரணங்கள், பிரார்த்தனைத் தொட்டில்கள் முதலியவற்றை வாரம் ஒரு முறையாவது அப்போதைக்கப்போது அப்புறப்படுத்தி விடவேண்டும். நூலாம்படை முதலியவைகளையும் உடனுக்குடனே அப்புறப்படுத்திவிடவேண்டும்.

12. அர்ச்சகர் முதலியோர்

அர்ச்சகர்களும், மற்ற உள்துறைப் பணியாட்களும் சுத்தமாகவும், சமயக்குறிகள் சின்னங்களுடனும், நல்ல சுத்தமான உடைகள் அணிந்தவர்களாகவும் இருத்தல் அவசியம். அவர்கள், நற்குணம், நன்னடத்தை, இன்சொல், வேண்டுபவர்களுக்கு இன்முகம்காட்டி உதவி செய்தல் முதலிய நல்ல பழக்க வழக்கங்கள் உடையவர்களாக இருக்கவேண்டும். அவர்களுடைய தகுதிக்கு இழுக்கை உண்டாக்கும் இன்னாச்சொல், அனாவசியமாகச் சத்தம் செய்தல், வழிபடுவோருடன் வாதம் செய்தல் முதலியவற்றைத் தவிர்க்கவேண்டும். அர்ச்சகர்கள், புரோகிதர்கள், ஓதுவார்கள் முதலியோர், மூலவரைப்பற்றியும், தலவரலாறுபற்றியும், வழிபாட்டிற்கு வருபவர்களுக்கு விளக்கிச் சொல்லக்கூடியவர்களாக இருத்தல்வேண்டும். ஓதுவார்கள் பாடும் பாடல்களின் விளக்கத்தைச் சுருக்கமாகச் சொல்வது நல்லது., இன்ன சந்தர்ப்பத்தில் இன்னாரால் பாடப்பெற்றது, என்ன கருத்துடையது என்பன விளக்கப்படவேண்டும். நிர்வாக அதிகாரத்தில் உள்ளவர்கள் இச்சுற்றறிக்கையில் கண்டவைகளை நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டும். இவைகளை, அர்ச்சகர்களும் மற்றும் பணியாளர்களும் பின்பற்றுகிறார்களா என்பதைக் கண்டிப்பாகக் கவனித்தல்வேண்டும். இவைகளைப்பற்றி பின்பற்றவோ நடைமுறைக்குக் கொண்டுவரவோ முயற்சி செய்யாமல் அலட்சிய மனப்பான்மையுடனும் அசிரத்தையுடனும் இருப்பவர்களின் பேரில் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். அதற்கு மக்களும் பூரண ஆதரவளிப்பார்கள் என்பதை இறைபணியில் ஈடுபட்டுள்ள அனைவரும் உணரவேண்டும். இவ்விஷயங்களில் காணப்பெறும் முன்னேற்றங்களை மனதிற்கொண்டுதான் அறங்காவலர்களின் தகுதியும், இறைபணியாளர்களின் பதவி உயர்வும் ஆராயப்படும்.

இறைபணியாளர்கள் மாற்றம்

திரு. M. ஆதிமூலம், இறைபணியாளர், ஸ்ரீ பாபவிநாசசாமி கோயில், ஸ்ரீ அகத்தியர் ஆசிரம அற நிலையம் விக்கிரமசிங்கபுரம், அம்பா சமுத்திரம் வட்டம் மாற்றப்பட்டு ஸ்ரீ விசுவநாதசாமி கோயில், சிவகாசி, ஸ்ரீ நின்ற நாராயண பெருமாள் கோயில் ஸ்ரீ கருநெல்லிநாதசாமி கோயில், திருத்தங்கல் ஆகிய கோயில்களுக்கு இறைபணியாளராக நியமிக்கப்பட்டு இருக்கிறார்.

விடுதிபெற்றிருக்கிற திரு. வி. கருப்பண்ண பிள்ளை, மன்னார்குடி வட்டம் கோட்டூர் கொழுந்தீசுவர சுவாமி கோயில் இறைபணியாளராக விடுதிபெற்றுச் செல்லும் திரு. L. வெங்கடராமனுக்குப் பதிலாக வேலை பார்ப்பார்.

ஆணையர் கலந்துகொண்ட நிகழ்ச்சிகள்

29-8-60	பழனி...தண்டாயுதபாணி சுவாமி கோயில் ...	குடமுழுக்குப் பெருவிழா.
30-8-60	திருப்பரங்குன்றம்—சுப்பிரமணியசுவாமி கோயில்,	தலபுராண வெளியீட்டு விழா.
31-8-60	மடவார்விளாகம்—வைத்தியநாதசாமி கோயில், திரு. S. S. இராமசாமி அவர்களால் ரூ. 275-க்கு வெள்ளிக்கரணை ஏலத்தில் எடுக்கப்பட்டது.	திருமுறைக்கோயில் நிறுவுதல் திருப்பணி துவக்கு விழா.
,,	ஸ்ரீ வில்லிபுத்தூர்—திரு அண்ணுமலை, ஸ்ரீனிவாசப் ,, பெருமாள்கோயில்.	படிக்கட்டுமண்டபத் திறப்புவிழா.
,,	திருத்தங்கல்—நின்றநாராயணப் பெருமாள் கோயில்.	திருப்பணி துவக்கு விழா.
,,	சிவகாசி—விசுவநாதசுவாமி கோயில் ...	திருமுறைக் கோயில் நிறுவுதல், 63 நாயன்மார்கள் பிரதிஷ்டை கால்கோள் விழா.
1-9-60	தென்கரை—திருமூலநாதசுவாமி கோயில் ...	திருப்பணி துவக்கு விழா.
2-9-60	நாச்சியார் கோயில்—ஸ்ரீனிவாசப்பெருமாள் கோயில்.	குடமுழுக்குப் பெருவிழா.
,,	திருச்சேறை—சென்னியப்பர் கோயில் ...	,,
11-9-60	மலைக்கோட்டை—தாயுமானசுவாமி கோயில் ...	திருச்சிராப்பள்ளி பன்னிரு திருமுறை மன்ற மாநாடு.
,,	பூவாளூர்—திருமூலநாதசுவாமி கோயில் ...	திருமுறைக் கோயில் நிறுவுதல். கச்சியப்ப சுவாமிகள் பாயிரக் கல்வெட்டுத் திறப்பு விழா.
12-9-60	கோயில் திருமாகாளம்—மாகாளநாதசுவாமி கோயில்.	குடமுழுக்குப் பெருவிழா.
,,	திருக்கண்ணபுரம்—சௌரிராஜப் பெருமாள் கோயில்	மண்டபத்திறப்பு விழா. திருப்பணித் துவக்கு விழா—ஏனன்குடி திரு. இராதாகிருஷ்ண நாயுடு அவர்களால் வெள்ளிக்கரணை ரூ. 411/-க்கு ஏலத்தில் எடுக்கப்பட்டது. திரு. அரங்கராமானுஜலுநாயுடுஅவர்களால் ரூ. 111/ க்கு கத்தரிக்கோல் ஏலத்தில் எடுக்கப்பட்டது.
,,	விஜயபுரம்—ரேணுகாதேவி அம்மன் கோயில் ...	திருப்பணி துவக்கு விழா.
,,	சிக்கல்—நவநீதீசுவரர் கோயில் ...	மண்டலாபிஷேக விழா.
13-9-60	திருமருகல்—இரத்தினகிரீசுவரர் கோயில் ...	இறைபணியாளர்கள் இல்லங்கள் திறப்பு விழா.
14-9-60	நீடாமங்கலம்—காசிவிசுவநாதசுவாமி கோயில் ...	திருமறைக் கோயில் நிறுவுதல், திருப்பணி துவக்கு விழா.
,,	நீடாமங்கலம்—சந்தானராமசாமி கோயில் ...	திருப்பணி துவக்கு விழா. திரு. அண்ணுமலை தென்கொண்டார் அவர்களால் ரூ. 275/-க்கு வெள்ளிக்கரணை ஏலத்தில் எடுக்கப்பட்டது.
15-9-60	ஆக்கூர்—தான்தோன்றீசுவரர் கோயில் ...	குடமுழுக்குப் பெருவிழா.
,,	தேவூர்—தேவபுரீசுவரர் கோயில் ...	நவக்கிரகங்கள் நிறுவுதல் விழா.
,,	திருநாரையூர்—இராமநாதசுவாமி கோயில் ...	திருப்பணி துவக்கு விழா.



தேவாரத் திருமுறை ஓதுதல்

PUBLIC LIBRARY
MADRAS

தேவாரத் திருமுறை ஓதுதல்



வேதபாராயணம்

CONNEMARA PUBLIC LIBRARY
1 OCT 1960
MADRAS

காவடிகள்

சென்ன பட்டணத்துச் சட்டம்

MADRAS ACT.

"The translation has not been authorised or accepted as authentic by the Government." Translation by Sri. A. S GNANASAMBANDAM, Translation Dept.

சென்னைச் சட்ட மன்றத்தின் அடியிற் கண்ட சட்டம் 1959-ம் ஆண்டு நவம்பர் மாதம் 19-ம் தேதியன்று ராஷ்டிரபதி அவர்களின் அங்கீகாரம் பெற்று, அனைவர்க்கும் தெரியும் பொருட்டு இதனால் வெளியிடப்படுகிறது.

Act No. 22 of 1959.

1950-ம் ஆண்டு 22-வது சட்டம்

AN ACT TO AMEND AND CONSOLIDATE THE LAW RELATING TO THE ADMINISTRATION AND GOVERNANCE OF HINDU RELIGIOUS AND CHARITABLE INSTIUTIONS AND ENDOWMENTS IN THE STATE OF MADRAS.

சென்னை மாநிலத்திலுள்ள இந்து அற நிலையங்களையும் கட்டளைகளையும் நிர்வகித்தல், முறைப்படுத்துதல் சம்பந்தமான சட்டத்தைத் திருத்துவதற்கும் ஒருங்கு திரட்டுவதற்குமான சட்டம்.

சென்னை மாநிலத்திலுள்ள இந்து அற நிலையங்களையும் கட்டளைகளையும்நிர்வகித்தல் முறைப்படுத்துதல் சம்பந்தமான சட்டத்தைத் திருத்துவதும், ஒருங்கு திரட்டுவதும் பொருத்தமாயிருக்கிறபடியால்,

இந்தியக் குடியரசின் பத்தாவது ஆண்டில் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாக:-

அத்தியாயம் I

பீடிகை

1. **சுருங்கிய பெயரும், வரம்பும், பயன்படுதலும், தொடக்கமும்.**—(1) இச் சட்டம் 1959-ம் ஆண்டு இந்து அற நிலையப் பாதுகாப்புச் சட்டம் எனப் பெயர் பெறும்.

(2) இது சென்னை மாநிலம் முழுவதிலும் வியாபிக்கும்.

(3) இது சட்டப்படி இணைக்கப்பட்டவையும், சட்டப்படி இணைக்கப்படாதவையுமான தேவஸ்வாம்களை நீங்கலாக இந்துமதம் சம்பந்தமான பொது நிலையங்கள், கட்டளைகள் அனைவற்றிற்கும் பயன்படும்.

விளக்கம்.—இந்த உட்பிரிவில், இந்து மத சம்பந்தமான பொது நிலையங்களும் கட்டளைகளும் என்பதில் ஜைன அறநிலையங்களும் கட்டளைகளும் அடங்கமாட்டா.

(4) (a). (i) 92-வது பிரிவின் (4) உட்பிரிவு, ஆலோசனைக் கமிட்டிகளுக்கும் அவற்றின் உப கமிட்டிகளுக்கும் சம்பந்தப்பட்டவரையில் அவ்வுட்பிரிவின் ஷரத்துக்களும்,

(ii) 116-வது பிரிவில் கண்ட (2) உட்பிரிவைச் சேர்த்த (xxi) பகுதியின் ஷரத்துக்களும்

நீங்கலாக இச் சட்டத்தின் ஷரத்துக்கள் சென்னை அரசாங்கத்தார் விளம்பரம் மூலம் நியமிக்கக்கூடிய தேதியன்று அமுலுக்கு வரத்தொடங்கும்; மேலும், வெவ்வேறு பிரதேசங்களுக்காகவும், இச் சட்டத்தின் வெவ்வேறு ஷரத்துக்களுக்காகவும் வெவ்வேறு தேதிகள் நியமிக்கப்படலாம்.

(b) 92-வது பிரிவின் (4) உட்பிரிவு ஆலோசனைக் கமிட்டிகளுக்கும் அவற்றின் உப கமிட்டிகளுக்கும் சம்பந்தப்படுகிற வரையில் அந்த உட்பிரிவினுடையவும் 116-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவில் கண்ட (xxi) (b) பகுதியினுடையவுமான

ஷரத்துக்கள் 1958-ம் ஆண்டு நவம்பர் மாதம் 28-ம் தேதியன்று அமுலுக்கு வந்துவிட்டிருப்பதாகக் கருதப்படவேண்டும்.

2. ஜைன அற நிலையங்களுக்கும் கட்டளைகளுக்கும் இச் சட்டத்தை விஸ்தரிப்பதற்குரிய அதிகாரம்.—(1) அரசாங்கத்தார், விளம்பரம் பிரசுரித்து அதன்மூலமாய், இந்தச் சட்டத்தில் கண்ட ஷரத்துக்கள் எல்லாவற்றையுமாகிலும் அவைகளில் யாதொன்றையாகிலும் அச் சட்டத்தின்படிச் செய்யப்பட்ட எவையேனும் விதிகளில் கண்ட ஷரத்துக்கள் எல்லாவற்றையுமாகிலும் அவைகளில் யாதொன்றையாகிலும் ஜைன பொது அற நிலையங்களுக்கும் கட்டளைகளுக்கும் விஸ்தரிக்கலாம்; அதன்பேரில் அந்தப்படி விஸ்தரிக்கப்பட்ட ஷரத்துக்கள், ஷை நிலையங்களுக்கும் கட்டளைகளுக்கும் பயன்படும்:

ஆனல், அப்படிப்பட்ட விளம்பரம் பிறப்பிப்பதற்குமுன் அரசாங்கத்தார் தாங்கள் அப்படிச் செய்ய உத்தேசித்திருப்பதை ஸெய்ன்ட் ஜார்ஜ் கோட்டை கெஜட்டில் ஓர் அறிக்கை பிரசுரித்து, சம்பந்தப்பட்ட நிலையங்களிலும் கட்டளைகளிலும் பற்றுள்ள நபர்கள் அப்படிப்பட்ட விளம்பரம் ஏன் பிறப்பிக்கக்கூடாதென்பதற்குக் காரணம் காட்டுவதற்காக, அவர்களுக்கு ஷை அறிக்கை வெளியிடப்பட்ட தேதியிலிருந்து இரண்டு மாதத்துக்குக் குறையாத ஒரு கால அளவை நிச்சயித்து, அவர்கள் அனுப்பும் எவையேனும் ஆட்சேபணைகளைப் பற்றி ஆலோசிக்கவேண்டும்.

(2) இச் சட்டத்தில் 'இந்து' என்னும் சொல் வரும் இடங்களில் எல்லாம் (1) உட்பிரிவின்படி இச் சட்டத்தின் ஷரத்துகள் எந்த ஜைன பொது அற நிலையங்களுக்கும் கட்டளைகளுக்கும் வியாபிக்கப்படுகிறதோ அவைகள் சம்பந்தமாக, சந்தர்ப்பம் வேறு பொருள் குறித்தாலன்றி மற்றப்படி, 'ஜைனர்' என்னும் பொருளில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

3. அறக் கட்டளைகளுக்கு ஷை சட்டத்தைப் பயன்படுத்துவதற்குரிய அதிகாரம்.—(1) இந்து மதம் அல்லது ஜைன மதத்தைச் சேர்ந்ததும், தரும சம்பந்தமானதுமான யாதொரு பொதுக் கட்டளை சரியாக நிர்வகிக்கப்படவில்லையென்று நம்ப அரசாங்கத்தாருக்குக் காரணம் இருந்து, அப்படிப்பட்ட அறக்கட்டளையின் நிர்வாகம் நன்கு நடைபெறுவதற்காக அத்தகைய அறக் கட்டளையின் விவகாரங்களை ஆணையர் விசாரணை நடத்தி அல்லது இது விஷயமாய் அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட யாதொரு உத்தியோகஸ்தரால் விசாரணை நடத்துவித்து இந்தச் சட்டம், அதன்படிச் செய்யப்பட்ட விதிகள், இவற்றின் ஷரத்துக்கள் எல்லாவற்றையுமாகிலும் அவைகளில் எதையாகிலும் அதற்குப் பயன்படும்படிச் செய்வது அவசியமா என அறிவிக்கும்படி அவர்கள் கட்டளையிடலாம்;

(2) ஆணையர் அல்லது (1) உட்பிரிவின்படி அவரால் அதிகாரம் அளிக்கப்பெற்ற ஓர் அதிகாரி, ஷை உட்பிரிவின்படி விசாரணை நடத்துகையில் சாட்சிகள் ஆஜராவதை வலியுறுத்தும் ஷை அறக் கட்டளையைச் சேர்ந்த அல்லது அதன் வசமிருக்கும் புத்தகங்கள், கணக்குகள், தஸ்தாவேஜுகள், ஈடுகள், ரொக்கம், இதர சொத்துக்கள் இவைகளைக் கொண்டுவருவதைக் கட்டாயப்படுத்தும் காரியங்களுக்காக 1908-ம் ஆண்டு சிவில் வழக்குமுறைச் சட்டத்தின்படி (1908-ம் ஆண்டு 5-வது சட்டம்) ஒரு சிவில் கோட்டுக்குள்ள சகல அதிகாரங்களையும் உடையவராவார்; மேலும், அவர் சாட்சியத்தைப் பதிவு செய்வது, கட்சிக்காரர்களை விசாரிப்பது சம்பந்தமாக, ஷை சட்டத்தின்படிப் பயன்படத்தக்க நடைமுறையைப் பின்பற்ற வேண்டும்;

(3). (1) உட்பிரிவின்படி அனுப்பப்பட்ட ஆணையரின் அறிக்கையை ஆலோசித்த பிறகு, யாதொரு அறக் கட்டளை சரியாக நிர்வகிக்கப்படவில்லையோ, அப்படிப்பட்ட அறக் கட்டளையின் நிர்வாகம் நன்ருக நடைபெறுவதற்காக, இந்தச்சட்டம், அதன்படிச் செய்யப்பட்ட விதிகள் இவற்றின் ஷரத்துக்கள் எல்லாவற்றையுமாகிலும் அவைகளில் எதையாகிலும் அதற்குப் பயன்படுத்தும்படிச் செய்வது அவசியமென்று அரசாங்கத்தார் சந்தேகமறத் தெரிந்து கொண்டால், அவர்கள் விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாக ஷை ஷரத்துக்களைத் தரும சம்பந்தமான ஷை கட்டளைக்குப் பயன்படுத்தும்படிச் செய்யலாம்; அதன்மேல் அவ்வாறு

பயன்படுத்தும்படிச் செய்யப்பட்ட ஷெ ஷரத்துக்கள் ஷெ அறக் கட்டளைக்கு அது ஒரு குறிப்பிட்ட கட்டளையாக இருந்தாற் போலவே பயன்படும்:

ஆனால், அப்படிப்பட்ட விளம்பரம் ஒன்றைப் பிறப்பிப்பதற்குமுன், அரசாங்கத்தார், தாங்கள் அப்படிச் செய்ய உத்தேசித்திருப்பதையும் தாங்கள் எடுத்துக்கொள்ள உத்தேசித்திருக்கும் நடவடிக்கைக்கான காரணங்களையும் குறிப்பிட்டு, செய்ன்ட் ஜார்ஜ் கோட்டை கெஜட்டில் ஓர் அறிக்கை பிரசுரித்து அதன் மூலமாக, சம்பந்தப்பட்ட கட்டளையில் பற்றுள்ளவர்கள் அப்படிப்பட்ட விளம்பரம் ஏன் பிறப்பிக்கக்கூடாதென்பதற்குக் காரணம் காட்டுவதற்காக, ஷெ அறிக்கை பிரசுரிக்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டு மாதத்துக்குக் குறையாத ஒரு கால அளவை நிச்சயித்து, அவர்கள் சொல்லும் எவையேனும் ஆட்சேபனைகளைப்பற்றி ஆலோசிக்க வேண்டும்;

(4) இப் பிரிவில் அடங்கியுள்ளதெதற்கும் பாதகமில்லாமலே, யாதொரு இந்து அல்லது ஜைன மதத்தைச் சேர்ந்த பொது அறக் கட்டளையின் நிர்வாகத்தில் செயலாற்றுகிற யாதொரு தர்மகர்த்தரால் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தர்மகர்த்தாக்கள் இருந்தால் அவர்களால் அல்லது அவர்களில் பெரும்பான்மையோரால், விண்ணப்பம் செய்யும் தர்மகர்த்தா அல்லது தர்மகர்த்தாக்களின் சம்மதத்துடன் விண்ணப்பம் செய்துகொண்டதன்பேரில், அரசாங்கத்தார், இச் சட்டத்தினுடையவும் அதன்படிச் செய்யப்பட்ட விதிகளினுடையவும் சகல ஷரத்துக்களையும் அல்லது இச் சட்டத்தினுடையவும், அதன்படிச் செய்யப்பட்ட விதிகளினுடையவும் ஷரத்துக்களில் எவற்றையேனும் அத்தகைய கட்டளைக்கு விஸ்தரிக்கலாம். அதனால் அவ்வாறு விஸ்தரிக்கப்பட்ட ஷரத்துக்கள் ஷெ கட்டளைக்கு அது ஒரு குறிப்பிட்ட கட்டளையாயிருந்தாற்போலவே பயன்படவேண்டும்.

4. **விலக்குகள்**:-அரசாங்கத்தார் விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாக, யாதொரு அற நிலையத்துக்கேனும், கட்டளைக்கேனும், இச்சட்டத்தின் ஷரத்துக்களின் யாதொன்றினுடைய அல்லது இச் சட்டத்தின்படிச் செய்யப்பட்ட எவையேனும் விதிகள் பயன்படுவதினின்றும் விலக்கு அளிக்கலாம்:

ஆனால், அத்தகைய விலக்கு மாற்றப்படுவதற்கு அல்லது ரத்து செய்யப்படுவதற்கு முன்னால், பாதிக்கப்பட்டவருக்கு அத்தகைய் மாற்றம் அல்லது ரத்துக்கு எதிராகக் காரணம் காட்டுவதற்கு அவருக்கு ஒரு நியாயமான வாய்ப்பை அளிக்கவேண்டும்.

5. **சில சட்டங்கள் இந்து அற நிலையங்களுக்கும் கட்டளைகளுக்கும் பயன்படக்கூடாதென்பது**:—அடியிற் கண்ட சட்டங்கள், இந்து அற நிலையங்களுக்கும் கட்டளைகளுக்கும் பயன்படுவது நின்றுபோகும்; அவை யாவன:—

(a) கட்டளைகளையும் அரசைச் சேர்தலையும் குறித்த 1817-ம் ஆண்டு சென்னப்பட்டணத்து ரெகுலேஷன் (சென்னை 1817-ம் ஆண்டு 7-வது ரெகுலேஷன்);

(b) மத சம்பந்தமான கட்டளைகளைக் குறித்த 1863-ம் ஆண்டுச் சட்டம் (1863-ம் ஆண்டு 20-வது மத்தியச் சட்டம்);

(c) அறக்கட்டளைகளைக் குறித்த 1890-ம் ஆண்டுச் சட்டம் (1890-ம் ஆண்டு 6-வது மத்தியச் சட்டம்);

(d) தரும சம்பந்தமானவையும், மத சம்பந்தமானவையுமான டிரஸ்டுகளைக் குறித்த 1920-ம் ஆண்டுச் சட்டம் (1920-ம் ஆண்டு 14-வது மத்தியச் சட்டம்);

(e) 1908-ம் ஆண்டு சிவில் வழக்கு முறைச் சட்டம் என்னும் சிவில் விவகார விசாரணைச் சட்டத்தின் (1908-ம் ஆண்டு 5-வது சட்டம்) 92-வது 93-வது பிரிவுகள்.

6. **அர்த்தம்**:—இந்தச் சட்டத்தில் சந்தர்ப்பம் வேறு பொருள் குறித்தாலன்றி மற்றப்படி—

(1) "ஆலோசனைக் குழு" என்பது, அரசாங்கத்தாரால் 7-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்படி அமைக்கப்பட்ட குழு எனப் பொருள்படும்;

(2) எந்தக் கோயில் அல்லது குறிப்பிட்ட கட்டளை சம்பந்தமாகவாகிலும் "பிராந்தியக்குழு" என்பது, இச் சட்டத்தின்படி

அமைக்கப்பட்டதும் அந்தக் கோயில் அல்லது கட்டளை விஷயமாய் அதிகாரங்களைச் செலுத்துகிறதும் கடமைகளைச் செய்கிறது மான பிராந்தியக் குழு எனப்பொருள்படும்:

ஆனால், மாற்றப்பட்ட பிரதேசம் சம்பந்தமாக, 1950-ம் ஆண்டு திருவாங்கூர்-கொச்சி இந்து அற நிலையங்கள் சட்டத்தின் (திருவாங்கூர்-கொச்சி 1950-ம் ஆண்டு 15-வது சட்டத்தின்) II-ம் அத்தியாயத்தின் கீழ் கன்னியாகுமரி தேவஸ்தான சபையானது, அமைக்கப்படும் தேதிவரை பிராந்தியக் குழுவின் அதிகாரங்களையும் கடமைகளையும் அரசாங்கத்தார் குறிப்பிடக்கூடிய அதிகார சபை அல்லது அதிகாரி செலுத்தவேண்டும் அல்லது நிறைவேற்றவேண்டும், ஷை சபை அமைக்கப்பட்ட பிறகு, அது பிராந்தியக் குழுவாகக் கருதப்படவேண்டும்.

(3) "உதவி - ஆணையர்" என்பது, 8-வது பிரிவின்படி நியமிக்கப்பட்ட யாதொரு உதவி ஆணையர் எனப் பொருள்படும்;

(4) "சபை" என்பது, 1926-ம் ஆண்டு சென்னை இந்து அற நிலைய பாதுகாப்புச் சட்டத்தில் (சென்னை 1927-ம் ஆண்டு 2-வது சட்டம்) கண்ட 10-வது பிரிவின்படி அமைக்கப்பட்ட சபை எனப் பொருள்படும்.

(5) "அறக் கட்டளை" என்பது, தங்குவதற்கான விடுதிகள், சத்திரங்கள், பாடசாலைகள், பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள், ஏழைகளுக்கு உணவு அளிக்கும் விடுதிகள், கல்வி வைத்திய உதவி பொதுஜன சுகாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கான நிலையங்கள் ஆகிய இவைகளைப்போல் இந்து சமூகத்துக்காவது, ஜைன சமூகத்துக்காவது, அதன் யாதொரு பிரிவுக்காவது பயன்படக் கூடிய நோக்கங்களையேனும் அதேமாதிரி தன்மையுள்ள இதர நோக்கங்களையேனும் ஆதரிப்பதற்காக அல்லது பராமரித்து வருவதற்காக அந்தச் சமூகம் அல்லது பிரிவின் நன்மைக்காகக் கொடுக்கப்பட்ட அல்லது நிதியேற்பாடு செய்யப்பட்ட அல்லது அந்தச் சமூகத்தாரால் அல்லது பிரிவினரால் உரிமையை முன்னிட்டு உபயோகிக்கப்பட்ட சகல சொத்தும் என்று பொருள்படும்; மேலும், அதில் சம்பந்தப்பட்ட நிலையம் என்பதும் அடங்கும்;

(6) "ஆணையர்" என்பது, 9-வது பிரிவின்படி நியமிக்கப்பட்ட ஆணையர் எனப் பொருள்படும்;

(7) "நீதிமன்றம்" என்பது—

(i) ராஜதானிப் பட்டணத்துக்குள்ளிருக்கிற ஒரு மடம் அல்லது கோயில் சம்பந்தமாக, சென்னை நகர ஸிவில் கோர்ட் என்றும்,

(ii) வேறு இடங்களிலிருக்கிற ஒரு மடம் அல்லது கோயில் சம்பந்தமாக, அம் மடம் அல்லது கோயிலிருக்கிற பிரதேசம் விஷயமாய் விசாரணை அதிகாரமுள்ள ஸபார்டினேட் ஜட்ஜ் நீதிமன்றம் என்றும் அல்லது அப்படிப்பட்ட நீதிமன்றம் எதுவும் இராவிட்டால், அத்தகைய விசாரணை அதிகாரமுள்ள மாவட்ட நீதிமன்றமென்றும்,

(iii) ஒரு மடம் அல்லது கோயிலைச் சேர்ந்த குறிப்பிட்ட ஒரு கட்டளை சம்பந்தமாக, அம் மடம் அல்லது கோயில் விஷயமாய் மேற்சொன்னபடி விசாரணை அதிகாரம் உடையதாயிருந்திருக்கக் கூடிய நீதிமன்றமென்றும்,

(iv) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மடங்களை அல்லது கோயில்களைச் சேர்ந்த குறிப்பிட்ட ஒரு கட்டளை சம்பந்தமாக, அப்படிப்பட்ட இரண்டு மடங்கள் அல்லது கோயில்களிலாவது இரண்டுக்கு மேற்பட்ட மடங்கள் அல்லது கோயில்களிலாவது ஒன்றின் விஷயமாய் மேற்சொன்னபடி விசாரணை அதிகாரம் உடையதாயிருந்திருக்கக்கூடிய ஒரு நீதிமன்றம் என்றும் பொருள்படும்;

(8) "துணை ஆணையர்" என்பது, 9-வது பிரிவின்படி நியமிக்கப்பட்ட யாதொரு துணை ஆணையர் என்று பொருள்படும்;

(9) 'நிர்வாக அலுவலர்" என்பது, ஒரு மத சம்பந்தமான நிலையத்தையொட்டிய நிர்வாகம் சம்பந்தமாய், இச் சட்டத்தினால் அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதிகளினால் அல்லது இச் சட்டத்தின்படி அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதிகளின்படி அல்லது இச் சட்டத்தின்படி நிச்சயிக்கப்பட்ட அல்லது நிச்சயிக்கப்பட்டதாகக் கருதப்பட்ட யாதொரு திட்டத்தினால் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட அத்தகைய அதிகாரங்

களைச் செலுத்தவும் அத்தகைய கடமைகளை நிறைவேற்றவும் நியமிக்கப்படுகிற ஒரு நபர் எனப் பொருள்படும் ;

(10) "அரசாங்கம்" என்பது, இந்த மாநில அரசாங்கம் எனப் பொருள்படும் ;

(11) "பரம்பரைத் தர்மகர்த்தா" என்பது, மத சம்பந்தமான யாதொரு நிலயத்தைச் சேர்ந்த தர்மகர்த்தா உத்தியோகத்துக்கு வருபவர் பரம்பரை உரிமை மூலமாக மேற்படி உத்தியோகத்துக்கு வரவேண்டியதாகவாவது, அந்தப்படி உத்தியோகத்துக்கு வருவதைக் குறித்து மாமூலை அனுசரித்து ஒழுங்கு ஏற்படுத்தப்பட்டாவது அந்தப்படி உத்தியோகத்துக்கு வருவது விஷயமாய் நிலயத்தை ஏற்படுத்தியவர் பிரத்தியேகமான ஏற்பாடு செய்தாவது உள்ள உரிமை வழியாய் தர்மகர்த்தா உத்தியோகத்துக்கு வருவது சம்பந்தமான யாதொரு திட்டம் செலாவணியாய்க் கொண்டிருக்கிற வரையிலே, மேடி அற நிலயத்தின் தர்மகர்த்தா என்று பொருள் படும் ;

(12) "சட்டப்படி இணைக்கப்பட்ட தேவஸ்வாம்கள்" என்பது, 1950-ம் ஆண்டு திருவாங்கூர்-கொச்சி இந்து அற நிலயங்கள் சட்டத்தின் (திருவாங்கூர்-கொச்சி, 1950-ம் ஆண்டு 15-வது சட்டம்) I-ம் ஷெட்யூலில் குறிப்பிட்டுள்ள தேவஸ்வாம்கள் எனப் பொருள்படும் ;

(13) "மடம்" என்பது, சொத்துக்கள் உடையதாயிருப்பதும், எந்த நபரின் பதவிக்கு வருவது, நிலயம் ஏற்படுத்தியவரின் கட்டளையை அனுசரித்தும் அல்லது மாமூலை அனுசரித்தும் முறைப்படுத்தப்படுகிறதோ,

(i) மதபோதனை செய்வதில் ஈடுபடுவது அல்லது பாரமார்த்திகத் தொண்டு செய்வது யாருடைய கடமையோ,

(ii) ஒரு சிஷ்ய கூட்டத்துக்கு யார் பாரமார்த்திகத் தலைமை வகிக்கிறாரோ அல்லது வகிப்பதாகச் சொல்லுகிறாரோ
அந்த நபரை முதன்மையாகக்கொண்ட ஒரு இந்து மத ஸ்தாபனமெனப் பொருள்படும். மேலும் அதில், மேடி நிலயத்தைச் சேர்ந்ததாய், மத சம்பந்தமான வழிபாடு அல்லது போதனை நடக்கும் இடங்கள் என்பதும் அடங்கும் ;

விளக்கம்:—ஒரு மடத்தின் தலைமை இடம் இந்த மாநிலத்திற்கு வெளியேயிருந்து, ஆனால், அம் மடத்தின் சொத்துக்கள் இந்த மாநிலத்திற்குள்ளிருக்கிற பட்சத்திலே, மேடி மடத்தின் இந்த மாநிலத்திற்குள்ளிருக்கிற சொத்துக்கள் சம்பந்தப்பட்டவரையில், அம் மடம் விஷயமாய் இச் சட்டத்தில் கண்ட ஷரத்துக்களின்படி மேல் விசாரணை அதிகாரம் செலுத்தப்படவேண்டும்.

(14) "பரம்பரையாய் ஏற்படாத தர்மகர்த்தா" என்பது, பரம்பரையான தர்மகர்த்தா அல்லாத ஒரு தர்மகர்த்தா எனப் பொருள்படும் ;

(15) "பற்றுள்ளவராயிருப்பவர்" என்பது—

(a) ஒரு மடத்தின் விஷயத்தில், அந்த மடத்தின் யாதொரு சீடர் அல்லது அந்த மடம் எந்த மதக்கொள்கையைச் சேர்ந்ததோ அந்தக் கொள்கையை உடைய யாதொருவர் என்றும்,

(b) ஒரு கோயிலின் விஷயத்தில், அந்தக் கோயிலில் வழிபாடு அல்லது சேவை நடக்கும்போது வந்திருக்க உரிமையுள்ளவராயிருக்கிற அல்லது வழக்கமாய் வந்துகொண்டிருக்கிற, அல்லது அங்கே ஏதேனும் தானம் கொடுக்கப்படும்போது அதில் ஒரு பாகத்தைப் பெற்றுப் பலனடைய உரிமையுள்ளவராயிருக்கிற அல்லது வழக்கமாய்ப் பலனடைந்து வருகிற யாதொருவர் என்றும்,

(c) ஒரு குறிப்பிட்ட கட்டளையின் விஷயத்தில், சேவை அல்லது தருமம் நடக்கும்போது வந்திருக்க உரிமையுள்ளவராயிருக்கிற அல்லது பழக்கமாய் வந்துகொண்டிருக்கிற அல்லது தருமத்தின் ஒரு பாகத்தைப் பெற்றுப் பலனடைய உரிமையுள்ளவராயிருக்கிற அல்லது வழக்கமாய்ப் பலனடைந்து வருகிற யாதொரு நபர் என்றும் பொருள்படும் ;

(16) "மத சம்பந்தமான தருமம்" என்பது யாதொரு இந்து உற்சவமோ, மதத் தன்மை வாய்ந்த சடங்கோ, யாதொரு மடம் அல்லது கோயிலுக்குச் சம்பந்தப்பட்டிருந்தாலும் சரி, இராவிட்டாலும் சரி, அந்த உற்சவம் அல்லது சடங்குடன் இயல்புடைய

யாதொரு பொதுத்தருமம் என்று பொருள் படும் ;

(17) "மத சம்பந்தமான கட்டளை" அல்லது "கட்டளை" என்பது, மடங்கள் அல்லது கோயில்களுக்குச் சொந்தமான சகல சொத்தும் என்ருவது, மடங்கள் அல்லது கோயில்களுக்கு ஆதரவாயிருப்பதற்காகக் கொடுக்கப்பட்ட அல்லது நிதியேற்பாடு செய்யப்பட்ட சகல சொத்தும் என்ருவது, அல்லது அவைகளுக்குச் சம்பந்தப்பட்டதும் பொதுத் தன்மை வாய்ந்ததுமான எந்தச் சேவை அல்லது தருமம் அல்லது வேறு எந்த மத சம்பந்தமான தருமமாகிலும் நடப்பதற்காகக் கொடுக்கப்பட்ட அல்லது நிதியேற்பாடு செய்யப்பட்ட சகல சொத்தும் என்ருவது பொருள்படும் ; மேலும் அதில், சம்பந்தப்பட்ட நிலையம் என்பதும், அந்த நிலையத்தின் வளவு என்பதும் கூட அடங்கும்; ஆனல், அதில் யாதொரு மத ஸ்தாபனத்தின் அர்ச்சகருக்கோ சேவை செய்பவருக்கோ இதர வேலைக்காரருக்கோ தானமாக அவருக்கென்றே கொடுக்கப்படும் சொத்துதானம் என்பது அடங்காது ;

விளக்கம் (1):—யாதொரு அறநிலையத்தில் அல்லது அந்த நிலையத்துக்குச் சம்பந்தப்பட்ட யாதொரு சேவை அல்லது தருமத்தை நடத்துவதற்காக ஷை நிலையத்தின் யாதொரு அர்ச்சகருக்காவது சேவை செய்பவருக்காவது இதர வேலையாட்களுக்காவது கொடுக்கப்பட்ட எந்த இனமாகிலும் அர்ச்சகருக்கென்றே அல்லது சேவை செய்பவருக்கென்றே அல்லது இதர வேலையாட்களுக்கென்றே கொடுக்கப்பட்ட தானமாகக் கருதப்படமாட்டாது ; ஆனல், அது யாதொரு மத சம்பந்தமான கட்டளை என்றே கருதப்படும்.

விளக்கம் (2) ;—யாதொரு அறநிலையத்துக்குச் சொந்தமான அல்லது அதற்கு ஆதரவாயிருப்பதற்காகக் கொடுக்கப்பட்ட அல்லது நிதி ஏற்பாடு செய்யப்பட்ட அல்லது யாதொரு அறநிலையத்துக்குச் சம்பந்தப்பட்டதும் பொதுத் தன்மை வாய்ந்ததுமான யாதொரு சேவை அல்லது தருமத்தை அல்லது வேறு யாதொரு மத தருமத்தை நடத்துவதற்காகக் கொடுக்கப்பட்ட அல்லது நிதியேற்பாடு செய்யப்பட்ட சகல சொத்தும் இந்தப் பொருளின் தாற்பரியப்படி யாதொரு "அறக் கட்டளை" அல்லது "கட்டளை" என்று கருதப்படும்; இச் சட்டம் செலவாணியாகத் தொடங்கிய தேதிக்கு முன்போ பிறகோ, அந்த அறநிலையம் இராமற்போய் விட்டதென்பதையாவது மத வழிபாடு அல்லது போதனை நடக்கும் இடமாக உபயோகிக்கப்படாமற் போய்விட்டதென்பதையாவது ஷை சேவை அல்லது தருமம் நடத்தப்படாமற் போய்விட்டதென்பதையாவது கவனிக்க வேண்டியதில்லை.

ஆனல், கால வரையரைச் சட்டம் பிரயோகப்படுவதனல், 1951-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30-ம் தேதிக்கு முன் எந்த நபரிடமாவது நிலைபெற்றிருந்த எந்தச் சொத்து விஷயமாகிலும் இந்த விளக்கம் பயன்படுவதாகக் கருதப்படமாட்டாது.

(18) "அறநிலையம்" என்பது, யாதொரு மடமென்ருவது, யாதொரு கோயில் என்ருவது யாதொரு குறிப்பிட்ட கட்டளை என்ருவது பொருள்படும் ;

(19) "குறிப்பிட்ட கட்டளை" என்பது, யாதொரு கோயிலிலாவது மடத்திலாவது குறிப்பிட்ட யாதொரு சேவையாகிலும் தருமத்தையாகிலும் நடத்துவதற்காக அல்லது வேறு யாதொரு மத தருமத்தை நடத்துவதற்காக நிதியேற்பாடு செய்து வைக்கப்பட்ட யாதொரு சொத்து அல்லது பணம் என்று பொருள்படும் ; ஆனல், (17) பகுதியைச் சேர்ந்த (1) விளக்கத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறபடியுள்ள ஒரு இனம் அதில் அடங்காது ;

விளக்கம் (1) :—இந்தப் பகுதியில் குறிப்பிட்ட தன்மையுள்ள இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட கட்டளைகளின் நிர்வாகம் ஒரு பொது தர்மகர்த்தாவிடம் நிலைபெற்றிருந்தால் அல்லது இச் சட்டத்தின்படி நிச்சயிக்கப்பட்ட அல்லது நிச்சயிக்கப்பட்டதாகக் கருதப்பட்ட ஒரு பொது திட்டத்தினல் நிர்வகிக்கப்பட்டால் அவைகள் இச் சட்டத்தின் காரியங்களுக்காக ஒரு குறிப்பிட்ட கட்டளையாகப் பொருள் கொள்ளப்பட வேண்டும்.

விளக்கம் (2) :—ஒரு மடத்துக்கு அல்லது கோயிலுக்கு இணைக்கப்பட்ட ஒரு குறிப்

பிட்ட கட்டளை சிறிது மட்டும் மாநிலத்துக்குள்ளும், சிறிது மட்டும் மாநிலத்திற்கு வெளியேயும் இருந்தால் இச் சட்டத்தின் ஷரத்துக்களை அனுசரித்து மாநிலத்துக்குள்ளிருக்கிற குறிப்பிட்ட கட்டளையின் பாகத்தின்மீது மேல்விசாரணை செலுத்தப்பட வேண்டும்.

(20) "கோயில்" என்பது, பொது ஜனங்களால் மத வழிபாடு செய்கிற இடமாக உபயோகிக்கப்பட்டும், மத வழிபாடு செய்கிற பொது இடமாக இந்து ஜன சமூகத்துக்காவது அதில் ஒரு பிரிவினருக்காவது அவர்களின் பிரயோசனத்துக்காவது அர்ப்பணம் செய்யப்பட்டும் அல்லது அவர்களால் உரிமையை முன்னிட்டும் உபயோகிக்கப்பட்டும் வருகிற யாதொரு இடத்துக்கு எந்தப் பெயர் வழங்கினாலுஞ் சரி அந்த இடம் என்று பொருள்படும்.

விளக்கம் :—மாநிலத்தின் வெளியே இருக்கிற ஒரு கோயிலின் சொத்துக்கள் மாநிலத்துக்குள் இருந்தால், அக் கோயிலுக்குச் சொந்தமாக மாநிலத்துக்குள் இருக்கும் சொத்துக்கள் சம்பந்தப்பட்டவரையில் இச் சட்டத்தின் ஷரத்துக்களை யனுசரித்து ஷெ கோயிலின் மேல்விசாரணை செலுத்தப்பட வேண்டும்.

(21) "மாற்றலான பிரதேசம்" என்பது, கன்னியாகுமரி மாவட்டமும், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள செங்கோட்டைத் தாலுகாவும் எனப் பொருள்படும்.

(22) "தருமகர்த்தா" என்பது, எந்த நபரிடம் அல்லது சபையினிடம் ஓர் அறநிலையத்தின் பரிபாலனம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறதோ அந்த நபருக்கு அல்லது சபைக்கு என்ன பெயர் வழங்கினாலும் சரி அந்த நபர் அல்லது சபை என்று பொருள்படும்; மேலும் எந்த நபர் அல்லது சபையாகிலும் ஒரு தர்ம கர்த்தாவாகயிருந்தால் எப்படி உத்தரவாதியாயிருப்பாரோ அல்லது உத்தரவாதியாயிருக்குமோ அப்படி உத்தரவாதியாயிருக்கும் அந்த நபர் அல்லது சபை என்பதும் அதில் அடங்கும்.

(23) "சட்டப்படி இணைக்கப்படாத தேவஸ்வாம்கள் என்பது," திருவாங்கூர்—கொச்சி மத ஸ்தாபனங்களைக் குறித்த 1950ம் ஆண்டுச் சட்டத்தின் (திருவாங்கூர்–கொச்சி, 1950-ம் ஆண்டு 15-வது சட்டம்) II-வது ஷெட்யூலில் குறிப்பிட்டுள்ள தேவஸ்வாம்கள் எனப் பொருள்படும்.

7. ஆலோசனைக் குழுவின் அமைப்பு :—(1) அரசாங்கத்தார் சென்னை மாநிலத்திற்காக, ஆலோசனைக்குழு என அழைக்கப்படும் ஒரு குழுவை அமைக்கலாம். அதில் அடியிற் கண்டவர்கள் அடங்குவார்கள் :—

(i) இச் சட்டத்தின் பரிபாலனத்திற்குப் பொறுப்பு வகிக்கும் அமைச்சர் அவர்கள் உத்தியோக முறைமையில் தலைவராயிருக்க வேண்டும்,

(ii) இந்து அறநிலையப் பாதுகாப்புத் துறையின் பொறுப்பு வகிக்கும் அரசாங்கச் செயலாளர்—உத்தியோக முறைமையில்,

(iii) ஆணையர் உத்தியோக முறைமையில்,

(iv) அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்டவர்களும் இந்து மதத்தைப் பின்பற்றுபவர்களுமான உத்தியோக முறைமையில்லாத பன்னிருவர்.

(2) (1) உட்பிரிவின் (ii) பகுதியில் குறிப்பிட்டுள்ள அரசாங்கச் செயலாளர், அல்லது அரசாங்கத்தாரால் இது விஷயத்திற்காக அப்போதைக் கப்போது நியமிக்கப்படக்கூடிய இதர அதிகாரி ஆலோசனைக் குழுவின் செயலாளராய் இருக்கவேண்டும்.

(3) (1) உட்பிரிவின் (iv) பகுதியில் குறிப்பிட்டுள்ள அங்கத்தினர்களின் பதவிக்காலம் மூன்று ஆண்டுகள் அல்லது அரசாங்கத்தார் நிச்சயிக்கக்கூடிய அத்தகைய குறுகிய கால அளவாகும்.

(4) ஆலோசனைக் குழுவின் அலுவல்கள் அடியிற்கண்டவையாகும்.

(a) நிர்ணயிக்கக்கூடியபடியுள்ள விஷயங்கள் சம்பந்தமாக அரசாங்கத்தாருக்குச் சிபாரிசுகள் செய்வது, மேலும்,

(b) அரசாங்கத்தார் குழுவினரிடம் குறிப்பிடும் விஷயங்கள் சம்பந்தமாய் அரசாங்கத்தாருக்கு ஆலோசனை கூறுவது.

(5) ஆலோசனைக் குழுவின் அங்கத்தினர்களிடையே ஒரு அபிப்பிராயபேதம் எழுந்தால், வந்திருக்கும் பெரும்பான்மை அங்கத்தினர்களின் தீர்மானமும் வாக்கெடுப்பும் மேலோங்கும்;

ஆனால், அவர்களுடைய அபிப்பிராயம் சமமாக இருந்தால் தலைவருக்கு ஒரு இரண்டாவது அல்லது நிர்ணய வாக்கு ஒன்று உண்டு; அவர் அதைப் பயன்படுத்தலாம்.

(6) (a) (l) உட்பிரிவின் (iv) பகுதியில் குறிப்பிட்டுள்ள ஓர் அங்கத்தினர் எந்த நேரத்திலும், அரசாங்கத்தாருக்கு எழுதிய அறிக்கை கொடுப்பதன் மூலம் தமது பதவியை ராஜிநாமா செய்யலாம்; ஆனால் அவருக்குப்பின் ஒருவரை நியமனம் செய்யும் வரையில் அவர் தொடர்ந்து பதவி வகிக்க வேண்டும்.

(b) (a) பகுதியின்படி ஓர் அங்கத்தினரின் ராஜிநாமாவினால் அல்லது மற்றப்படி உண்டான ஒரு தற்காலிகக் காலி இடம் புதிதாகச் செய்யப்படும் நியமனத்தினால் நிரப்பப்படவேண்டும்.

அத்தியாயம் II

ஆணையரும் மேல் விசாரணை செய்கிற இதர அதிகாரிகளும்

8. இச் சட்டத்தின்படிக்கான அதிகாரிகள்: இச்சட்டத்தின்படி அடியிற்கண்ட வகுப்புகளைச் சேர்ந்த அதிகாரிகளிருக்கவேண்டும்:

(a) ஆணையர்;

(b) துணை ஆணையர்கள்;

(c) உதவி ஆணையர்கள்;

(d) பிராந்தியக் குழுக்கள்.

9. ஆணையர் முதலியவர்களை அரசாங்கத்தார் நியமிக்க வேண்டுமென்பது:-(1) அரசாங்கத்தார் ஆணையரையும் தங்களுக்குத் தகுதியாகத் தோன்றும் எண்ணிக்கையுள்ள துணை ஆணையர்களையும், உதவி ஆணையர்களையும் நியமிக்கவேண்டும்.

(2) (a) சென்னை மாநில உயர்நீதித் துறைப்பணி அல்லது வேறொரு பணியைச் சேர்ந்த அங்கத்தினரை மாற்றுவதன் பேரில் அல்லது நேரடியாக வேலைக்குச் சேர்ப்பதன் பேரில் ஆணையரின் பதவிக்கு நியமனம் செய்யப்படவேண்டும்.

(b) சென்னை நீதித்துறைப்பணி அல்லது யாதொரு இதர பணியைச் சேர்ந்த அங்கத்தினர்களை மாற்றுவதன் பேரில் அல்லது நேரடியாக வேலைக்குச் சேர்த்துக்கொள்வதன் பேரில் துணை ஆணையரின் பதவிக்கு நியமனம் செய்யப்படவேண்டும்.

(c) ஆணையரின் பதவி சென்னை மாநில உயர்நீதித் துறைப்பணி அங்கத்தினர் ஒருவரால் வகிக்கப்படாத விஷயத்தில், ஒரு துணை ஆணையர் பதவியாவது ஷெ சென்னை மாநில நீதித்துறைப்பணி அங்கத்தினர் வகிக்கவேண்டும்.

10. ஆணையர் முதலானோர் இந்துக்களாயிருக்க வேண்டுமென்பது:—ஆணையரும், பிரதி துணை ஆணையரும் அல்லது ஒவ்வொரு உதவி ஆணையரும், பிரதி துணை ஆணையரும் அல்லது ஒவ்வொரு உதவி ஆணையரும், இச்சட்டத்தின் காரியங்களை நிறைவேற்றுவதற்காக நியமிக்கப்பட்ட மற்ற உத்தியோகஸ்தர் அல்லது ஊழியக்காரர் ஒவ்வொருவரும், யாரால் நியமிக்கப்பட்டிருந்தாலும் சரி, இந்து மதத்தைத் தழுவியிருக்கிற ஒருவராயிருக்க வேண்டும்; மேலும், அவர் அம் மதத்தைத் தழுவியிராமற் போய்விட்டால், அவர் அவ் வுத்தியோகம் வகிப்பது நின்று போகும்.

11. ஆணையர் தனி நபர்கொண்ட கார்ப்பொரேஷனாக இருக்க வேண்டுமென்பது:—ஆணையர், ஒரு தனி நபர் கொண்ட கார்ப்பொரேஷனாக இருக்கவேண்டும். மேலும், அவருக்கு நிரந்தரமான வாரிசுரிமையும், பொதுவான முத்திரையும் இருப்பதோடு, ஷெ கார்ப்பொரேஷன் பெயரில் வழக்குத் தொடரவும் தொடரப்பெறவும் வேண்டும்.

12. ஆணையர் முதலியவர்கள் அரசாங்கத்தின் ஊழியர்களாயிருக்க வேண்டுமென்பது:—(1) இச்சட்டத்தின் காரியங்களுக்காக, வேலைக்கமர்த்தப்பட்ட ஆணையர், துணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள், (அறநிலையங்களின் நிர்வாக அதிகாரிகள் உள்ளிட்ட), இதர உத்தியோகஸ்தர்கள், ஊழியர்கள் இவர்கள் அரசாங்கத்தாரின் ஊழியர்களாயிருக்கவேண்டும்.

(தொடரும்)

கும்பாபிஷேகம் ஒரு பகுதி

யாக சாலையின் ஒரு பகுதி

யாகசாலைப் பொருள்களில்
வாழைப்பழம், தேங்காய்ப் பகுதி



தங்கரதத்தில் சுவாமி எழுந்தருளல்

COLOMBO PUBLIC LIBRARY 1 OCT 1968